# கலப்பை

KALAPPAI 53 களம் 14 ஏர் 1 ஆடி 2007 2.50



Thirteen Years in service of Tamil

தமிழ்ப் பணியில் பதின்மூன்று வருடங்கள்

அவுஸ்திரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்

Tamil Competition - Australian Society of Graduate Tamils

## அகில அவுஸ்திரேலிய
## தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2007

# பரிசளிப்பு விழா அழைப்பிதழ்

இந்த வருடம் தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் அவுஸ்திரேலிய - நியூசிலாந்தின் 7 மாநகர்களில் திறம்பட நடைபெற்றுள்ளன. ஒவ்வொரு மாநகரிலும் ஒவ்வொரு போட்டியிலும் மிகச் சிறந்த 3 மாணவர்கள் சிட்னியில் தேசிய நிலைப் போட்டியில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டார்கள். இத்தேசிய நிலையில் ஒவ்வொரு போட்டியில் மிகச் சிறந்த போட்டியாளருக்கு தங்கப்பதக்கம் பரிசாக 30.09.07 அன்று சிட்னியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் வழங்கப்பட்டன. அத்துடன் பல நூற்றுக்கணக்கான பரிசுகளும் சான்றிதழ்களும் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

இந்தப் போட்டிகளில் பங்குபற்றிப் பரிசுகள் பெற்ற மாணவர்களின் பெயர்ப் பட்டியல் கலப்பையின் அடுத்த இதழில் வெளிவரவிருக்கின்றது. இந்த விபரங்களை எமது இணையத்தள முகவரியிலும் (www.kalappai.org) பெற்றுக் கொள்ளலாம்.

இந்தப் போட்டிகளில் பங்குபற்றித் தமது திறமைகளைக் காண்பித்த மாணவர்கள் அனைவருக்கும் எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிர்வாகம்
தமிழ் ஊக்குவிப்புக் குழு 2007

தொடர்புகளுக்கு:
PO Box 4040 Homebush NSW 2140.
Tel: 0433 088 725 or (02) 9758 7970
Email: asogt.tc@gmail.com
Web: www.kalappai.org

மனித மனத்தை உழுகின்ற
**கலப்பை**
உலகத் தமிழர்தம் உணர்வை
உயர்த்தி நிற்கும்

**கலப்பை**
அவுஸ்திரேலியப் பட்டதாரிகள்
தமிழர் சங்க ஆதரவில் வெளிவரும்
காலாண்டுச் சஞ்சிகை

தனிப்பிரதி : Aus. $2.50
ஆண்டுச் சந்தா
உள்நாடு : Aus. $10.00
வெளிநாடு : Aus. $20.00

பிரசுரிக்கப்படாத படைப்புகளைத்
திரும்பப் பெற இயலாது.
ஆசிரியர் குழுவுடன்
தொடர்புகொள்ள.....
**Tele : (02) 4737 9007**

**KALAPPAI**
P.O. Box 40,
Homebush South, NSW 2140
AUSTRALIA
E-mail : kalappai@yahoo.com

இதழ் வடிவமைப்பு
மித்ர ஆர்ட்ஸ் & கிரியேசன்ஸ்
☎ 91 - 44 - 2372 3182 / 2473 5314

## உள்ளே...


| | |
|---|---|
| உழவன் உள்ளத்திலிருந்து | 2 |
| விடாமுயற்சியின் பலனே துருவ நட்சத்திரம் | 4 |
| மருதாணியின் மகிமை | 6 |
| 50ஐக் கடந்த கலப்பை... | 7 |
| ஒரு வினாடி | 8 |
| விபுலாநந்த ஞாயிறு | 16 |
| சித்த மருத்துவம் | 20 |
| ஒட்டாத மண் | 23 |
| ஆலயமும் அர்ச்சகரும் | 27 |
| No Sign of Mum | 33 |
| இஞ்சியின் சிறப்பு | 35 |
| நல்லாசிகள் | 36 |
| வீரவனிதையின் சோக முடிவு | 54 |
| இலங்கையில் தமிழர் | 66 |
| The Evolution of an Ethnic Identity | 68 |
| பயனற்றவை | 72 |

# உழவன் உள்ளத்திலிருந்து...

## பயிருள்ள வரை, உயிருள்ள வரை

**ப**யிர் வளர்ப்பது உயிர் வளர்ப்பதற்குத்தானே? இதை விவசாயம் என்கின்றோம். பயிராயிருந்தாலும், பசுமை தரும் மரமாக இருந்தாலும் இன்றைய உலகில் அவை எமக்கு உயிர்காப்பனவாயே இருக்கின்றன. மரங்கள் சுவாசிப்பதனால்தானே மனிதர்கள் சுவாசிக்கிறார்கள்.

சூழல் என்பது இன்றைய உலகின் ஒரு காக்கப்படவேண்டிய கட்டாயப் பொருளாகிவிட்டது. உலகளாவிய அளவில் இந்த பசுமை பற்றிய விழிப்புணர்வு இன்று மேலோங்கி நிற்கின்றது. விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும், போரியல் உபயோகங்களும் இன்றைய சூழலை மாசு படுத்துவதை மனித இனம் உணர்கின்றது. அதைத் தடுப்பதற்கு அரசாங்க ரீதியிலே பல்வேறுபட்ட சட்டங்களும், உடன்பாடுகளும் ஏற்படுத்தப் பட்ட வண்ணமிருக்கின்றன.

முற்றத்தில் நின்ற வேப்பமரம், பின்வளவில் நின்ற மாமரம் என, மரங்களின் நடுவில் நாம் வாழ்ந்தது ஒரு காலம். எங்கு பார்த்தாலும் பசுமையாயிருந்த வயல்வெளிகள். இயந்திர வாகனங்களே அற்ற, மாட்டு வண்டிகளையே நம்பி வாழ்ந்த மக்கள் கூட்டம். சுவாசிக்கும் காற்று சுத்தமானதா? இல்லையா? என்ற ஆராய்ச்சியை மேற்கொள்ள அவசிய மற்றிருந்த மக்கள். இப்படியிருந்த ஒரு காலத்தை எம்மால் எண்ணித் தான் பார்க்க முடிகின்றது இப்போது.

அந்தக்காலத்துக்குத் திரும்பிப் போகவேண்டிய ஒரு காலம் இன்று வந்துவிட்டது. சூழல் இப்பொழுது மாசுபட்டிருக்கிறது. பல தொழில் நுட்பம் சார்ந்த முறைகளில் சூழல் மாசைக் கட்டுப்படுத்தும் முயற்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன. பல்லாயிரக்கணக்கான பணம் இதற்காகச் செலவிடப்படுகின்றது.

சுவாசிக்கும் எல்லோருக்கும் இந்தச் சுற்றாடலைக் காப்பாற்ற வேண்டிய கடமை இருக்கின்றது. இது நாமே உருவாக்கிய நிலை. மாசு படிதலுக்குக் காரணமானவர்களே நாங்கள்தான். எனவே, இதைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு எம் கைகளில்தான்.

பயிருள்ளவரைதான் உயிர். பசுமையில்லாத உலகம் வெறுமை யாகிவிடும் என்பதை நாம் யாவரும் அறிவோம். மரங்கள்தான் எமக்குக் கொடுக்கப்பட்ட வரங்கள். அவற்றைக் காப்பாற்ற வேண்டியது எம் கடமை. இதன் தாக்கம் எம் அடுத்த சந்ததிக்கு அதிகமாக இருக்கும் என்பதை நாம் யாவரும் புரிந்திருக்கின்றோம்.

எம்மால் என்ன செய்ய முடியும்? இது உலகளவிலேயே தீர்க்கப் படாத ஒரு பிரச்சினையாகவல்லவா இருக்கின்றது? முடிந்ததைச் செய்வதே முயற்சி. எமது சூழலைப் பசுமையாக வைத்திருக்கப் பாடு பட்டால் இந்த மண் மழை பொழிந்தாவது மகிழ்ச்சியை வெளிப்படுத்தும். இதற்குரிய முயற்சியை எம் இல்லங்களிலிருந்தே தொடங்கலாமே.

செய்வதுதான் செயல் என்று இல்லை. சிலவற்றைச் செய்யாமல் விடுவது, இந்தச் சூழலைப் பொறுத்தவரை செயலாகி விடுகிறது.

களனியைக் காப்பாற்றும் கடமை இந்தக் கலப்பைக்கும் வேண்டும்தானே.

- உழவன்

## 13 ஆண்டுகளைக் கடந்து...

**அன்பான வாசகர்களுக்கு வணக்கம்!**

53 இதழ்களை விரித்த கலப்பை தனது 14 ஆண்டில் காலடி எடுத்து வைத்திருக்கின்றது. சிட்னியில் ஆரம்பிக்கப்பட்டு, அவுஸ்திரேலியா முழுவதும் பரந்து இன்று சர்வதேச சஞ்சிகையாக மலரும் கலப்பைக்கு நீரூற்றி, ஊட்டி வளர்த்த கலப்பையின் எழுத்தாளர்கள், வாசகர்கள் அனை வருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

ஆசிரியர்




# விடாமுயற்சியின் பலனே துருவ நட்சத்திரம்

-ராணி தங்கராசா

**உ**த்தானபாதன் அரசனுக்கு சுநிதி, சுருசி இரு மனைவியர். சுநிதியின் மகன் துருவன். சுருசியின் மகன் உத்தமன். தன் நாட்டு மக்களைக் குறையின்றிக் காத்த மன்னன் இல்லறத்தை இனிதே நடாத்தத் தவறிவிட்டான். இளைய மனைவி சுருசியிடமும் மகன் உத்தமனிடமும் அதிக அன்பும், அக்கறையும் காட்டியவன் முதல் மனைவியையும் மகனையும் உதாசீனம் செய்தான். ஒரு நாள் அரசன் உத்தமனை தன் மடி மீது அமர்த்தி கொஞ்சிக் குலாவிக் கொண்டிருந்தான். அதைப் பார்த்த துருவனும் அப்பா என ஆசையோடு தந்தையின் மடியில் தாவினான். கண்ணுற்ற உத்தமனின் தாயார் மிகவும் கோபமாக துருவனின் கைகளைப் பிடித்திழுத்து கீழே தள்ளிவிட்டு, 'நீ பாவம் செய்தபடியால்தான் என் மகனாகப் பிறக்கவில்லை. உனக்கு தகப்பனாரின் பாசம் கிடைக்கவே கிடைக்காது. இனிமேல் இங்கு நீ வரவே கூடாது. ஓடு ஓடு' என விரட்டினாள். உத்தானபாதன் பேசாமடந்தையானான்.

சிற்றன்னையின் மிரட்டலால் பயந்து வெகுண்ட துருவன் அழுது கொண்டு தாயாரிடம் ஓடினான். பதறிப்போன தாயார் மகனை



அணைத்து 'கண்ணே, ஏன் அழுகின்றாய்? என்ன நடந்தது, சொல் மகனே' எனக் கேட்டாள். அழுதபடி விக்கலினிடையே விட்டு விட்டு நடந்தவற்றை மகன் கூறக் கேட்ட சுநிதி, 'ஆமாம், நானும் நீயும் துர்ப்பாக்கியசாலிகளே. என் வயிற்றில் பிறந்தமையாலே உனக்கும் உன் தந்தையின் அன்பு கிட்டவில்லை' என வேதனையுடன் கூறினாள். 'அம்மா, அப்பாவின் அன்பை நாம் இருவரும் பெற நான் என்ன செய்ய வேண்டும்?' எனத் துருவன் கேட்டான். 'என் செல்வனே? நமக்கு ஆண்டவனைத் தவிர வேறு யாரப்பா துணை? மரவுரி தரித்து அவரைத் தியானம் செய்வதே வழி. ஆனால் நீயோ சிறுவன். என் செய்வது?' எனச் சொன்னாள். 'தாயே, இன்றே தவம் செய்யப் போகிறேன், விடை தாருங்கள்' என விடை பெற்றுச் சென்றான் அப் பாலகன்.

முக்காலமும் உணர்ந்த மாமுனிவர் நாரதர் இச்சிறுவனைச் சோதிக்க விரும்பி 'உனக்கு அன்பு தானே வேண்டும் குழந்தாய். புத்திசாலியான உனக்கு அன்பை மட்டுமல்ல, அரசாங்கத்தையும் தர எத்தனையோ அரசர்கள் காத்திருக்கிறார்கள். என்னுடன் வா'வென அழைத்தார். 'எனக்கு எதுவும் வேண்டாம். என் தந்தையின் அன்பே வேண்டு'மென சொன்னவன் முனிவருடன் போக மறுத்துவிட்டான். துருவனின் மனோதிடத்தை மெச்சிய மாமுனிவர், 'குழந்தாய், உன் நல்லெண்ணம் நிறைவேற நாராயணனைத் தியானம் செய். நற்பயன் பெறுவாய்' என ஆசி கூறி நாராயண மந்திரத்தைச் சொல்லிவிட்டுச் சென்றார். முனிவர் சொல்லிக் கொடுத்தபடி தூய்மையாக மன அடக்கத்துடன் 'ஓம் நமோ நாராயணா' எனும் மந்திரத்தை ஓதலானான். இயற்கையின் சீற்றங்கள் யாவற்றையும் வென்று கடும் தவம் புரிந்தான்.

துருவனின் விடாமுயற்சிக்கு இரங்கிய விஷ்ணு பகவான் அவன் முன் காட்சி கொடுத்தருளினார். 'ஐயனே, எனக்கும் என் தாயாருக்கும் தந்தையின் அன்பு என்றும் கிடைக்க வேண்டு'மென மனமுருகி வேண்டினான்.

'நீ கேட்ட வரத்தைத் தந்தேன். அத்துடன் நீ இறந்த பின்னரும் விண்ணில் ஓர் நட்சத்திரமாகத் தோன்றி நிலை பெயராது நின்று எல்லோருக்கும் வழிகாட்டியாக விளங்கு வாயாக' என அருளிச் சென்றார். விடாமுயற்சிக்கு நற்பயனாகக் கிடைத்த துருவ நட்சத்திரத்தை இன்றும் காணலாம். இடம் பெயராதிருக்கும் துருவ நட்சத்திரத்தை ஓர் அடையாளச் சின்னமாகக் கொண்டு முற்காலத்தில் மாலுமிகள் தங்கள் கப்பல் பயணத்தை சரியான பாதையில் செலுத்தினர் எனவும் கூறுவர்.

முயற்சி திருவினையாக்கும்
ஆன்றோர் மொழியும்
பொய்யாமோ?



—சிசு

# மருதாணியின் மகிமை

தமிழகத்தில் மருதாணி பண்டைக்காலந்தொட்டே பாவனையிலிருந்து வருகிறது. பெண்கள் அழகுக்காக மருதாணி இலையை அரைத்து தங்கள் நகங்கள், உள்ளங்கை, பாதம் இவற்றில் பூசிக் கொள்வார்கள். இந்த மருதாணியை சில உடல்நோய்களைக் குணமாக்கவும் பாவிக்கலாம். கோடை காலத்தில் வாரத்துக்கொருமுறை மருதாணி இலையை அரைத்து உள்ளங்கால்கள், உள்ளங்கைகளுக்குப் பூசி வந்தால் சூடு தணிந்து உடலுக்குக் குளிர்ச்சி தரும். தோலுக்கும் நல்லது. தலை முடியைப் பளபளப்பாக்கும். எண்ணெய் தேய்த்துக் குளிக்கும் நாட்களில் மருதாணி இலையை ஊறவைத்து அரைத்துப் பூசிக் குளித்து வந்தால் தலைமயிர் கறுப்பாக வளரும். தலைமுடி உதிர்வதைத் தடுக்கவேண்டுமானால் மருதாணியிலை, கறிவேப்பிலை, செம்பருத்தியிலை மூன்றையும் நீர்விட்டு அரைத்து வடகம்போல் தட்டி வெயிலில் காயவைத்தெடுத்து, பின்னர் அதை தேங்காயெண்ணையில் ஊறவைத்து அந்த எண்ணையை அடிக்கடி வெயிலில் காயவைத்து எடுத்துக்கொள்ளவும். அந்த எண்ணையைத் தினமும் தலையில் தடவிவந்தால் தலைமுடி கொட்டுவது நீங்கும். பேன், ஈர், பொடுகுத் தொல்லையும் தீர்ந்துபோகும்.

விரல் இடுக்குகளிலுள்ள புண், காலில் பித்தவெடிப்பு, நகங்களில் வெடிப்பு போன்ற வியாதிகளுக்கு மருதாணியிலையை அரைத்துப் பூசிவர அவை குணமாகும்

# 50ஐக் கடந்த கலப்பை...

கலப்பை கொண்டு
உழுத விளைச்சலில்
ஐம்பது அறுவடை - கண்ட
மகிழ்வுதான் எம்மிடை

ஒவ்வொரு விளைச்சலிலும்
விளைந்த மணிகள்
விதைத்த எண்ணங்கள் - மனதில்
பசு மரத்தாணிகள்!

எழுத்தாளர், கவிஞர்
கட்டுரையாளர்க்கு
களங் கொடுத்த கலப்பை - தமிழ்த்தாய்
சூல் கொள்ளும் கருப்பை

இன்னும் நூறு மலர்கள் மலரட்டும்!
நாறும் இழிமைகள் தகரட்டும்!
தமிழுக்குப் புதியன தாளில் பதியட்டும்! - இப்படி
ஆண்டுகள் பலநூறு இன்னும் நகரட்டும்!

யோகன்

(கன்பரா)



# ஒரு வினாடி

-தேவகி கருணாகரன்

முகுந்தன் குறுக்கும் நெடுக்குமாக நடக்கிறார். அவர் முகம் கவலையில் தோய்ந்திருக்கிறது. திடீரென்று அழுதிடுவார் போல் கண்கள் சிவந்து கலங்குகிறது. பல தடவை வாசற் கதவடிக்கு வந்து ரோட்டை எட்டி எட்டிப் பார்த்து நிலை கொள்ளாமல் தவிக்கிறார்.

யார் யாருக்கோ டெலிபோன் பண்ணுகிறார். "மதுரா உங்கே வந்தாளா?" என்று கேட்கிறார்.

"அம்மா... காலமை வேலைக்குப் போன மது இன்னும் வீட்டே வரல்லே. அப்பாவும் நீங்களும் உடனே வெளிக்கிட்டு வாங்கோ," என்று தன் தாய்க்கு டெலிபோனில் கூறுகிறார். முகுந்தனின் குரல் கிணத்துக்குள் இருந்து வருவது போல் ஒலிக்கிறது.

உள்ளே வந்த குடும்ப நண்பர் டாக்டர் கிரி, "முகு, வெஸ்ட்மீட் போலீஸ் ஸ்டேசனுக்குப் போனேன். அவர்கள் ஒருவர் காணாமற் போய் இரு பத்திநாலு மணித்தியாலத்திற்குப் பின்தான் என்ரி போடலாமாம்,"

"ஐயோ! அதுவரைக்கும் மதுவை எங்கே போய் தேடுவது? பிற் ஸ்ரீற்றுக்கு போய் அவள் அலுவலகத்திலும் விசாரித்திட்டேன். என்ன செய்வது கிரி?" - முகுந்தனின் குரலில் 'வேதனை, ஏக்கம், பயம் ஒலிக்கிறது. தலையை கைகளால் பிடித்துக்கொண்டு நாற்காலியில் அமருகிறார். அவர் நிலை கண்டு நான் வருந்தி உருகுகிறேன்.

"முகுந்தன், நீ கவலைப்படாதே. மது எங்கேயாவது சிநேகிதிகள் வீட்டே போயிருப்பாள்," அவரின் தோளை கையால் அழுத்தியபடி ஆறுதல் கூறுகிறார் கிரி.

"அப்படி என்றால் டெலிபோன் பண்ணியிருப்பாளே? மோபைலையும் ஓஃப் பண்ணி வைத்திருக்கிறாள்." எதையோ நினைத்தவர், "கிரி, அவளுக்கு ஏதேனும் ஆகியிருக்குமோ? ஐயோ என் மதுவுக்கு - நினைக்கவே பயமாகவிருக்கிறது." எழுந்து மேலும் கீழுமாக நடக்கிறார். தலைமுடியைக் கோதி பிய்க்கிறார். சிட்னியின் இலைஉதிர் காலக் குளிரிலும் அவர் நெற்றியில் வியர்வை முத்துகளாக மிளிர்கிறது. மேற் சட்டையின் முதுகுப்புறம் வியர்வையால் நனைந்திருக்கிறது.

முகுந்தனின் அம்மாவும் அப்பாவும் காரில் வந்திறங்குகிறார்கள். முகுந்தனின் நிலை கண்டு ஆறுதல் சொல்ல முடியாது தவிக்கிறார் அவரின் அப்பா.

சிறுகதை



"அந்தப் பெண் மது எங்கே போறேன் என்று சொல்லியிட்டுபோயிருக்கலாம். இப்படி எங்களை எல்லாம் அலைக்களிக்க வைத்திட்டாளே. அவள் குணம் மாறவே மாறாதே." தேக்கி வைத்திருந்த முகுந்தனின் தாயின் ஆதங்கம் வார்த்தைகளாக வெளிவருகிறது.

தாயை முறைத்துப் பார்க்கிறார் முகுந்தன்.

"ஆன்ரி இப்ப எதுக்கு அதெல்லாம் சொல்லிக்கொண்டு. பிள்ளைகள் பசியோடு இருக்கிறார்கள். தயவு செய்து அவர்களை கவனியுங்கள்," என்று கிரி சமாதானப்படுத்துகிறார். பிள்ளைகளை அழைத்துக் கொண்டு உள்ளே போகிறாள்.

உள்ளே போனவள் வெளியே வந்து, "முகுந்தா, வேலையாலே வந்து சாப்பிட்டிருக்க மாட்டாய். இடியப்பமும் கறியும் கொண்டு வந்திருக்கிறேன் சாப்பிடுறியா?"

"வேண்டாம். எனக்கு பசிக்கல்லே."

"ஆன்ரி ப்ளீஸ், சூடா ஒரு கப் பால் கொண்டு வாங்கோ," கேட்கிறார் கிரி.

பாலை வாங்கியவர், "முகு, வெறும் வயித்தோடை இராதே, பாலைக் குடி. இந்தா இரண்டு தூக்க மாத்திரை." வற்புறுத்தி குடிக்க வைக்கிறார்.

மாமியிடம் வந்து, "நீங்களும் அங்கிளும் இரவைக்கு இங்கேயே தங்குங்கள். நான் வீட்டே போயிட்டு வந்து இங்கேயே படுத்துக் கொள்கிறேன்," என்று சொல்லிவிட்டு காரில் ஏறிப் போகிறார் கிரி.

மாத்திரையின் தாக்கத்தில் ஆழ்ந்த நித்திரையில் இருந்தார் முகுந்தன். அந்த சுருட்டை முடி, கூர்ந்த நாசி, அவர் பிடிவாத குணத்திற்கு அறிகுறியான அந்த மேல் எழும்பிய சொண்டு, இவை எல்லாவற்றையும் பார்த்துத்தானே நான் காதலித்தேன். தூங்கும்போதும் அவர் முகத்தில் தேங்கிய கவலை என் நெஞ்சை உருக்கியது. கலைந்திருந்த அவர் முடியைக் கோதி ஆறுதல் சொல்ல ஏங்கினேன். ஆனால்... பக்கத்தில் அமர்ந்திருந்து அவரையே பார்த்துக் கொண்டிருக்கத்தான் முடிந்தது. எவ்வளவு நேரம் இருந்தேனோ தெரியவில்லை. பின்பு பிள்ளைகளின் அறைக்குள் போனேன்.

மூத்தவள் தன் தாரா பொம்மையை அணைத்தபடி தூங்கிக் கொண்டிருந்தாள். கடைக்குட்டியை அப்பாச்சி அணைக்க, தன் கரடி பொம்மையை அணைத்தபடி ஆழ்ந்த நித்திரையில் இருந்தான். 'அம்மா வேண்டும்' என்று அழுத பிள்ளைகளின் கன்னத்தில் கண்ணீர் வழிந்து உப்பாகக் காய்ந்திருந்தது. அவர்களைக் கொஞ்சுவோம் எனக் குனிந்தேன். ஆனால்...?

காலையில் எழுந்தவுடன் கிரியும் முகுந்தனும் வெஸ்ட்மீட் பொலிஸ் நிலையத்திற்குப் போய் போட்டோவைக் காட்டி என்ரி

போடுகிறார்கள். போட்டோவைப் பார்த்துவிட்டு ஏதோ சொல்லுகிறார் அந்த அதிகாரி. பிறகு எல்லோரும் பொலிஸ் வாகனத்தில் ஏறிப் போகின்றனர். முகுந்தனின் முகம் பேயறைந்தது போல் வெளுத்திருக்க, அதே முகபாவம் கிரியின் முகத்திலும் பிரதிபலிக்கிறது. வெஸ்ட்மீட் ஆஸ்பத்திரியிலுள்ள பிரேத அறைக்குள் அழைத்துச் சென்று அங்கே வைக்கப்பட்டிருந்த ஒரு பிரேதத்தின் வெள்ளைத் துணியை நீக்கிக் காட்டுகிறார் அதிகாரி.

அருகே போய் பார்த்த முகுந்தன், "ஐயோ! மது என்னை விட்டுட்டு போயிட்டியா. மது! மது!" என்று உடல் மேல் விழுந்து சத்தமாகக் கதறி அழுகிறார். என் நெஞ்சைக் கசக்கிப் பிழிகிறது அந்தக் கதறல். புருவங்கள் உயர அவரைப் பார்க்கின்றனர் அங்கு நின்ற வெள்ளை அவுஸ்திரேலியர்கள். இப்படி தங்கள் உணர்வுகளை வெளியே காட்டாத பண்பு அவர்களுடையது போலும்.

நான் பிரேதத்திற்கு அருகே போய்ப் பார்க்கிறேன். தலையிலே ஆழமான வெட்டுக்காயம், நெற்றிப் பொட்டு மட்டும் நீண்டிருக்கிறது. உடல் வெள்ளைத் துணியால் மூடியிருந்தது. என் சடலத்தை நான் பார்க்கிறேன். விந்தையாக இருந்தது. உடலை விட்டுப் பிரிந்த என் ஆத்மாதான் இதை எல்லாம் பார்த்துக்கொண்டிருக்கிறதோ? பிள்ளைகளைத் தொடவோ கொஞ்சவோ முடியாமலும், பக்கத்தில் நின்றும் என்னை முகுந்தனுக்கும் மற்றவர்களின் கண்களுக்கும் தெரியாத காரணம் இப்ப புரிகிறது.

முகுந்தனைச் சாந்தப்படுத்தப் பார்க்கிறார் கிரி. மெதுவாக அவரை அழைத்துக்கொண்டு திரும்பவும் பொலிஸ் நிலையத்திற்குப் போகிறார்கள்.

"இது ஒரு விபத்து என்று நாங்கள் நினைக்கிறோம். உங்கள் மனைவியின் கவனக் குறைவால்தான் இது நடந்திருக்கிறது. ரோட்டைக் கடக்கும் நடைபாதையின் சிக்னல் விளக்கு பச்சை காட்டியபோதும் உங்கள் மனைவி திடீரென்று குறுக்கே வந்ததாகவும், பிரேக்கைப் போட்டும் டிரக்கை நிறுத்த முடியவில்லை என்றும் டிரக்கை ஓட்டி வந்தவர் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார். இதைப் பார்த்த இரண்டு சாட்சிகளும் இருக்கிறார்கள். இறந்தவரின் கைப்பையில் எந்தவித அடையாளங்களும் இருக்கவில்லை. ஆகையால்தான் உங்களுக்கு அறிவிக்க முடியவில்லை," என்கிறார்கள்.

தாங்கள் எழுதி வைத்திருந்த அறிக்கையை முகுந்தனிடம் வாசிக்கக் கொடுத்து, "நீங்களும் இதற்கு உடன்பாடென்றால் கையொப்பம் இடுங்கள்," என்கிறார்கள்.

"மதுவே போயிட்டாள். பிறகு எப்படிப் போனா என்று வாதாடி என்னத்தை காணப்போகிறேன். அதற்கு எனக்குத் தேவையுமில்லை, தெம்பும் இல்லை." கையெழுத்தைப் போட்டுவிட்டு எழுகிறார் முகுந்.



வீட்டிற்கு வந்த முகுந்தன், "கிரி, தயவுசெய்து அடிலேய்டில் இருக்கும் மதுவின் அப்பா அம்மா மற்றும் உனக்குத் தெரிந்த எங்க சொந்தக்காரர்களுக்கும் சிநேகிதருக்கும் அறிவித்துவிடு," என்றவர் எங்கள் அறைக்குள் போய் கதவைச் சாத்துகிறார்.

முகுந்தனின் சகோதரன் குடும்பத்தினரும், சகோதரி வாணியின் குடும்பத்தினரும் வந்திறங்குகிறார்கள். எல்லோரும் கும்பல் கும்பலாகக் கூடி மெதுவாகக் கிசு கிசு என்று கதைக்கிறார்கள்.

"அம்மா, மது இப்படி கவனக்குறைவாக இருந்திட்டாளே. கோர்ட் கேசு என்று அண்ணாவைச் சந்தி சிரிக்க வைத்திட்டாளே."

"இவளைக் கட்டாதே, தலை கெறுக்கு பிடித்தவள், சாதகமும் பொருத்தமில்லை என்று சொன்னேன் கேட்டானா?" பெருமூச்சு விடுகிறார் முகுந்தனின் அம்மா.

"உஸ் அம்மா, அண்ணாவுக்கு கேட்டிடப் போகுது," என்று தாயின் வாயை அடைக்கிறாள் வாணி.

எனது அப்பாவும் அம்மாவும் இரவு அடிலேய்டிலிருந்து வந்திறங்குகிறார்கள். "பாவி மகள் இப்படி கவலையீனமாக இருந்திட்டாளே. உன் பச்சைக் குழந்தைகளைப் பரிதவிக்கவிட்டு போயிட்டியே," அம்மா தலையிலும் மார்பிலும் அடித்து ஒப்பாரி வைக்கிறாள்.

முகுந், தன் மாமனாரைக் கட்டி அணைத்து "ஐயோ மாமா! மது எங்கள் எல்லோரையும் விட்டிட்டு போயிட்டா. ரோட்டைக் கடக்கும் போது கவனம் என்று எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன். நான் இனி என்ன செய்யப் போகிறேன். மது இல்லாத ஒரு வாழ்க்கையை - ஐயோ ஐயோ - நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லையே" எனக் கதறிக் கதறி அழுகிறார். அப்பாவும் அவரை அணைத்துக்கொண்டு அழுகிறார். முகுந் அவருக்கு மருமகன் மட்டுமல்ல, மகனில்லாத அப்பாவுக்கு மகனும் கூட.

என் வாழ்க்கையில் - நான் மிகவும் நேசித்த இரு ஆண்களும் வாய்விட்டு அழுவதைப் பார்த்து பதறுகிறேன், துடிக்கிறேன். என் மரணத்தின் கொடூரத்தால் என்னைச் சார்ந்தவர் அனுபவிக்கும் வேதனையைப் பார்க்கிறேன். என் கண்ணீரைத் துடைப்போம் என்று கையை உயர்த்தி முகத்தைத் தேடுகிறேன். ஆத்மாவுக்கு உருவமில்லையே.

என் மூத்த செல்வம் பிரியா ஒரு பர்ஸை எடுத்து விளையாடிக் கொண்டிருந்தாள்.

"இது மதுவின் பர்ஸ் ஆச்சே," எனற முகுந் அதை எடுத்து, "இதை எங்கேயிருந்து எடுத்தாயம்மா?"

அவள் மேசை லாச்சியைக் காட்டுகிறாள்.

லாச்சியைத் திறந்து பார்த்தவர், "மோபைலையும் பர்ஸையும் விட்டிட்டு போயிருக்கிறாளே," என்று முணுமுணுத்தபடி இரண்டையும் கையில் எடுக்கிறார். மாறி மாறிப் பார்க்கிறார். "ஐயோ மது, நீ விபத்திலே சாகவில்லை. வேணுமென்றே டிரக் முன் போயிருக்கிறாய்! முந்தா நாள் இரவு எமக்குள் நடந்த வாக்குவாதத்தால்தான் இப்படிச் செய்தியா? என்னைத் தனியே விட்டுட்டு போயிட்டியே! எனக்கு இருந்த வேலை அழுத்தத்தில் என்ன பேசுகிறோம், என்ன செய்கிறோம் என்று தெரியாமல் நடந்து கொண்டேன். ஐயோ பாவி நான்." கைகளால் தலையில் அடித்துக் கொள்கிறார். "நீ அழுது கொண்டு அப்பால் போனபின் என் நெஞ்சு வலித்த வலி உனக்குத் தெரியுமா. என் செய்கை மனதை உறுத்தியது. உன்னிடம் மன்னிப்புக் கேட்டுச் சமாதானப்படுத்துவோம் என்று உன்னைத் தேடி வந்தேன். நீ பிள்ளைகளை அணைத்தபடி படுத்திருந்தாய். காலையிலே பார்க்கலாம் என்று திரும்பி வந்து படுத்திட்டேன்" என் முகுந் சொல்லிச் சொல்லி அழுகிறார்.

"ஐயோ முகுந் குஞ்சு நான் வேணுமென்று இதைச் செய்யவில்லை. வேலைக்குப் போகத்தானே வேண்டும். நான் இருந்த மனநிலையில் கைப்பையில் என்ன இருந்தது என்று எங்கே கவனித்தேன். நடந்து போகும்போது இரவு நடந்ததெல்லாம் என் மனக்கண் முன் படமாக ஓடிக்கொண்டிருந்தது. உங்களுக்கு என் மேல் இருந்த அன்பு, காதல் மடிந்துவிட்டது என்று எண்ணினேன். என் உயிருக்கும் மேலாகக் காதலித்த நீங்கள் என்னை வார்த்தைகளாலும் செய்கையாலும் என் உணர்வுகளைக் காயப்படுத்தி விட்டீங்கள். ஏமாற்றம், வேதனை எல்லாமே சேர்ந்து நெஞ்சு வலித்தது. என் மார்பு துடித்தது. அதன் விளைவுதான் இது. என்னை மன்னித்து விடுங்கள்." அவர் காலில் விழுகிறேன். என்னால் அவரைத் தொட முடியவில்லையே. நான் சொன்னது அவர் காதில் விழவுமில்லையே.

என் முகுந் தேம்பித் தேம்பி சிறுபிள்ளை போல் அழுகிறார். என்னை இழந்து முகுந் படும் வேதனையிலும், துடித்த துடிப்பிலும் அவர் என் மேல் வைத்திருந்த ஆழ்ந்த அன்பு பிரவாகித்து வழிந்தது. துரோகி நான் இப்படி மோசம் பண்ணிட்டேனே! என் மன பலவீனத்தால், கடவுள் கொடுத்த அன்பார்ந்த கணவனையும் பிள்ளை களையும் வஞ்சித்து விட்டேனே!

**யு**.ரி.எஸ். பல்கலைக்கழகத்தில் முகுந்தன் பொறியியலும் நான் வர்த்தகமும் படித்துக் கொண்டிருந்தோம். அங்குதான் எங்கள் நட்பு ஆரம்பித்தது. நாளடைவில் எங்கள் நட்பு காதலாக மாறியது. முகுந்



தனின் பெற்றோர் முதலில் எங்கள் கல்யாணத்திற்கு இணங்கவில்லை. அவர்களைச் சம்மதிக்க வைக்க ஒரு வருடம் சென்றது. இப்போ எங்களுக்குக் கல்யாணமாகி பத்து வருடங்கள் ஆகிறது.

எங்களுக்கு இடையே அடிக்கடி வாக்குவாதம் நடக்கும். இரண்டு நாட்களுக்கு ஒருவரோடு ஒருவர் கதையாமலே இருப்போம். பிறகு நேசமாயிடுவோம். ஊடலுக்குப் பின் கூடல் இருக்கிறதே அது ஒரு தனி சுகம், ஒரு சுகமான இன்பம். ஆனால் சமீபத்தில் ஊடல் அதிகரித்துக் கொண்டு போக கூடல் குறைந்து கொண்டே போயிற்று. எங்கள் தாம்பத்திய உறவில் ஒரு பெரிய இடைவெளி வந்துவிட்டதை உணர்ந்தேன். ஆசை முப்பது நாள் மோகம் அறுபது நாள் என்பார்களே. அதுபோல் என் வாழ்க்கையிலும் நடக்குதோ என்ற சந்தேகம்.

அவுஸ்திரேலியாவில் கணவன் மனைவி இருவருமே வேலைக்குப் போகிறார்கள். முன்னேறிச் செல்லும் நாட்டிலே பணம் இருந்தால் தான் நாமும் முன்னேறலாம். இல்லையேல் எங்களை எங்கட சனமே மதிக்காது. பெரிய பெரிய ஆசைகள்– அதை மெய்யாக்க குடும்பத்தில் இருவரின் சம்பாத்தியம் ஒரு கட்டாயமாகிவிட்டது. ஊரிலே போல் ஒன்பது மணியிலிருந்து ஐந்து மணியோடு வேலை முடிவதில்லை. இங்கே இரவு ஏழு எட்டு மணி வரை இருந்து வேலை முடிக்க வேண்டிய நிலை. இல்லையேல் வேலையை இழக்க வேண்டிவரும். வேலை முடித்து வீட்டே வரும்போது தலைக்குள்ளே வேலையின் பளுவையும் காவிக்கொண்டு வந்திடுறோம். வீட்டே வந்தா சமையல், வீட்டு வேலை, பிள்ளைகளின் வேலை இப்படியே ஓயாத ஓட்டம். இயந்திரமாக இயங்குகிறோம். வீட்டிலே வேலைக்கு ஆள் வைக்கவும் கட்டுப்படியாகாது. இத்தனை அழுத்தங்களுக்கிடையே கணவனுக்கும் மனைவிக்கும் ஒருத்தருக்கொருத்தர் ஆறுதலாக ஒரு அன்பு வார்த்தை சொல்ல எங்கே நேரம். கதைத்தால்... அதை செய்தியா? இதை எடுத்தியா? என்ற அத்தியாவசியமான கேள்விகள்தான். அதுவும் வாக்கு வாதத்தில்தான் முடிகிறது.

முந்தா நாள் ஆபீசில் நிறைய வேலை. உடல் களைப்போடு மன ரீதியாகவும் களைத்திருந்தேன். குழந்தைகளை பகல் பராமரிப்பிலிருந்து அழைத்துக்கொண்டு வீடு வந்து சேர்ந்தேன். சமைத்து அவர்களுக்கு உணவு ஊட்டி, குளிக்க வார்த்து படுக்கையில் போடவும் முகுந்தன் வேலையால் வீட்டே வந்து சேர்ந்தார். அவரும் சாப்பிட்டு முடியும் வரை பொறுத்திருந்து விட்டு,

"முகுந்தன், என் அப்பாவுக்கு குடுக்க வேண்டிய பத்தாயிரம் டாலரை அவர் எக்கவுண்டில் போடுவதற்காக பாங்கிற்கு போனேன். எங்கள் எக்கவுண்டில் அறுபது டாலர்தான் இருந்தது. பத்தாயிரத்தை நீங்கள் எடுத்தீங்களா?"

"மறந்தே போனேன் மது. வாணி அவசரமாக பத்தாயிரம் டொலர் வேணும் என்று கேட்டாள். அவசரம் என்றபடியால் உடனே குடுத்திட்டேன். உன்னிடம் பிறகு சொல்லலாம் என்று நினைத்தேன், ஆனால் மறந்திட்டேன். அவள் திருப்பித் தந்ததும் மாமாவுக்கு திருப்பிக் கொடுத்திடலாம்" வெகு சாதாரணமாகச் சொன்னார். அவர் கவனம் புரட்டிக் கொண்டிருந்த ஆபீஸ் பைல் மேல் இருந்தது.

"அப்போ அப்பாவிற்கு மட்டும் காசு அவசரமில்லையா? நான் அவசரம் என்று கேட்டதால் அப்பா காசை தந்தார். நேற்று டெலிபோன் பண்ணியபோது பணத்தை திருப்பித் தந்தா உதவியாக இருக்கும் என்று சொன்னார். அப்பாவிற்குக் குடுக்க வேண்டியதை எப்படி உங்கள் தங்கைக்கு குடுக்கலாம். அதுவும் என்னைக் கேட்காமல். உங்க தங்கை அல்லது உங்க ஆட்கள் என்ன கேட்டாலும் தூக்கிக் குடுத்திடுவீங்கள். என்னுடைய சொந்தங்கள் உங்களுக்கு இளக்காரம்தான்," உடல் அலுப்பும் மன உளைச்சலும் சேர கட்டுப்பாடில்லாமல் வார்த்தைகளைக் கொட்டினேன்.

"தொடங்கியிட்டியே உன் சொந்தங்கள் என் சொந்தங்கள் என்று."

"அது என் சம்பளப் பணத்திலே கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்துப் போட்ட பணம்."

"ஆரம்பிச்சிட்டியா, என் காசு உன் காசு என்று. சம்பாதிக்கிறோம் என்ற இறுமாப்பு உனக்கு." உரத்துப் பேசினார் முகுந். அவர் இறுக்கமான முகமும் அக்கினிப் பார்வையும் என்னை மேலும் பேச வைத்தது.

"அப்பாவிடமிருந்து வாங்கும்போது காசை ஒரு மாதத்தில் திருப்பிக் குடுத்திடுவோம் என்று சொல்லித்தானே எடுத்தீங்க. இப்போ மூன்று மாதத்திற்கு மேலாகிறது. குடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டாமா?"

"நான் மாமாவிடம் சொல்லிக் கொள்கிறேன். வாணி காசை திருப்பிக் குடுத்ததும் குடுத்திடலாம். அவசரமில்லை."

"போன முறை வாணி கடனாக வாங்கிய காசை எங்கே திருப்பிக் குடுத்தா? பத்தாயிரத்தை நாளைக்கே அப்பாவின் பாங்கிலே போட்டிடுங்கோ. இல்லையேல் என்ன செய்வேனோ தெரியாது." உண்மையான மது பேசவில்லை. வேலையின் அழுத்தங்கள் பேசியது.

"என்ன செய்வாய்?" என்று என்னை முறைத்துப் பார்த்தார்.

எனக்கு உடம்பு ரத்தம் முழுவதும் தலைக்கு ஏறின மாதிரி சூடாயிற்று "முறைத்துப் பார்த்தா பயந்திடுவேனா? வாணியிடம் போய், நீ அதுக்கு இதுக்கு என்று கைமாத்தாக வாங்கின எல்லா காசையும் உடனே திருப்பித் தருமாறு கேட்கப் போறேன்." வார்த்தைகளால் மல்லுக்கட்டிக்கொண்டு உடல் நடுங்க முகுந்தன் முன் நின்றேன்.



அடுத்து 'பளார்' என்ற ஒரு சத்தம். நான் கதிகலங்கிப் போனேன். தலையைச் சுற்றியது.

"உனக்குப் பயித்தியம் பிடித்திட்டுதா?" முகுந்தன் கர்ஜித்தார்.

என் கன்னத்தில் விழுந்திருந்த ஐந்து விரல்களின் தழும்பைத் தடவியபடி அழுதுகொண்டு ஓடிப்போய் பிள்ளைகளின் படுக்கையில் விழுந்தேன். கன்னத்தின் வலியைவிட நெஞ்சிலே விழுந்த அடி சுரீர் என்று வலித்தது. இதயமே வெடித்துவிடும் போல் அழுதேன்.

இந்தச் சம்பவத்திற்குப்பின் இரவு நான் தூங்கவேயில்லை. முகுந்தனுக்கு என்மேல் இருந்த காதல் மடிந்துவிட்டது. அவருக்கு அவர் தங்கைதான் முக்கியமாகப் போய்விட்டாள். இல்லையேல் இப்படி அடித்திருப்பாரா? அவர் பேச்சும் செய்கையும் என்னை வாட்டியது. கனத்த மனதோடு காலையிலே வேலைக்குப் புறப்பட்டுவிட்டேன். இதயத்தின் வலியைப் போக்க வழி தெரியாது தவித்தேன். ரோட்டைக் கடக்கும் நடைபாதைக்கு வந்தேன். ஏதோ ஒரு உணர்ச்சி என்னை ஆட்டிப்படைத்தது. ஒரு விநாடி என் சுய புத்தியை இழந்து வேகமாக வந்துகொண்டிருந்த டிரக் முன் சட்டென்று பாய்ந்தேன். என் பிள்ளைகளைப் பற்றியோ என் கணவரைப் பற்றியோ நினைத்தேனா? எனக்கு என் மனவேதனை முக்கியமாய்ப் போயிற்று. இந்தச் செய்கையால் விளையப் போகிற பாரதூரமான விளைவுகளை எங்கே சிந்தித்தேன். ஒரு சின்னக் காசு விசயம், மேற்கத்திய தேசத்தின் வாழ்க்கை சூழ்நிலை என் குடும்பத்தை எப்படிப் பாதித்துவிட்டது. வாழ்க்கையில் எதை இழந்தாலும் திரும்பப் பெற்றிடலாம். ஆனால் உயிர் போனால் திரும்பப் பெற முடியுமா?

என்னைச் சார்ந்தவர்கள், என் மேல் பாசம் வைத்திருந்தவர்களின் சந்தோசத்தையும் நிம்மதியையும் நானே அழித்துவிட்டேன். தாயில்லாமல் என் பிள்ளைகளின் பிஞ்சு மனம் படும் வேதனையைப் பார்த்து நான் பதைக்கிறேன். என் இழப்பால் என் பிரியமானவர்கள் படும் துக்கம், என் முகுந் படும் அவஸ்தையைக் கண்டும் எதுவுமே செய்ய முடியாது இருக்கிற கொடுமையிருக்கிறதே, அது கொடுமையிலும் கொடுமை. அனலில் இட்ட புழுவாகத் துடிக்கிறேன். இந்த வசனத்தைக் கதைப் புத்தகங்களில் வாசித்திருக்கிறேன், நீங்களும்தான் வாசித்திருப்பீர்கள். அந்தப் புழுவின் வேதனையை இப்போது நான் நிஜமாகவே அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். தற்கொலை பண்ணிக் கொள்பவர்க்ளின் நிலை இதுதானா? இறைவனின் தண்டனை இதுதானோ?



# விபுலாநந்த ஞாயிறு

**ஓங்கலிடைவந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலி நீர் ஞாலத் திருள் கடியும் – ஆங்கவற்றுள்
மின்னோர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
தன்னேரிலாத தமிழ்.**

இந்தப் பழந் தமிழ்ப்பாடலிலே கிழக்குக்கடலிலே உதித்த சூரியனும், பொதிகை மலையிலுதித்த தன்னேரிலாத தமிழும், உலகின் புறஇருளையும் அகஇருளையும் போக்குகின்றன என்று சொல்லப் படுகின்றது. இலங்கையின் கிழக்குக்கடலிலே அங்ஙனம் ஒரு செஞ் ஞாயிறு தோன்றிற்று. அதுவே எம்மை வாழ்விக்க வந்த விபுலாநந்த ரென்ற ஞாயிறு. தமிழுக்கும் தமிழிசைக்கும், அறிவியலுக்கும் ஆன்மீகத் துக்கும் புதிய பரிமாணங்களைக்காட்டி தமிழ் மொழிக்கும் ஆங்கிலமொழிக்கும் ஆக்கமும் ஆற்றலும் கூட்டுவித்த பெரியார். இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த செயற்கரிய செய்த பெரியார் வரிசையில் முதலிடம் வகிப்பவர். பாவலர்க்குப்பாவல ராகவும் நுண்ணறிவினருள் நுண்ணறிவினராகவும், தொண்டர்தம் தொண்டராகவும், துறவு வேந்தராகவும் அவர் வாழ்ந்த சிறப்பும், வானமென உயர்ந்து வையமெனப் பரந்து காணப்படும் அவரது ஆளுமையும், ஆக்கங்களும், ஆற்றலும் எம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றன. பாரதப் பெருநாட்டிற்கு புகழும் பெருமையும் சேர்த்த மகான் அடிகளாரவர்கள். அப்பெருமையிலும் சிறப்பிலும் இலங்கைத் திருநாட்டிற்கும் பெரும் பங்குண்டு. அவர் அம்மண்ணின் மைந்தரல்லவா!

**பாலம் லக்ஷ்மணன்**

அவர் வாழ்ந்த காலம் சம்பவங்கள் நிறைந்த காலம். அவர் பிறந்த வருடமாகிய 1892இல்தான் மூன்றாம் நூற்றாண்டின் முத்தமிழ்க் கலைச் செல்வமாகிய சிலப்பதிகாரம் அச்சுவாகனம் ஏறி, மக்கள் கையில் தவழ்ந்தது. தமிழர்களுடைய பழைய இலக்கியச் செல்வங்களை தமிழுலகம் இனங்கண்டுகொள்ள ஆரம்பித்தது. இந்தியாவில் சுதந்திரப் போராட்டம் தீவிரமாக நடந்த காலம் மகாத்மா காந்தி சகாப்தத்தின் பொற்காலம். மேல்நாடுகளில் அறிவியல் யுகம் என்று சொல்லும்படியாக ஆவேசமாக ஏற்பட்ட விஞ்ஞானப் புதுமைகளும், புதிய கண்டுபிடிப்புகளும் மக்களுக்கு புதிய பார்வையைக் கொடுத்தன. கருத்துப்புரட்சிகள் குவிந்து பொதுவுடைமை அரசு ருசியப் பெருநாட்டில் ஏற்பட வழிகோலின.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியாவில் வங்கப் பெருநாட்டில் தோன்றிய மாபெரும் அவதார புருஷர் இராமகிருஷ்ண பரமஹம்சருடைய பிரதம சீடரும் இராமகிருஷ்ண மடங்களின் தாபகருமான விவேகானந்த அடிகள் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் வேதாந்த முழக்கம் செய்துவிட்டு தாய்நாடு திரும்பிய காலம். தவராஜசிங்கம் என்று விவேகானந்தரை வரவேற்பதில் முதல் மரியாதை கொழும்பு நகருக்குக் கிடைத்தது. கொழும்பு, அனுராதபுரம், யாழ்ப்பாணம் என எல்லா இடங்களிலும் சுவாமிகளினுடைய உரை முழங்கியது. சுவாமிகளுடைய தோற்றப் பொலிவும் உள்ளத்தை ஈர்க்கும் உரைப் பெருக்கும் இலங்கை மக்களைப் பரவசப்படுத்தின. ஆறுமுகநாவலர் காலத்துக்குப் பின் மீண்டும் ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்திற்று.

இந்தக் காலகட்டத்தில்தான் மயில்வாகனன் என்ற பிள்ளைத் திருநாமம் கொண்டு இலங்கையின் கிழக்குக்கரையில் மட்டக்களப்புப் பகுதியில் காரேறு மூதூரில் அடிகளார் பிறந்தார். விவேகானந்தரை ஒத்த மனஆற்றல் அடிகளாருக்கு இயல்பாகவே வாய்த்தது. பிரமிக்கத்தக்க ஞாபகசக்தியும், அறிவுத் தாகமும், கல்வித்தேட்டமும் ஆன்மிக நாட்டமும் ஒருங்கு சேர்ந்து அவரது வருங்காலப் பன்மொழிப் பெருமையையும் சிந்தனைச் சிறப்பையும் முன் கூட்டியே அறிவித்தன. பன்னிரண்டு வயதிற்குள் நன்னூல், திருக்குறள், பாரதம், நிகண்டு முதலிய நூல்களில் நிறைந்த தேர்ச்சி பெற்றார். செய்யுளியற்றும் திறன் வந்து சேர்ந்தது. ஆங்கிலக் கல்லூரியில் படிப்பு நடந்தது.

கணிதமும் விஞ்ஞானமும் அவரைக் கவர்ந்தன. சமயகுரவர்களுடைய தேவார திருவாசகங்களில் ஆழ்ந்த ஈடுபாடும் பக்தியும் ஏற்பட்டது. தமிழிலக்கியங்களிலே ஆறாத காதல் பிறந்தது. கொழும்பில் வதிந்த தமிழ்ப்பேரறிஞர் கைலாசபிள்ளை முதலியாரிடம் சங்கத் தமிழிலக்கியச் செல்வங்களை, முக்கியமாக சிலப்பதிகாரத்தை பாடம் கேட்டார். சிலப்பதிகாரத்தில் ஆர்வம் பெருகிற்று. அவர் ஊரில் இருந்த கண்ணகி கோயில் அந்த ஆர்வத்தை அதிகரிக்கச் செய்தது.

அடிகளார் அந்த நாட்களை பின் வருமாறு நினைவு கூருகின்றார். "பரம்பரைக் கலைவாணர் குலத்தில் உதித்த முதலியாரவர்கள் பழைய இசைமரபு தவறாது கம்பீரமான குரலிலே ஒலித்த மங்கல வாழ்த்துப்பாடலினைப் பாடம் கேட்டது இன்னும் என் அகச் செவியில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது." அடிகளார் மனத்திரையில் கானல்வரியும் ஆய்ச்சியர் குரவைப் பாடல்களும் தண்ணுமையும் முழவும், யாழும் குழலும் களிநிருத்தம் செய்தபடியிருந்தன. சிலம்பில் குறிப்பிட்ட இசைக்கருவிகளை ஆய்ந்தறியும் ஆர்வம் பொங்கிற்று. பின்னாளில் யாழ்நூல் பற்றிய அவரது இசை ஆராய்ச்சிக்கு அங்கே ஒரு வித்து விதைக்கப்பட்டது.

வசதிகள் படைத்த வீடும் சுற்றமும் இருந்தும், ஆசிரியர் தொழிலில் புகழும் பெருமையும் கிடைத்தபோதிலும், அவரது உள்ளம் துறவையே நாடிற்று. தொண்டு செய்து பிறர் துயரம் தீர்க்கும் வாழ்வையே தேடிற்று. இராமகிருஷ்ண மடத் துறவியாக, விபுலாநந்த அடிகளாக மாறினார். சீவ சேவையே சிவசேவை என்ற இராமகிருஷ்ண பரமஹம்சருடைய அருள்மொழியையே தாரக மந்திரமாகக் கொண்ட இராமகிருஷ்ண மட சென்னைக் கிளையிலும் பிறகு அல்மோராக் கிளையிலும் பணியாற்றினார்.

இவ்விரு இடங்களிலும் பிரசுரமான பிரபுத்த பாரதம், வேதாந்த கேசரி, இராமகிருஷ்ண விஜயம் என்ற மூன்று ஆங்கில, தமிழ் மாத இதழ்களுக்கும் பத்திரிகாசிரியராக நியமனம் பெற்றார். விவேகானந்தருடைய தர்ம ஞான பக்தியோக நூல்களை தமிழில் பெயர்த்து எழுதினார். விவேகானந்தருடைய எழுத்துக்களை விவேகானந்ததீபம் என்ற பெயரால் தமிழில் கொண்டு வந்தார். இராமகிருஷ்ணரின் முதற் சீடர்களில் ஒருவரான சுவாமி சிவானந்தரிடமே நமது அடிகள் துறவோபதேசம் பெற்றார். அடிகளார் தாம் இயற்றிய இராமகிருஷ்ண திவ்ய சரிதம் என்ற கவிதையின் இறுதியில் ஸ்ரீஇராமகிருஷ்ண பரஹம்ச தேவரது திருவருட் சீடராகிய சிவானந்த வள்ளலது திருவடிக் கடிமை பூண்ட விபுலானந்தர்" என்று கையொப்பமிட்டுள்ளமை அவரது ஆழ்ந்த குருபக்தியைக் காட்டுகிறது. இதில் குருதேவர் இராமகிருஷ்ணரை

"குடபால் மாந்தரும் குணபால் மாந்தரும்
கடல் சூழ் ஞாலத்து கலந்தினிது வாழவும்
பால்வேறாகிய பனுவற்றுறையின்
நூல் வேறாக நுவலினும் நுவன்ற
தெய்வமொன்றேயெனச் சிந்தையில்
தெளியவும்
சமயச்சண்டையும் சாதிச்சண்டையும்
அமைவுற்றழியவும் அறநெறி ஓங்கவும்
உலகில் தோன்றிய உத்தமன் சரிதை"

என்று நயம்பட கவிதையில் எழுத்தோவியமாக நமக்கு அளித்துள்ளார்.

விஜயத்திலும் பாரதத்திலும் கேசரியிலும் அவர் எழுதிய தலையங்கங்களும் கட்டுரைகளும் அவரது சிந்தனைச்சிறப்பின் சீர்மையையும் தமிழார்வத்தையும் உலக நோக்கையும் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளன. தென்னாட்டில் ஊற்றெடுத்த அன்புப் பெருக்கு வட நாட்டில் பரவிய வரன்முறை என்றதொரு அருமையான கட்டுரையில் ஆழ்வார்களும் நாயன்மார்களும், அவர்களுக்குப் பிறகு சங்கரரும் இராமகிருஷ்ணரும் தென்னிந்தியாவில், முக்கியமாக தமிழகத்தில் ஏற்படுத்திய பக்தி இயக்கம் வட இந்தியாவில் பரவி கபீர்தாசர், மீராபாய், சைதன்யர் என்று பலவகைப்பட்ட பக்தி வெள்ளப் பெருக்கை உண்டாக்கி நாமசங்கீர்த்தனம் என்று இசையால் இறைவனை வழிபடும் முறைகள் எழுந்த விதத்தை சுவைபடச் சொல்லிக்கொண்டு போகின்றார்.

தமிழ் சங்க இலக்கியங்களை பிறமொழிகளுக்கு அறிமுகம் செய்து வைக்கும் பணியிலும் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டார். பெரியபுராணம், திருவிளையாடல் புராணம், பத்துப் பாட்டு, மணிமேகலை முதலிய பல நூல்களிலும் ஆங்கில உலகிற்கு அறிமுகம் ஏற்பட்டது அடிகளாரது கட்டுரைகளாலேயே. அறிவியல் கருத்துகளையும் தமிழருக்கு அறிமுகம் செய்தார். கலைச்சொலாக்கப்பணியில் ஈடுபட்டார். அண்ணாமலைப் பல்கலைக்கழக முதல் தமிழ்ப் பேராசிரியராக நியமனம் பெற்ற காலை அறிவியல் தமிழ் வளர்ச்சிக்குச் செய்ய வேண்டிய ஏற்புடை முயற்சிகள் பற்றி ஓயாது ஒழியாது சிந்தித்தும் எழுதியும் வந்தார். தமிழ் இசை பற்றிய ஆராய்ச்சியையும் விடாமல் தொடர்ந்து வந்தார்.



இவ்வாராய்ச்சிக்குத் தடையாக இருப்பதாகக் கருதி பேராசிரியர் பதவியைத் துறந்தார்.

இலங்கையிலுள்ள இராம கிருஷ்ண மட நிர்வாகத்தில் இயங்கும் கல்விக்கூடங்களை நிர்வகிக்கும் பொறுப்பு வந்துற்றது. இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியராகவும் நியமனம் ஏற்கும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதன் இதழாக "விவேகானந்தன்" வர அதற்கும் அடிகளார் ஆசிரியராகக் கடமையாற்றினார். அவர்தம் செம்மை நலம் நிறைந்த சீரிய கருத்துகள் இலங்கை சமூகத்தில் பரவவும் ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது.

இவ்வளவு கடும் உழைப்பினிடையே யாழ்நூல் மெல்ல மெல்ல உருவாகி 1947ம் ஆண்டு ஜூன் மாதம் தென்னிந்தியாவில் விமரிசையாக அரங்கேறியது. ஜூலையில் இப்பெருமகனார் நம்மைவிட்டு நீங்கினார். ஐம்பத்திரண்டே ஆண்டுகள் வாழ்ந்த அடிகளார் அவர்கள் ஐநூறு ஆண்டுகளின் தொழிற்பாட்டை மேற்கொண்டு வாழ்ந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. ஒரு கணமும் வீணாக்காது சிந்தித்தும் எழுதியும் பேசியும் சேவைக்குத் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட பெருமகனும் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த தெய்வமும் ஆகிய விபுலாநந்த அடிகளுக்கு விழா எடுப்பதன் மூலம் தமிழ் தன்னைப் பெருமைப்படுத்திக் கொள்கின்றது.

# சித்த மருத்துவம்



## மூலிகை அகராதி (தமிழ் / ஆங்கிலம்)

கந்தையா குமாரசாமி
நல்லைக் குமாரன்

பாகம் 10

### பொது

**அ**வ்வை மூதாட்டி பாடிய பாட்டின் பொருளை வைத்திய கோணத்தில் பாருங்கள்.

"வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு!"

(வாக்கு என்றால் அறிவுரீதியாக - மனம் என்றால் உளரீதியாக. திரு என்றால் துளசி - மேனி என்றால் குப்பைமேனி. தும்பி என்றால் கரிசிலாங்கண்ணி - கையான் என்றால் கையாந்தகரை - பாதம் என்பது மூலிகையின் வேர்).

**தழுதாழை:** தழுதாழை இலைச்சாறு கடுமையான காய்ச்சலைத் தணிக்கும்.

**இப்பாடலைக் கவனியுங்கள்.**

சங்கநிலைவேர்பொடியை உலகத்தில்மேகமெல்லாம்
இங்கிதமாயேகுமென்று மங்கைபாகர் தானுரைத்தார்
**தழுதாழை** வேர்சமூலம் வழுவாமலேகொணர்ந்து
தழுவாமலேயரைத்து விழுதோடவேயுணர்வை
சித்தமதில்வாதமெல்லாம் மெத்தவதில்சூலைகளும்
சத்திலாததோடுமித மற்ற விஷச் சூனியமும்
**கொத்தானும்**வேர் சமூலம் மெத்தாகவேயெடுத்து
விஸ்தாரமாயரைத்துமெத்த ஆளவாயுணர்வை
கட்டுக்கள் மலத்து ?????? விட்டுவிடுமேயிடுப்பில்
சூட்டுவலித்தானு ???????? டமுடன் செய்யகலும்
முக்கானானாயி ??????????? காகவேயுலர்த்தி
திக்காமலேவிட ???????????? மலேயருந்த
வயிறூறும்பேதிகளு ?????? மாஞ்சுரமும்
தயவாகவே அடங்கும் ????? கும்காயசித்தி
ஆதண்டத் தலைவலி யகற்றுமே!
(??????? கறைபானுக்கிரையாகிவிட்டது)



**கொல்லன் கோவை:** அக்கிப்புண், கண்டமாலை, வரகுஷ்டம், மகாவிஷம், கரப்பான், நமைச்சல், அழுக்குக் கரப்பான், ரணம், சிரங்கு முதலிய நோய்களை இந்த மூலிகை குணப்படுத்தும்.

**இப்பாடலைக் கவனியுங்கள்:**

**கொல்லன் கோவைக்கிழங்கை** நல்ல ஆவின்பாலிலுண்ண
மெள்ளவேவிஷங்களது வில்லடைவில்லாமலோடும்
முத்தமெனும்மூலமதில் மெத்தவயிற் சேடனிற்குஞ்
சுத்தமொடு தாகமுடன் நிங்குமுன்னில்லாது சொன்னேன்
**இன்பூரல்**வேர்சமூலம் தென்பாகவேகொணர்ந்து
தம்பிரானையே நினைந்து தென்பாகவேயுணர்வை
குத்திருமல் கோழைசலம் நாற்றமொடுசீழகலும்
ஆத்திவிடுமேசுவாசம் பார்த்துபதமாயுணர்வை
சிவனார் தன்வேம்புதன்னை நவநாதர்பேர்வழுத்தி
உவமாகவேயுணர்வைத் தவமாகுங்காயசித்தி
பங்கயஞ்செய்நீளுலகில் சங்கமற்ற நூலிகை நால்
மங்கைபாகர் சொன்னபடி சிங்காரமாயானுரைத்த
வாடாதோடை தோஷமகற்றுமே!

**அகத்தியர் மூலிகை மருத்துவம்:**

"சம்புடனேவேர்விரையை உண்பதனால் கிராணிமூலம்
தெம்புடனே தீருமென்று கும்பமுனி முன்னுரைத்தார்
சித்திரபுரத்துமூலம் மெத்த ஆவலாய்க் கொணர்ந்து
சத்தாகிலும்கியாழம் வைத்தாகிலும் குடிக்கில்
பித்தமொடுமத்தமும் பொருத்ததொருமேல்வயிறும்
அத்திசாரதாகமுடன் இத்தனைநோய்யேகிவிடும்
**நிலவாகை**வேருரைக்கில் மலைபோலஊதுவயி
றலையாகுலையுமது நிலையாதுயேகும்நிஜம்
**தும்பை**யதுதான்குடிக்கில் அம்பலத்துவேர் — கொடி
பம்பரம்போலேகுழைத்துத் தின்பவர்வயிறுளைபோம்
**கரிசிலாங்கண்ணி**மதம் பிரியாவசியமது
கரியாமிளகோடுண்ணத் தரியா துபாண்டிருமல்
அவர்பிரமேகமற்றுமே!"

கலப்பை 48ல் (பக்கம் 57) கூறியபடி பேதி செய்முறை விபரம் (சித்த வைத்தியரின் மேற்பார்வையின் கீழ் மட்டுமே பரிசோதித்தல் நன்று)

**273:**

போச்சடா பயித்திய வாய்வெல்லாம் போச்சு
பொருமலெல்லாமொழிந்ததடா பசியுண்டாச்சு
யாச்சடா சரீர சுத்தி மிகவுண்டாச்சு ஆக்கை
யெல்லாம் வலுத்ததடா அழகுண்டாச்சு வரச்

சூதேடாயனுபோகம்பருகும் பாரு மைந்தனே
  சிறு பருவமால் போயாவாய் போச்சடா
சிறுசின்னியுப்பு வேதை பிறருக்குச் சொல்லாதே பேதியாமே.

**280:**

அளுகண்ணி கிரணந்தீண்டிச் சூரியனில் சமூலமது
  பிடுங்கிவந்து வகுக்கவே துலாமொன்று
கொண்டுவந்து மைந்தனே முன்போல தாக்கவேயுலத்திச் சுட்டு
  பழுக்கவே பாண்டத்தில் கரைத்து வைத்து பரிதியினில்
தெளிவிறுத்துச் செப்புச் சட்டி பானுக்கவே அடுப்பேத்திக்
  காச்சும்போது நீலதாயுப்பு வரும் நிறத்தைக் காணே.

**281:**

காணவே யளுகண்ணி லவணப்பூத்தான்
  கைலாசங் கொள்ளையடா கரப்பன் வற்றக்
தோணவே கொண்டுவரும் சூரை சூரை தொந்திச்
  சுரங்களுக்குக் கொடுத்துப்பாரு
வேணவே முன்பாகஞ் சேர்த்துப்பாரு
  வெகுசுறுக்கு யளுகண்ணியதிகமப்பா
நாணவே தொளுயிந்தச் சாபம் நடத்தப்பா
  கைவல்லியம் வயித்தியம் பாரே.

**286:**

சித்தனே அளுகண்ணிச் சாற்றினுள்ளே
  சிறுவிந்து ரசம் விட்டுச் சேர்த்துக் கொண்டு
பத்தனே முன்னுப்பு மூன்றுஞ்சேர்த்து
  பருவமாய்க் குளம்பாக யரைத்துக் கொண்டு
கந்தனே நோய்கெல்லாமிட்டுப்பாரு
  கைநொடியில் தீருமடா சன்னிதோஷம்
பித்தமே சுத்தமாமுச்சி மீதும் பிடரியிலும்
  தீத்துவிடு பிறகு பாரேன்.

**294:**

முன்னூறும் புரையோடும் புங்கம்பாலும் அத்திரமும்
  விட்டரைத்துவிடு மூன்று நாளும்
அபின்நூறு மத்தியேடா குழிவிழுந்த பெரியபுரைக்
  கனுபானங் கல்நாரும் மிளகுமிட்டுப் பொடித்துக் கொண்டு
கலந்துவிடு புங்கம்பாலுள் அவுரியொடு
  பொன்னூறு கொடுத்ததாலும் சொல்லாரப்பா
பூட்டிப்பார் புண்புரைகள் புத்துத்தானே.

(முற்றும்)





ஆசி. கந்தராஜா

# ஒட்டாத மண்

## சாலைகளே சாட்சியாக...


**அ**ன்று சனிக்கிழமை. அயலிலுள்ள அராபிய நாடுகள் போலல்லாமல், எதியோப்பியாவின் சனிக்கிழமையும் விடுமுறை நாளாகும்.

காலை உணவை முடித்ததும், சற்றே உலாத்த வேண்டும் போலத் தோன்றியது. வீதிக்கு வந்தேன். அது எதியோப்பியாவையும் கென்யாவையும் இணைக்கும் நீண்ட நெடுஞ்சாலை! உலக வங்கியின் உதவித் திட்டத்தின் கீழ் சாலை அமைக்கப்பட்டதாகவும், சாலையின் தூரம், ஆரம்பித்த - நிறைவு செய்த தேதிகள், செலவு செய்த தொகை ஆகிய சகல விபரங்களும் தாங்கிய விளம்பரப் பலகையொன்று சாலையோரம் வைக்கப்பட்டிருந்தது.

எதியோப்பியாவின் நெடுஞ்சாலைகளிலும் வீதிகளிலும் இப்படியான விளம்பரப் பலகைகளையும், எயிட்ஸ் விழிப்புணர்வு தட்டிகைகளையும், உதவி வழங்கும் உலக நிறுவனங்கள், தங்கள் பெயர்களுடன் சென்னை நகரில் அரசியல் தலைவர்களின் டிஜிற்றல் பனர்கள் வைப்பது போன்ற மோஸ்தரில் அடுத்தடுத்து வைத்திருந்தார்கள். எதியோப்பியா வறிய நாடு என்றும், பிற நாடுகளின் தயாளத்திலே அது வாழ்கின்றது என்றும் அவை மறைமுகமாக முரசறைகின்றனவோ என நான் நினைத்த சந்தர்ப்பங்களும் உண்டு.

நான் தங்கியிருந்த ஹோட்டல், நெடுஞ்சாலையைக் கடக்கும் குறுக்கு வீதியில், அந்தக் குறுக்கு வீதியையே முகப்பாகக் கொண்டு அமைந் திருந்தது. நெடுஞ்சாலையில் யப்பானிலிருந்து இறக்குமதியான ஆடம்பர வாகனங்கள் அதிவேகமாக ஓடிக்கொண்டிருந்தன.

பாதசாரிகள் சர்வசாதாரணமாகக் குறுக்கும் நெடுக்குமாக நெடுஞ்சாலையைக் கடந்தார்கள். சந்தியை ஒட்டிய ஓடையில் அழுக்குத் துணிகளுடன் ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்த எதியோப்பிய குழந்தைகளை வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றேன்.



திடீரென ஒரு குழந்தை இன்னொரு குழந்தையைத் துரத்த அது நெடுஞ்சாலைக்குக் குறுக்காக ஓடியது. சாலையில் வந்த பாரலொறி குழந்தையைக் காப்பாற்ற நினைத்து பக்கவாட்டுக்குத் திரும்பியதில் எதிரே வந்த மினிபஸ்ஸுடன் நேருக்கு நேர் மோதியது. மினிபஸ்ஸில் வந்த பயணிகள் பஸ்ஸுக்குள் நசுங்கிக் கிடந்தார்கள். 'மரண ஓலம்' என்ற சொல்லின் அர்த்தத்தை அந்த நேரத்தில் அந்த இடத்திலேதான் நான் பூரணமாக உணர்ந்து கொண்டேன்.

விபத்துக்குள்ளான பாரலொறியில் சோளம் மா ஏற்றி வந்திருந்தார்கள். சோளம் மாச்சாக்குகள் வெளியே தூக்கி எறியப்பட்டு வீதியில் சோளம் மா கொட்டிக் கிடந்தது. மனித ரத்தம் ஆங்காங்கே சோளம் மாவை நனைத்துச் சகதியாக்கியது. கூட்டம் கூடி விட்டது. கூட்டத்தின் மத்தியிலே ஐரோப்பிய சுற்றுலாப் பயணிகளும் நின்று வேடிக்கை பார்த்தார்கள். இடிபாடுகளுக்கிடையே நசுங்கிக் கிடந்தவர்களை வெளியே இழுத்துப்போடும் பணியில் நானும் ஈடுபட்டேன். லொறிச் சாரதி நொறுங்கிக்கிடந்த லொறியின் முன்புறத்தில் முனகிக் கொண்டிருந்தான்.

அவனை வெளியே இழுத்தெடுப்பதில் வெள்ளைக்காரன் ஒருவன் முயன்றுகொண்டு இருந்தான்.

'உன் கைகளில் காயம் ஏற்படுத்திக் கொள்ளாதே. இங்கு ஓடும் குருதியில் 'எயிட்ஸ்' கிருமிகள் இருக்கக்கூடும்' என்று எச்சரித்தவாறே அவனது துணைவி அவனுக்கு உதவிக்கொண்டு இருந்தாள்.

இந்த அமளிக்குள்ளும் கொட்டிக் கிடந்த சோளம் மாவை அள்ளுவதில் சிலர் அவசரம் காட்டினார்கள். இரத்தம் தோய்ந்த மாவைத் தவிர்த்து அள்ளினாலும் அவர்கள் அள்ளி அடைத்த பைகளில் மனித ரத்தம் திட்டுத்திட்டாகப் படிந்திருந்தது. வயிற்றுப் பசி மனிதநேயத்தை வென்றுவிடும் என எங்கோ வாசித்தது அப்பொழுது என் நினைவில் சிறகடித்தது.

எதியோப்பியாவின் வறுமை பற்றிய பிரசாரம் அதிகமே! அங்குள்ளவர்கள் எலும்பும் தோலுமாகக் காட்சியளிப்பதாகப் பிரசார சாதனங்கள் அவல் மெல்லுகின்றன. அங்கிருந்து நான் மெலிந்து திரும்புவேன் என்ற என் மனைவியின் நம்பிக்கை, இத்தகைய பிரசாரங்களிலே வேரூன்றியதுதான்.

எதியோப்பியாவில் நான் தங்கியிருந்த காலத்தில், கிராமங்கள் உட்பட பரவலாகவே நான் பிரயாணம் செய்திருக்கிறேன்.

தொடர்பு சாதனங்கள் விளம்பரப்படுத்தும், எலும்பும் தோலுமாக, பட்டினியால் மரித்துக் கொண்டிருக்கும் மனிதர்களை எதியோப்பியாவின் என் சொந்த அனுபவத்தில் நான் கண்டதில்லை. வளர்முக நாடுகளில் நிலவக்கூடிய, வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் மனிதர்கள் எதியோப்பியாவிலும் வாழ்கிறார்கள். அவ்வளவே!

அம்புலன்ஸும் பொலிசும் வந்ததும் அசுர கெதியில் பாதை சீராக்கப்பட்டது. அங்கு கூடி இருந்த கூட்டமும் கலையத் துவங்கியது.

'**ஹ**லோ சேர்! என்னை ஞாபகம் இருக்கிறதா?' எனக் கேட்டவாறே கூட்டத்தில் நின்ற எதியோப்பிய இளைஞன் ஒருவன் புன்னகைத்தான். கண்ணியமாக உடையணிந்து, அவன் சரளமாக ஆங்கிலம் பேசினான். வேறு மொழிகளும் தெரியும் என்பதைக் காட்ட ஜேர்மன், இத்தாலி மொழிகளிலும் ஆங்கிலத்தில் கூறிய கருத்தைப் பேசிக் காட்டினான்.

'நான்தான் நேற்று இரவு உங்களுக்கு ஹோட்டலில் உணவு பரிமாறினேன். நான் எட்வேட். என்னைத் தெரியவில்லையா? எட்வேட் மெக்கோனன் (Edward Mekonnen)' எனத் தன் முழுப் பெயரையும் சொன்னான்.

நான் தங்கியிருந்த ஹோட்டலில் உணவு பரிமாறுபவர்கள் அனைவரும் பெண்கள். இவன் பொய் பேசுகிறான் என்று தெரிந்தும் அவனைப் பார்த்துப் புன்னகைத்தேன். இவனைப் போன்றவர்கள் ஏமாற்றுக்காரர்கள். இவர்களிடம் நான் மிகவும் அவதானமாக இருப்பேன். இருப்பினும் அவனது மொழிப் புலமையும், பல்வேறு மொழிகளைப் பேசிய லாவகமும் அவனைக் கவனிக்க வைத்தன.

எனது புன்னகையைத் தனக்கு சாதகமாக எடுத்துக்கொண்டு, வெகு இயல்பாக எதியோப்பிய கலாசாரம் பற்றி என்னுடன் ஆங்கிலத்தில் பேசினான். கறுப்பை மூடி, லேசாக வெள்ளை நிறம் பூசினால் கலவை நிறம் ஒன்று தோன்றுமே. அத்தகைய ஒரு அரிதான நிறத்தில் அவன் அழகாகத் தோன்றினான்.



உண்மைதான்; எதியோப்பியர்கள் மிக அழகானவர்கள். ஆபிரிக்க, அராபிய, இந்திய சங்கமத்தில் பல்வேறு மனித சாயல்களை அங்கு காணலாம். எடுப்பான மூக்கும், தொந்தி இல்லாத இறுக்கமான நெடிய உடல்வாகும் ஒருவகைக் கவர்ச்சியை ஏற்படுத்தும். இதன் காரணமாகத்தான் குழந்தைகள் இல்லாத பல ஐரோப்பிய தம்பதிகள் எதியோப்பிய குழந்தைகளைத் தத்தெடுக்க முன்வருகிறார்களா? இந்த தத்தெடுப்பு சம்பிரதாயத்துக்காக ஐரோப்பியத் தம்பதிகள் பலர் நான் தங்கிய ஹோட்டலிலேயே தங்கியிருந்தார்கள்.

"இன்று சனிக்கிழமை; விடுமுறைதானே? கேளிக்கைகள் நிறைந்த உல்லாசக் கிளப்புகள் இங்கு நிறையவே இருக்கின்றன. எதியோப்பிய நடனமும் உண்டு. மார்பைக் குலுக்கி ஆடும் எதியோப்பிய நடனம், மிகவும் பிரபல்யமானது. போவோமா?" எனக்கேட்டு, எட்வேட் தன் தொழிலில் சிரத்தையாக இருந்தான்.

இவனைப் போன்றவர்கள், இரவு விடுதிகளாலும், கேளிக்கை விடுதிகளாலும் வாடிக்கையாளர்களை அழைத்து வருவதற்கெனக் கொமிஷன் அடிப்படையில் ஏஜண்டுகளாக அமர்த்தப்பட்டிருப்பவர்கள். இந்த ஏஜெண்டுகள் நாம் கொஞ்சம் அசமந்தமாக இருந்தாலும் ஏமாற்றக்கூடியவர்கள் என்பதையும், அவர்களிடம் எச்சரிக்கையாக நடந்துகொள்ளுவது

தான் தற்பாதுகாப்புக்கான சூத்திரம் என்பதையும் நான் அறிந்திருந்தேன். ஆனாலும், இவர்களிடம் மிக அவதானமாக நடந்துகொண்டால் நிறையவே தகவல்களையும் புதினங்களையும் 'அள்ளிக்' கொள்ளலாம் என்பதை விமான நிலையத்தில் அறிமுகமான ஜேர்மன்காரன் சொல்லியிருந்தான்.

எட்வேட் தன் தொழிலுக்கு புதியவன் என்பதை அவனுடன் பேசிய கொஞ்ச நேரத்திலேயே புரிந்துகொண்டேன். 'கற்றுக்குட்டியான அவனிடம் நான் தொலைய மாட்டேன்' என்கிற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டது.

'கோப்பி குடிப்போம் வா!' என அவனை அழைத்தேன். அவனுக்கு மகிழ்ச்சி. அருகில் இருந்த கோப்பிக் கடை ஒன்றைக் கண்டுபிடித்தோம். அதற்குள் நுழைந்தோம்.

எதியோப்பியாவின் மலைப் பகுதிகளிலே நிறைய கோப்பிச் செடிகள் பயிரிடப்படுகின்றன. அங்கு விளையும் கோப்பி பற்றி எதியோப்பியர்கள் பெருமையாகப் பேசிக்கொள்வார்கள்.

"எதியோப்பிய ஸ்பெஷல் கோப்பி" என்ற விளம்பரங்களுடன் வீதியோரம் பல கடைகள் வியாபாரம் செய்கின்றன. கண் அசைவால் வாடிக்கையாளர்களைக் கவர்ந்திழுக்கும் எதியோப்பிய அழகிகள் இங்கும் தமது வாடிக்கையாளர்களுக்காகக் காத்திருப்பார்கள்.

காலை வேளைகளிலே கோப்பிக் கடையில் கூட்டம் அதிகம் இருப்பதில்லை. கோப்பிக் கடையின் மூலையொன்றில் நாங்கள் வசதியாக அமர்ந்து கொண்டோம். அவனுடன் கேளிக்கை விடுதியொன்றுக்கு நான் செல்லாத ஏமாற்றம் அவன் முகத்தில் தெரிந்தது. அன்றைய அவன் சீவியம், அவனுக்குக் கிடைக்கும் கொமிஷனில்தான் தங்கியுள்ளது. என்னிடம் எந்தவித பிரயோசனமும் இல்லை என்றெண்ணி, என்னைக் கழற்றிவிட எத்தனித்தான்.

ஆயிரம் 'Birr' (எதியோப்பிய பணம்) எடுத்து, 'இதை வைத்துக் கொள்' எனக் கூறினேன்.

'சேர்!' என ஏதோ சொல்ல அவதிப்பட்டான். வார்த்தைகள் அவன் தொண்டையில் அடைத்துக் கொண்டன. ஒரு வகைத் திணறல். அவனுடைய செயலுக்கான காரணம் எனக்குப் புரிந்தது. அவனுக்கு நான் கொடுத்த பணம் அவனது ஒரு வார ஊதியம். டொலரிலே செலவு செய்து பழகிய எனக்கு அது பெரிய தொகையல்ல.

"உண்மையாகவே இந்தப் பணம் எனக்கா? கேளிக்கை விடுதிக்கும் வரமாட்டேன் என்கிறீர்களே?" என ஒருவித சந்தேகத்துடன் ராகம் இழுத்தான்.

"உனக்குத்தான். உன்னுடன் சாவகாசமாகப் பேசவேண்டும். எடுத்துக்கொள்" என்றேன்.

நன்றியுடன் என்னைப்பார்த்து 'சலாம்' வைத்தபோது அக்கண்களிலே சுரந்து நின்ற கண்ணீரை நான் அவதானிக்கத் தவறவில்லை.

**இன்னும் வரும்...**

நன்றி வீரகேசரி



# ஆலயமும் அர்ச்சகரும்

**-மெய்ஞானி**

**ஆ**லயங்கள் எப்பொழுது தோன்றின? இக்கேள்விக்கு அறுதியான பதிலை யாரும் சொல்ல முடியாது. ஆதி மனிதனுக்கு இறை நம்பிக்கை எவ்வாறு தோன்றியது? என்ற கேள்விக்கான பதிலும் அவ்வாறே. ஆதி மனிதனுக்கு தன்னிலும் மேலான சக்தி ஒன்றோ பலவோ உண்டு என்ற கருத்து அச்சத்தாலோ ஏதோ ஒரு வகையான உள்ளுணர்வாலோ ஏற்பட்டது என்பது உண்மை. மிகப் புராதன காலத்திலேயே உலகளாவிய அடிப்படையில் தென்புலத்தோரை வழிபடும் மரபு தோன்றிவிட்டது. தென்புலத்தோர் என்ற பதம் இன்றைய இளைய தலைமுறையினர்க்கு எளிதில் புலப்படாது போகலாம். அச்சொல் குறிப்பது ஒருவரின் மறைந்துவிட்ட மூதாதையரைத்தான். மறைந்தவர்கள் ஆவி உருவில் வசிப்பதாகவும் அவர்களை வணங்கி ஆசிகளையும் பிற உதவிகளையும் பெறலாம் என்றும் ஆதி மனிதன் நம்பினான். மறைந்துவிட்டவர் நினைவுச் சின்னமாக அன்று ஒரு நடுகல் பயன்பட்டது. அந்த நடுகல் வணங்கப்பட்டது.

அந்த நடுகல்தான் தமிழகத்தைப் பொறுத்தவரையிலேனும் ஆலயத்தின் ஆரம்பப் புள்ளி என்பதும் அந்த நடுகல்லுக்கு 'காவலாக' வேலும் அலங்கரிப்பதற்காக மலர்களும் மயில் பீலிகளும் பயன்பட்டன என்பதும் மறைமலை அடிகள் போன்ற அறிஞர்களின் கருத்தாகும். இதோ எமது சிந்தனை ஓட்டத்தை பல நூற்றாண்டு காலம் விரைவாகப் பின்னோட்டினால் லிங்க உற்பத்தியும் வேலவன் தோற்றமும் எமது அகக்கண் ஓரத்தில் தென்படுகின்றன. பூஜை என்பது வடமொழிச் சொல். அதன் அடிச்சொல் பூசை என்ற தூய தமிழ்ச் சொல் என்றும் பூ + செய் = பூசெய் = பூசை என மருவியது என்றும் சில அறிஞர்கள் கருதுகிறார்கள்.

வேதங்கள் கூறும் அடிப்படை வழிபாட்டுமுறை முத்தீ என



அழைக்கப்படும் வேள்வி ஆகும். நால்வர் குறிப்பிட்ட அடிப்படை வழிபாட்டு முறை சலம் பூவொடு தூபம். கால ஓட்டத்தில் இவ்விரு வழிபாட்டு முறைகளும் பின்னிப் பிணைந்துள்ளது பற்றி முன்பு எழுதிய ஒரு கட்டுரையில் யாம் குறிப்பிட்டுள்ளது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

ஆரம்பத்தில் ஏற்பட்ட நடுகல் ஆலயங்கள் தனிக் குடும்பத்தினருக்குச் சொந்தமானவையாக இருந்திருக்கலாம். காலப்போக்கில் அவற்றுள் சில 'பொது' இடங்களாக மாறி இருப்பதும் சகஜம். அத்தகைய 'பொது' இடங்களை ஒழுங்காகச் சுத்தம் செய்யவும் பராமரிக்கவும் யாரோ ஒருவரோ இருவரோ பொறுப்பு ஏற்றிருப்பர். அவர்களே நாளடைவில் பூசகர்களாகவும் அர்ச்சகர்களாகவும் மாறி இருப்பர். தொன்மையில் இருந்த ஆலயங்கள் மிகச் சிறிய அமைப்புகளாகவும் மண்ணாலும் மரத்தாலும் கட்டப்பட்டவை ஆகவும் இருந்திருக்கும். 'புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்கும் இட்டு' என்ற அப்பர் தேவாரம் குறிப்பிடும் கோவில் மண் தரையைக் கொண்டதாக ஊகிக்கலாம்.

பல்லவர் காலத்தில்தான் கற்கோவில்கள் அமையப்பெற்றன. முதன்முதலாகத் தமிழகத்தில் அமையப்பெற்ற கல்மலையில் குடைந்து எடுக்கப்பட்ட பெரும் கற்கோவில் திருச்சிராப்பள்ளியில் அமைந்துள்ள தாயுமானவர் கோவில் எனக் கருதப்படுகிறது. பிற்காலத்தில் கல்லாலும் செங்கல்லாலும் பல கோவில்கள் கட்டப்பட்டுள்ளன. இன்று சிமெந்து கொங்கிரீட்டும் கோவில்களில் கட்டடப் பொருளாகப் பயன்படுகின்றது. ஆனால் இன்று கூடத் தனிக் கருங்கல்லால் சில கோவில்கள் அமைக்கப்படுகின்றன. இதற்கு உதாரணமாக இன்று ஹவாய் தீவொன்றில் அழகுற அமையப்பெறும் இறைவன் கோவிலைக் குறிப்பிடலாம்.

இந்துமத வழிபாட்டு முறைகளை மந்திரம், தந்திரம், யந்திரம் என மூன்று வகையாகப் பிரிக்கலாம். இவை காலத்தால் வளர்ந்து இன்றுவரை நிலவுகின்றன. இவற்றுட் பல கால ஓட்டத்தில் வழக்கிழந்தும் விட்டன. இம்மூன்று பிரிவுகளிலும் மிகத் தொன்மையானது தந்திரம் என்றே நம்பப்படுகிறது. இவை கைகளாலும் இதர மெய் உறுப்புக்களாலும் ஆற்றப்படுபவை. யந்திரம் என்பது பெரும்பாலும் ஒரு செப்புத் தகட்டில் பதியப்பட்ட சின்னங்களும் அட்சரங்களும் ஆகும். மந்திரம் மனதால் நினைத்து வாயால் உச்சாடனம் செய்யப்படுவது.

சலம் பூவொடு தூபம் தொன்றுதொட்டு நிகழும் தந்திரம். ஆதியிலே இறைவனின் திருவுருவை, அதாவது ஆலயத்தின் மூலத்தை அர்ச்சகர் மட்டும் பூசித்தாரா? அல்லது அடியார்களுமே பூசித்தனரா? இக்கேள்விக்கு விடை காண்பது சுலபம் அல்ல. "கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்" என்று தொடங்கும் அப்பர் தேவாரத்தையும் அன்னார் அருளிய பிறிதொரு



தேவாரத்தில் "போதொடு நீர் சுமந்தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்" என்ற வரிகளையும் மேற்கோள் காட்டி அடியார்களும் நேரில் சென்று பூசித்து இருப்பார்கள் எனக் கருதுவோரும் உண்டு. சமயகுரவர் நால்வருள் அப்பர் ஒருவரே பார்ப்பனர் அல்லாதவர் என்பதும் இங்கு கருதற்பாலது. அதே சமயம் திருவருட்செல்வரும் நால்வரில் ஒருவருமான அப்பரையும் இதர சாதாரண அடியார்களையும் சமதளத்தில் வைத்துப் பார்க்கலாமா என்ற கேள்வியும் எழமுடியும்.

## வேதங்களும் ஆகமங்களும்

இறை வழிபாட்டிற்கு ஆரம்பத்தில் பல்வகையான தந்திர முறைகள் பயன்பட்டன. வேத காலத்தில் இருந்து வழிபாட்டுக்குப் பயன்பட்ட அடிப்படை வழிமுறை முத்தீ வளர்த்தல் என்னும் வேள்வி ஆகும். வேத வழிபாட்டு முறைகள் பொதுவாக வைதிகம் என அழைக்கப்படும். வேதங்கள், அதுவும் குறிப்பாக ரிக்கு வேதம் உலகிலேயே உள்ள சமய இலக்கியங்களுள் மிகத் தொன்மையானது என்பதையிட்டு இரு கருத்திற்கு இடமே இல்லை. வேதங்களை எமது நால்வரும் பிற நாயன்மார்களும் புகழ்ந்திருக்கின்றனர். திருநீற்றின் பெருமையைக் கூற வந்த ஞானசம்பந்தர் "வேதத்தில் உள்ளது நீறு" என வேதத்தை ஆதாரம் காட்டியுள்ளார். திருவாசகம் அருளிய மணிவாசகரும் சிவபிரானைப் போற்றுகையில் "வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே" எனப் பாடி அருளியுள்ளார். சைவப் பெருநூலான பெரியபுராணத்தை இயற்றிய சேக்கிழாரும் "வேத நெறி தழைத்தோங்க..." என வாழ்த்தி இருக்கிறார். சைவத் திருமுறைகளில் ஒன்றான திரு மந்திரத்தை எழுதிய திருமூலரும் "வேதம் பொது" என ஏற்றிருக்கிறார்.

இந்தியாவில் வடநாட்டில் உள்ள ஆலயங்களில் நிகழ்த்தப்படும் பூசைகள் எல்லாம் வைதிக முறைப்படியே நிகழ்த்தப்படுகின்றன. அங்கு பின்பற்றப்படும் விதிமுறைகள் பரசங்கியா விதிமுறைகள். என அழைக்கப்படுகின்றன. அவை இறுக்கமற்ற நெகிழ்வுடைய விதிமுறைகள் அவ் வழிபாட்டு முறைகளில் பக்தர்களும் பூசகர்களும் சமமாகப் பங்கேற்க இடமுண்டு. இந்துக்களின் தலையாய தலமான காசியும் இதற்கு விதிவிலக்கல்ல. காசி விசுவநாதர் வீற்றிருக்கின்ற பூமியே மயான பூமி. அவருக்குத் தினந்தோறும் அதிகாலையில் சுடலைப்பொடி பூசிக் குடமுழுக்கு (அபிடேகம்) நிகழ்த்தப்படுகிறது. இத்தகைய சடங்கை தென்னாட்டிலோ ஈழத்திலோ நடாத்த நினைத்தே பார்க்க இயலாது.

வட இந்தியாவிலும் வைணவ கோவில்களின் கருவறைக்குள் யாரும் கண்டபடி உள்ளிட முடியாது. அதற்கான சில கட்டுப்பாடுகள் உண்டு. இங்கே வைணவம் என யாம் குறிப்பிடுவது தென்னகத்தில் தோன்றிய

பள்ளிகொண்ட பெருமாளை, அதாவது நெடுமாலை வணங்கும் பாரம்பரியம்தான். தென்னாட்டு வைணவர்களே நெற்றியில் நாமம் இடுகிறார்கள். வடநாட்டில் அந்தப் பழக்கம் மிக அரிது. அங்கே விபூதி அல்லது திருநீறு எல்லோர்க்கும் பொதுவானது. வட நாட்டவர்கள் பெரும்பாலும் பள்ளிகொண்ட பெருமாளுக்குப் பதிலாக அவரின் அவதாரங்களாகக் கருதப்படும் இராமரையோ கிருஷ்ணரையோதான் அனேகமாக வணங்குகிறார்கள்.

சைவர்களைப் பொறுத்தவரையில் கோவில் என்றால் சிதம்பரம்தான். ஆனால் சிதம்பரத்துக்குச் சென்றால் அங்கே அர்ச்சிக்கும் தீட்சிதர்களை ஆகம முறையிலா அர்ச்சிக்கிறீர்கள் என்று கேட்டுப் பாருங்கள். அவர்கள் இல்லை என்றே பதில் கூறுவார்கள். தாம் வைதிக முறையில்தான் பூசைகள் அனைத்தும் செய்வதாகச் சொல்வார்கள். உண்மையில் வைதிக முறையிலான வழிபாட்டுக்கு திருவுருவங்களே தேவை இல்லை. அவ்வாறிருக்க நடராசர் திருவுருவம் அங்கே எதற்கு இருக்கிறது எனக் கேட்டால் அந்தத் தீட்சிதர்கள் என்ன பதில் சொல்வார்களோ தெரியவில்லை.

உண்மையில் வைதிக வழிபாட்டு முறைகளுக்கும் ஆகம முறைகளுக்கும் அதிக வேறுபாடு இல்லை. பார்ப்பனர்கள் தமது இல்லங்களில் நிகழ்த்தும் ஆத்மார்த்த பூசைகளை வைதிக முறைப்படியே செய்கிறார்கள். அது அவர்கள் தத்தமது ஆத்ம திருப்திக்கும் ஆன்மிக வளர்ச்சிக்குமாகச் செய்துகொள்ளும் பூசைகள். ஆலயங்களில் அவர்கள் செய்யும் பூசைகள் அடியார்கள் நலனுக்காக நிகழ்த்தப்படுபவை. முறைப்படி இயங்கும் சைவக் கோவில்களில் அவை ஆகம விதிகளுக்கு இணங்கவே செய்யப்படுகின்றன. இந்த ஆகம விதிகள் எங்கே தோன்றின?

களப்பிரர் காலத்துக்குப் பின்பே தமிழகத்தில் கோவில்கள் வளர்ச்சி கண்டன. பெரிய கற்கோவில்களும் தோன்றின. கோவில்கள் வளர்ந்ததோடு வழிபாட்டு முறைகளும் வளர்ந்தன. இவ்வளர்ச்சிகளை நெறிப்படுத்துவதற்கு விதிமுறைகள் தேவைப்பட்டன. அதாவது கோவில் அமைப்புக்கும் வழிபாட்டு முறைகளுக்கும் விதிமுறைகள் தேவைப்பட்டன. இவ்விதிமுறைகளே ஆகமங்கள் ஆயின. இந்த விதிமுறைகள் நியம· விதிமுறைகள் என அழைக்கப்படுகின்றன. அதாவது மாற்றமுடியாத விதிகள் எனக் கருதப்படுகின்றன.

சைவக் கோவில்களுக்கு அமைந்த ஆகமங்கள் சிவாகமங்கள். வைணவ கோவில்களுக்குப் பயன்பட்டவை வைணவ ஆகமங்கள். இந்த ஆகமங்கள் யாவும் அன்றைய தொடர்பாடல் பொது மொழியான (lingua frana) சமக்கிரதத்தில் எழுதப்பட்டன. பயன்பட்ட மொழி சமக்கிருதம். எழுத்தோ (லிபி) கிரந்தம். இதில் முக்கிய சிவாகமங்களைத் தமிழில் திருமந்திரமாகத் தந்தவர் திருமூலர். தமிழில் 'தந்தவர்' என்ற கூற்றில் இருந்தே மூலமொழி வேற்றுமொழி என்பது புலப்படுகிறது அல்லவா?



அப்பர், சம்பந்தர் காலத்தில் அதாவது ஏழாம் நூற்றாண்டில் ஆகமங்கள் பெரிதும் முக்கியத்துவம் பெற்றதாகத் தெரியவில்லை. ஆனால் மாணிக்கவாசகர் காலத்தில் சிவபிரானை அவர் "ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான்...." என்று விவரிப்பதில் இருந்து ஆகமங்கள் வகித்த முக்கியத்துவம் விளங்குகின்றது. ஆகமங்கள் பெரும்பாலும் ஏழாம் நூற்றாண்டுக்கும் ஒன்பதாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில், அதாவது கோவில்ககள் பெரிதும் விருத்தி பெற்ற காலத்தில் தோன்றி இருக்கலாம். அது எவ்வாறு இருப்பினும் இன்று சைவக் கோவில்கள் யாவும் வேத விதிமுறைகளையும் ஆகம விதிமுறைகளையும் ஒட்டி இயங்குவதால் அவை பொதுவாக வேதாகம விதிமுறைகளுக்கு ஏற்ப அமைவதாகவும் இயங்குவதாகவும் கருதப்படுகின்றன. இவ்வடிப்படையில் தான் குடமுழுக்கு, நன்னீராட்டு என்றெல்லாம் தூய தமிழில் சொல்லப்படும் கும்பாபிஷேகங்களும் பிரதிட்டைகளும் நடைபெறுகின்றன.



இதுவே தமிழகத்திலும் ஈழத்திலும், இன்று சைவர்கள் புலம் பெயர்ந்த நாடுகளில் அமைந்த கோவில்களிலும் கடைப்பிடிக்கப்படும் யதார்த்தம். இதனால்தான் சிட்னியில் அமைந்த ஒரு பிரபல சைவக் கோவிலில் பிரதிட்டை செய்யப்பட்ட திருவுருவங்களுக்கு அடியார்களும் மலர் தூவலாம் என்று முதலில் எடுத்த முடிவு வெகு விரைவில் மறுதலிக்கப்பட்டது.

விதிவிலக்கான கோவில்கள் இல்லை என்றும் கூறமுடியாது. அண்மையில் சிட்னியில் அமைந்துள்ள சமய நிறுவனம் ஒன்றில் கருத்துத் தெரிவித்த ஒரு பெண்மணி தான் ஒரு பூசகர் ஆவதற்குச் சில 'தடைகள்' இருப்பது பற்றிக் குறிப்பிட்டார். தனது 'சாதி' ஒரு தடை எனக் குறிப்பிட்டார். தான் ஒரு பெண்ணாக இருப்பதும் 'தடை' என்றார். இது தப்பான கருத்து. சைவ சமயமோ இந்து மதமோ சில இதர சமயங்களைப் போல இறுக்கமான விதிமுறைகளைக் கொண்ட சமயமல்ல. மிகவும் நெகிழ்வுடைய விதிமுறைகளே நடைமுறையில்

இருக்கின்றன. பார்ப்பனர் அல்லாதோர் பூசுசர்களாக விளங்கும் புகழ்பெற்ற சைவத் தலங்கள் எமக்குத் தெரியாதா? கதிர்காமம் என்றால் என்ன செல்வச் சந்நிதி என்றால் என்ன பல்லாயிரக் கணக்கில் பக்தர்கள் வணங்கும் தலங்கள் தானே! இதேபோல பெண்களே பூசை செய்யும் மேல்மருவத்தூர் அம்மனை வழிபட நாள்தோறும் ஆயிரக்கணக்கில் அடியார்கள் செல்கிறார்களே. இந்தக் கோவில்கள் ஆகமங்களுக்கு விதிவிலக்காக இயங்கும் கோவில்கள். எமது சமய நிறுவனங்களும் விரும்பின தீர்மானங்களை நிறை வேற்றி ஆகம விதிகளை மூட்டை கட்டி வைத்துவிட்டு யாரையும் அர்ச்சகர்களாக நியமிக்கலாம், முற்றாக விலத்தியும் விடலாம். தீர்மானம் நிறைவேறுவது என்பது எண்ணிக்கையை ஈட்டுவது தானே. சமயமோ தடை செய்யாது. ஆனால் ஆகம விதிகளுக்கு ஏற்பக் கோவில் செயல்படுகின்றது எனச் சொல்லிக் கொண்டு முரண்படச் செயற்படுவதுதான் அபத்தம்.

### ஆலயம் அவசியம்தானா?

இறைவன் எல்லாம் வல்லவன், எங்கும் நிறைந்தவன் என்றால் இறை வழிபாட்டுக்கென தனி ஆலயங்கள் அமைவது அவசியம் தானா? என்ற கேள்வியையும் சிலர் எழுப்புவார்கள், ஒருவர் வதியும் வீட்டையும் பயிலும் கல்விக் கூடத்தையும் தொழில் புரியும் இடத்தையும் ஆலயமாகக் கொள்ளலாம்தான். ஆனால் அவை எதுவும் தொழுகைக்கு என்றே அமைந்த இடங்கள் அல்ல. ஆண்டவனுக்கென்றே அர்ப்பணிக்கப்பட்ட இடம் ஆலயம். ஆன்மாக்கள் (ஆ) இறைவனில் லயிக்கும் இடம் ஆலயம் என்று பொருள் கொள்ளப்படுகிறது. அத்தகைய இடத்தில் தூய்மையைப் பேணுவதும் அன்பை வளர்ப்பதும் சுலபம். தூய்மையும் அன்பும் இறைவனின் உறைவிடம். ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பது அவ்வையார் வாக்கு. மனதை ஒருமுகப்படுத்தி இறைவனை வணங்க ஆலயத்தைவிடச் சிறந்த இடம் வேறில்லை. தனது ஆன்மிக வளர்ச்சிக்கு ஆலயம் தேவை இல்லை என ஒருவர் சொன்னால் அவ்வாறு அவர் சொல்வது ஒன்றில் அவரின் ஆன்மிக முதிர்ச்சியைக் குறிக்கும்; அல்லது அவரின் அறியாமையின், ஆணவத்தின் திரட்சியைக் குறிக்கும். இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட நிலை ஒன்றில்லை எனத் துணிந்து சொல்லலாம். ஆலயங்கள் எமது சைவ சமயத்தில் மிக மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றன என்பதற்கு

"மாலற நேயமும் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே..."

என மெய்கண்டார் இயற்றிய சிவஞானபோதத்தைத் தவிர வேறும் சான்றும் வேண்டுமா?

(தொடரும்)

# No Sign of Mum

It was midday and I was playing a video game, 'Fifa 07.' I was so engrossed in the game that my eyes were fixed on the T.V. "Do you want to come shopping with me?" asked Mum.

I didn't answer.

Then Mum repeated, "Do you want to come shopping with me?"

"I don't know!" I replied without looking at Mum.

"Oh, I forgot. You have to come. Dad is going to his friend's house."

"Can I go with Dad?" I asked.

"No, because some of the people there are four times your age," Mum said as she grabbed the car keys.

I got dressed and jumped into the car. Then I leaned over and put some rap music on full blast. "I like that. Just put that back," the radio blasted. Mum hopped into the car and put the key into the ignition and turned the rap music off. "Oh, Mum," I whined.



"Lets put some country music on," Mum said with glee.

"Mum, you always put country music on. It should be my turn," I complained.

"No, you always put your music on," Mum said. Then Mum started up the car with a brum and off we went through the silent road.

Finally, we reached the shops. I swung the door open and hopped out. Mum and I walked to the entrance of the shop. When I was in the shop noise filled my ear. First we went to Woolworths. When we entered I told Mum "that I would be at the lollie section." So I ran as fast as I could to lollie section.

Mum went to the patisserie section. A few minutes later I finished looking at the lollies and ran to the patisserie section

which I thought Mum would be in. She wasn't there. My heart was thumping.. "Where's Mum?" I asked myself. I did a slow three - sixty turn while looking for Mum. She was nowhere in sight. I was shaking like jelly. My pupils grew bigger as I searched for Mum. I was running everywhere as if I was lost in the Amazon. People were staring at me as if I was running for exercise. I searched alley by alley trying to look for Mum. I thought Mum was going home leaving me here in this massive shop.

I kept looking but she was nowhere. I stood still in one spot trying to think where Mum could be but bad thoughts rushed through my mind. Then, in a flash I rushed to the counter to see if she was there and yes she was. All my nervous feelings flowed away when I quickly ran to Mum. I looked at her face.

"What? Nooooooooooooooooooooooo!"

by *Sanjeyan Sivaananthan*

---

## கை வைத்தியம்:

* மூட்டுகளில் வலி ஏற்பட்டால், ஆமணக்கெண்ணையும் வேப்பெண்ணையும் கால், கை மூட்டுகளில் பூசிவர வலி குணமாகும்.
* இருமல், சளி, மூச்சுவாங்கல் முதலியவற்றிற்கு தூதுவளை ரசம் மிகவும் பயன்தரும்.
* வேர்க்கொம்பு (சுக்கு) அல்லது இஞ்சி சாப்பாட்டுடன் சேர்த்துக் கொண்டால் உடலில் வெப்பம் அதிகரிக்கும்.
* தக்காளிச்சாறு அல்லது பப்பாளிச்சாறு அல்லது வாழைப் பால் எடுத்து முகத்தில் பூசி அரைமணிநேரம் ஊறவிட்டு பின்னர் கழுவிவிட முகச்சுருக்கம் எடுபடும், முகம் காய்ந்து போவதையும் தவிர்க்கலாம்.

– சிசு

# இஞ்சியின் சிறப்பு

**உ**ணவுகள் தயாரிப்பதில் இஞ்சியைச் சேர்த்துக் கொள்ளுகிறோம். அது வாசனைக்காக மட்டுமல்ல. அதில் உடல் வியாதிகளைச் சுகப் படுத்தும் மருத்துவக் குணங்களுமுண்டு. வயிற்றில் உண்டாகும் பிரச் சினைகளுக்கு உணவுடன் இஞ்சியைச் சேர்த்துக்கொண்டால் அவை தீரும். வெயில் காலத்தில் உடலைக் குளிர்மையாக வைத்திருக்கும். இஞ்சி சேரும் உணவுகளில் இஞ்சிச்சம்பல் சுலபமாகத் தயாரிக்கக் கூடியது.

**இஞ்சிச்சம்பல்:**

இஞ்சி - கால் கிலோ
பச்சைமிளகாய் - 5
நல்லெண்ணை - 3 மே. கரண்டி
சிறுசீரகம் - 1 மே. கரண்டி
உப்பு - தேவையான அளவு
கடுகு - கொஞ்சம்
சர்க்கரை - அரைக் கப்.
ஒரு தேசிக்காய்
கறிவேப்பிலை - 1 அலகு

இஞ்சியைத் தோல் நீக்கி, சிறு துண்டுகளாக நறுக்கவும். புளியை நீர்விட்டு ஊற வையுங்கள். பச்சைமிளகாயையும் நீட்டாக நறுக்கவும். சட்டியில் விட்ட எண்ணை சூடேறியதும் கடுகைப் போடவும். அது வெடிக்கும்போது சீரகம், மிளகாய், இஞ்சி, கறிவேப்பிலையைப் போட்டுக் கிளறவும். பின்னர் கரைத்த புளியை ஊற்றி, உப்பையும் போட்டு 10 நிமிடம் கொதிக்கவைக்கவும். சர்க்கரையைச் சேர்த்து, நெருப்பைக் குறைத்து, வாசம் வரும்வரை மெல்லிய நெருப்பில் விட்டுவைக்கவும். 3 நிமிடத்துக்குப் பிறகு இறக்கியதும் இஞ்சி சம்பல் தயார்!

– சிசு



சிறுகதை

# நல்லரசிகள்

**கா**லை எழுந்ததிலிருந்து வீணாவுக்கு உடம்பு அசதியாகவும், காய்ச்சல் வரும் போலவும் இருந்தது. முதல் நாள் எதிர்பாராமல் மழை வந்ததால் நன்றாக நனைந்து விட்டாள். காலையில் கடும் வெயில் கொளுத்தியது. மாலையில் மழை வருமென்று யார் நினைத்தார்கள். அதனால் அவள் கையில் குடையை எடுத்துச் செல்லவில்லை. அவளது ஆறு மாதக் குழந்தை ஹரிணிக்கும் இரண்டு நாட்களாக நல்ல சுகமில்லை. ஆனாலும் மகன் ஹர்ஷனையும் அவன்தான் பாலர் பாடசாலைக்குக் கூட்டிக்கொண்டு போகவேணும். அவளது கணவன் வெங்கட் வேலை விஷயமாக வெளிநாடு போயிருந்தான். வருவதற்கு இன்னும் இரண்டு மூன்று நாட்களாகலாம். அவளுக்கு வேறு யாரும் துணை இல்லை. உதவிக்குக் கூப்பிடுவதானால் அவள் சினேகிதி ஆதர்ஷாவைத் தான் கூப்பிட வேணும். அவள் பாவம் தன் குடும்பம், குழந்தை, வேலை என்று அவளுக்கு அவளது கஷ்டங்கள். என்ன கஷ்டம் என்றாலும் ஒரு சொல் சொன்னால் எப்படியாவது வந்து விடுவாள். கஷ்டமாக இருந்தது என்று சொன்னாலும் ஏன் சொல்ல வில்லை என்று கோபித்துக் கொள்வாள். வீணா எப்பொழுதும் தன்னால் முடிந்தவரை முயல்வாள். இடுப்பு ஒடிந்து விழப்போகும் சமயத்தில்தான் உதவியை அழைப்பாள். அது எப்போதும் அவள் சுபாவம்.

அதனால்தானோ என்னவோ அவள் பெற்றவர்கள் அண்மையில் இருந்தும் அவளைக் கவனிக்காமல் இருக்கின்றார்கள். அதை நினைத்தால் வீணாவுக்கு வேடிக்கையாகவும், சில சமயம் வேதனை யாகவும் இருக்கும். அவர்கள் ஏன் அப்படி நடந்து கொள்கின்றார்கள் என்பது அவளுக்குப் புரியவில்லை. சத்தமில்லாமல் மழை வந்தது போலத்தான் அவள் பெற்றோரும் அவள் மேல் சத்தமில்லாமல் கோபித்துக் கொண்டார்கள். ஒரே மகளான அவளை ஒரேயடியாகத் தலை முழுகிவிட்டார்கள்.

வீணா பிறந்து வளர்ந்ததெல் லாம் அவுஸ்திரேலியாவில்தான். அவளது பெற்றோர் ஆதியில் புலம் பெயர்ந்தவர்கள் எனலாம். அவள் தந்தை படிப்பதற்காகப் புலமைப் பரிசிலில் வந்தவர்கள் அப்படியே நின்று விட்டார்கள். இங்கு வந்தபின் அவுஸ்திரேலியா அவர்களைச் சுவீகரித்தது போல அவர்களும் அவுஸ்திரேலிய நாகரி கத்தையே முழுமையாகச் சுவீக ரித்துத் தம்மை முற்றிலும் மாற்றிக் கொண்டனர். அவர்களின் நண் பர்கள், கலந்து பழகுபவர்கள் எல்லாம் அவர்களைப் போலவோ அல்லது ஆங்கிலேயராகவோதான் இருந்தனர். அதனால் வீட்டிலும் ஆங்கிலம்தான் பேசினர். பழக்க வழக்கங்கள் எல்லாம் ஆங்கிலேய முறையாகவே இருந்தது. வீணாவின் பெற்றோர்களான கெங்காதரனும், சாவித்திரியும் தமது அடையாளங் களை முழுவதுமாக அவுஸ்தி ரேலிய மண்ணில் விட்டுவிட்டனர். வீணாவுக்குப் பெயர் மட்டும் தான் இருந்தது. பெயரையும் நிறத்தையும் கவனிக்காமல் பார்த் தால் அவள் ஓர் ஆங்கிலேயப் பெண் போலவே இருந்தாள். அவளது பெற்றோர் எந்த விதத்திலும் அவளுக்கு அவளது அடையாளத்தை அறிமுகம் செய்ய வில்லை. அவளது வேர்களையும் காட்டவில்லை. வீணா இதுவரை தன் தாய் மண்ணை மிதிக்கவும் இல்லை.

அதிர்ஷ்டவசமாகப் பல்கலைக் கழகத்தில் வீணாவுக்கு ஆதர்ஷா வின் நட்பு கிடைத்தது. அவளது பழக்கவழக்கங்கள், பண்பாடு களைப் பார்த்து வீணா வியந்தாள். ஆதர்ஷா 'இன்று வெள்ளிக்கிழமை, மாமிசம் சாப்பிடமாட்டேன்' என்பாள். இன்னொரு நாள் சரஸ்வதி பூசை என்பாள். வீணாவுக்கு எல்லாம் புதிராக இருக்கும். 'நாங்களும் இந்துக்கள் தானே, எனக்கு இதெல்லாம் தெரியாதே' என்று கூறுவாள். 'இதையெல்லாம் உன் பெற்றோர் காலப்போக்கில் மறந்திருக்கலாம். இங்கு எல்லாம் வித்தியாசம் தானே' என்று சொல்வாள்.

ஆதர்ஷா - வீணா சினேகி தத்தை ஆதர்ஷாவின் அம்மா சங்கரி அவ்வளவாக விரும்ப வில்லை. 'அவளும் அவள் நடை உடையும், அவள் சினேகிதம் உனக்கு வேண்டாம்' என்று கண்டித்தார். ஆனால் ஆதர்ஷா வுக்கு அவளது அறியாமையும், வெகுளித்தனமும் பிடித்திருந்தது. அவள் ஒரு எடுப்பார் கைப் பிள்ளை. இந்தப் பிள்ளையை நான் எடுத்தால் என்பக்கம் சார்ந்துவிடும் என ஆதர்ஷா வுக்குப் புரிந்தது. அதனால் தாயிடம் 'வீணா பாவம், அவள் விரும்பி எதையும் செய்யவில்லை. அவளுக்குத் தெரிந்ததெல்லாம் மேலை நாகரிகமும் பண்பாடும் தான். இது காட்டில் மான் களுடன் வளர்ந்த புலிக்குட்டி தாவரபட்சிணி ஆனது மாதிரித் தான். அவளுக்கு நமது விழுமியங் களையும் பழக்க வழக்கங்களையும் அறிய ஆவல்' எனக் கூறிச் சம்மதம் பெற்றாள்.

–சாயிசசி

வீணாவுக்கு வீட்டில் வெளியே போய் வருவதற்கு எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லை. எங்கே போனாய், எப்போ வருவாய் என்று வீட்டில் யாரும் அவளிடம் கேட்பதில்லை. அதனால் விரும்பிய போது ஆதர்ஷாவுடன் கோவில், பஜன் என்று சமய சம்பந்தமான பல வைபவங்களுக்கும் போனாள். ஆரம்பத்தில் தன்னிடம் புடவையோ, சுரிதாரோ இல்லையே என வருந்தியவள் பின்னர் அவற்றைத் தேடி வாங்கி அணிந்து கொண்டு மிகவும் மகிழ்ச்சியாகத் தோழியுடன் எல்லா இடங்களுக்கும் சென்றாள். அங்கே அவள் இது வரைதான் அறியாத பல விஷயங்களை அறிந்தபோது தன் வாழ்வின் ஒரு பகுதி வீணாகிவிட்டதென வருந்தினாள். அவளது பெற்றோர் வேடிக்கைகள், களியாட்டங்கள், இரவு விருந்துகள் எனப் போய் அவைதான் உயர்மட்ட வாழ்க்கை என நம்பி ஏமாந்து வாழ்வையே வீணாக்கிக் கொண்டிருக்கின்றார்கள். உணவு, உடை, நண்பர்கள் என எதிலுமே கவனம் செலுத்தாததால் நாளுக்கு நாள் அவர்களின் உடல்நிலையும் சீரழிந்து போகிறது என வருந்தினாள்.

ஆனால் அவர்கள் யார் சொல்லையும் கேட்கும் நிலையில் இல்லை. தாம் செய்வதுதான் சரி என்ற பிடிவாதத்துடன் இருந்தார்கள். வீணாவுக்கு இப்பொழுதெல்லாம் அவர்களுடன் விருந்துகளுக்குப் போவது கசந்தது. அதனால் ஏதாவது சாக்குச் சொல்லி அவற்றைத் தவிர்த்தாள். ஆதர்ஷாவுடன் இந்து சமயத் தத்துவங்கள், விழுமியங்களை அவ்வப்போது அளவளாவினாள். அதன்பின் ஆர்வம் மேலீட்டால் பல புத்தகங்களைத் தேடிப் படித்தாள். 'அன்பே தெய்வம்', 'எல்லோரிடமும் அன்பாயிரு' போன்ற தத்துவங்களையும், 'சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை' என்ற விழுமியங்களையும் படித்துத் தெரிந்து கொண்டாள். அத்துடன் சாத்வீகம், ராஜசம், தாமதம் என்ற மனிதனின் முக்குணங்களையும், ஒரு மனிதனின் குணம் அவன் உண்ணும் உணவிலும் தங்கியுள்ளது எனவும் அறிந்தபின் தாவர போசனம்தான் மிகச் சிறந்தது எனத் தெரிந்து தன்னை மாற்றிக்கொண்டாள். முன்னரெல்லாம் ஆதர்ஷா வீட்டுச் சாப்பாடு அவளுக்குப் பிடிக்காது. இவற்றை எப்படி உண்கின்றார்கள் என வியந்திருக்கின்றாள். ஆனால் இப்பொழுது அது அவளுக்கு அமிர்தமாக இருந்தது. மகிழ்வுடன் ஏற்றாள்.

**ஆ**தர்ஷா வீட்டில் நடந்த சமயச் சடங்கொன்றில்தான் அவள் வெங்கட்டை முதன் முதலாகச் சந்தித்தாள். ஆதர்ஷாவின் அண்ணனின் நண்பனாக அவன் அறிமுகமானான். பார்த்ததும் வீணாவுக்கு ஏனோ அவனைப் பிடித்தது. அத்துடன் அவன் அவளது மற்றைய நண்பர்களிடமிருந்து வேறுபட்டவனாக இருந்தான். அவனது அமைதியும் மிருதுவான பேச்சும், எதையும் ஆராய்ந்து



மிகவும் கவனமாக அணுகும் முறையும் அவளை மிகவும் கவர்ந்தது. அங்கே ஓரிடத்தில் தனித்து மிரண்ட பார்வையுடன் இருந்த வீணாவிடம் அவன் பேச்சுக் கொடுத்துத் தனது வேடிக்கைப் பேச்சுக்களால் அவளைச் சகஜ நிலைக்குக் கொண்டு வந்தான். வீணா இப்படியான சமயச் சார்பான வைபவங்களெல்லாம் தனக்குப் புதியவை எனத் தன் நிலையை அவனுக்கு விளக்கினாள்.

"அதனாலென்ன, நீங்கள் பயப்படாமல் சகஜமாக இருக்கலாம். இங்கு யாரும் உங்களை எதுவும் செய்யச் சொல்லிக் கேட்க மாட்டார்கள். எல்லோரையும் போல நீங்களும் வேடிக்கை பார்க்கலாம். சமயச் சடங்குகள் தெரிந்தவர்கள் செய்யவேண்டியதைச் செய்வார்கள்" எனக் கூறினான். பின், "ஆனாலும் நான் நினைக்கிறேன் வீணா, உங்களுக்குக் கட்டாயம் ஒரு வேலை இருக்கும்" என முகத்தைத் தொங்க வைத்துக் கொண்டு கூறினான். பயந்த வீணா "அது என்ன வேலை? நான் எப்படிச் செய்வது?" எனக் கேட்டாள். "ஏன், ஆதர்ஷா எதுவுமே சொல்லவில்லையா?" என முகத்தில் எந்தவித சலனமுமின்றிக் கேட்டான். "இல்லை. இப்போ நான் என்ன செய்வது. வந்துவிட்டு இடையில் போவதும் சரியில்லையே!" என வீணா பதறினாள். "அது ஒன்றும் கஷ்டமான வேலை இல்லை வீணா. எல்லாம் முடிந்தபின் கடைசியாகத்தான் கூப்பிடுவார்கள்" என்றான். "அதென்ன?" என வீணா வெகுளித்தனமாக அவனிடம் கேட்டாள். "இதென்ன வீணா இத்தனை வயசுக்கு எத்தனை விழாக்களுக்குப் போயிருப்பாய். விழா முடிந்தபின் வழக்கமாக என்ன நடக்கும்?" எனக் கேட்டான். விழா முடிந்த பின் என்ன எனச் சிந்தித்த வீணா "சாப்பாடு" என்றாள். "ஆமாம் அதுதான்" என நமட்டுச் சிரிப்புச் சிரித்தான். வேடிக்கைக் கோபத்துடன் அவனுக்கு அடிக்கக் கையை ஓங்கினாள்.

அப்பொழுது அங்கு வந்த ஆதர்ஷாவின் அண்ணா வத்ஸன், "இங்கே என்ன செய்கிறாய் வெங்கட். உன்னை அங்கே பாடக் கூப்பிடுகின்றார்கள்" என அழைத்தான். அவளிடம் விடை பெற்றுச் சென்றவன் அந்த பஜன் குழுவில் ஒருவனாகப் பஜன் பாடியபோது அவனது சங்கீத ஞானத்தைப் பார்த்து வீணா வியந்து நின்றாள். அதன்பின் அவர்கள் சந்திப்பு அடிக்கடி நடந்தது. அவனுக்காக அவளும் அவளுக்காக அவனும் ஏதாவது சாட்டுச்சொல்லிக் கொண்டு ஆதர்ஷா வீட்டில் ஆஜரானார்கள். நாளடைவில் ஆதர்ஷா 'எங்கள் வீடு ஒரு சந்திப்பு மையமாகிறது போல் தெரிகிறது' எனக் கேலி செய்தாள். ஒன்றுபட்ட இரு மனங்களும் அதை ஏற்று நாணித்தலை கவிழ்ந்தன.

அவர்களின் காதலுக்கு வெங்கட் வீட்டில்தான் எதிர்ப்பு வருமென எல்லோரும் பயந்தனர். ஆனால் வெங்கட்டின் தந்தை 'உனது விருப்பம். உன் வாழ்வை நீதான் தீர்மானிக்க வேண்டு'மென மிகவும் பெருந்தன்மையாகக் கூறினார். ஆனால் எதிர்ப்பு புயல் மாதிரி வீணாவின் அம்மாவிடமிருந்து வந்தது. அதை அவளது தந்தையும் ஆதரித்தார்.

பூவுடன் சேர்ந்த நாரும் மணம் பெறும் என்பது போல ஆதர்ஷாவினதும் வெங்கட்டினதும் சேர்த்தியால் வீணாவிடம் இப்பொழுது இந்து கலாச்சாரம் மணத்தது. வீணா தான் வளர்ந்த சூழலிலிருந்து முற்றிலும் மாறான ஒரு பெண்ணாக மாறியிருந்தாள். இதையெல்லாம் பார்ப்பதற்கோ கவனிப்பதற்கோ வீணாவின் அம்மாவுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. வீணா அவள் தாயைப் பார்த்துப் பல நாட்களாகிவிட்டன. அதுபற்றி வீணா சிறு வயதில் கலங்கியிருக்கிறாள். இப்பொழுது அதெல்லாம் அவளுக்கும் பழகிவிட்டது. மூன்று தனி மனிதர்கள் ஒரு வீட்டில் வசிப்பது போலத்தான் அவர்கள் வாழ்ந்து வந்தனர். தேவைப்பட்டால் தொலைபேசியில் பேசிக்கொண்டனர்.

ஆனால் அன்று என்னவோ அதிசயமாகச் சாவித்திரி வீட்டில் இருந்தாள். கோவிலுக்குப் போவதற்குப் புடவையில் ஆயத்தமாகி வெளியே வந்த மகளைப் பார்த்து வியந்து நின்றாள். ஆனாலும் "இது என்ன உடை வீணா? இந்த உடையில் நீ எங்கே போகிறாய்?" என வியப்புடன் கேட்டாள். "என்னம்மா, புடவை மறந்து போய்விட்டதா?" எனக் கேட்டவள், "கோவிலுக்குப் போகிறேன்" என்று சொல்லிக் கையிலிருந்த தொலைபேசியின் இலக்கங்களை அழுத்தி "வெங்கட், நான் தயாராகிவிட்டேன். நீ வீட்டுக்கு வா. இன்று என்னவோ அதிசயமாக அம்மா வீட்டில் இருக்கிறார். நான் உன்னை அறிமுகம் செய்கிறேன்" எனச் சொன்னாள். "மாமியாரிடமா? பயமாக இருக்கு வீணா. இன்னொரு நாள் பார்க்கலாமே!" எனக் கெஞ்சினான். "இப்படியே பயந்து கொண்டிருந்தால் எங்களுக்கு அறுபதாம் கல்யாணம் தான் நடக்கும்" என்று கேலி செய்தாள். அவனும் வழமை போல "அதற்கென்ன நல்லதாய்ப் போச்சு" என்றான். "போதும் விளையாட்டு, உடனே வரவும்" எனக் கண்டிப்பாகச் சொல்லித் தொலைபேசியைத் துண்டித்தாள்.

வெங்கட்டும் வடஇந்தியக் குர்தா உடையில் வந்திருந்தான். அதைப்பார்த்த சாவித்திரி முகம் சுழித்தாள். பின் "இன்று கோவிலில் என்ன விசேஷம்?" எனக் கேட்டவள் "நீங்கள் எல்லாம் இளம் பிள்ளைகள் இப்படிக் கோவில் குளமென்று பட்டிக் காட்டுத்தனமாக அலையலாமா? பார்ட்டி, கிளப் எனப் போய் வாழ்க்கையை அனுபவிக்க வல்லவா வேணும்" என்றாள். "கோவிலிலும் அனுபவிக்க நிறைய இருக்கு ஆன்ட்டி" எனக் கூறியவன் அங்கு நின்றால் பிரச்சனை என நினைத்து "வீணா போவோமா?" எனக் கேட்டு "பை ஆன்ட்டி" எனக் கூறிப் போனான்.

வீணாவுக்கு அவர்களின் உரையாடல் வேடிக்கையாக இருந்தது. ஆனால் வெங்கட் பயந்தான். சாவித்திரியின் உடையும், வயதில் சிறியவன் என்றாலும் ஓர் அந்நிய ஆடவன் முன்னால் கால் மேல் கால் போட்டு இருந்த விதமும் அவனுக்கு எதுவோ உறுத்தலாக இருந்தது. அவன் தாய் அவனது நண்பர்கள் முன்னாலேயே மிகவும் பவ்வியமாகத்தான் வருவார். ஆழமறியாமல் காலை விட்டுவிட்டேனோ என்று நினைத்தான். ஆனால் இப்பொழுது வீணா அந்தச் சூழலுக்கு மிகவும் ஒவ்வாதவளாகத் தோன்றினாள். அவளை அதிலிருந்து மீட்க வேண்டுமென நினைத்தான்.

**அ**ன்று வீணா கோவிலிலிருந்து வீட்டுக்கு வந்தபோது சாவித்திரி மகளை எதிர்பார்த்துக் காத்திருந்தாள். வீணாவுக்கு அது வியப்பாக இருந்தது. "என்னம்மா தூங்கவில்லையா?" எனக் கேட்டாள். "உன்னிடம் பேசவேண்டும். அது தான் காத்திருந்தேன். என்ன வேஷம் இதெல்லாம் வீணா? சுத்த அநாகரிகம். இந்தப் புடவை எல்லாம் எங்கே வாங்கினாய்?" எனக் கேட்டாள்.

"புடவை ஒன்றும் அநாகரிகம் இல்லை அம்மா. அதுதான் எங்கள் பண்பாடு. நீங்கள் மேலை நாகரிக மோகத்தில் அதையெல்லாம் மறந்தால் என்னசெய்வது? என்ன செய்தாலும் நாம் தமிழர் என்ற அடையாளம் ஒரு நாளும் மாறாது. கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தில் தோன்றிய மிகப்பழமை வாய்ந்த நம் பண்பாட்டைக் கடைப் பிடிப்பதுதான் நமக்குப் பெருமையே அல்லாமல் அதை இழிவு செய்வதல்ல. அப்படிச் செய்வதால் நீங்கள் உங்களைத் தான் இழிவுபடுத்துகின்றீர்கள். புடவை அணிந்து கோவிலுக்குப் போய் இறைவனை வணங்குவதில் எனக்கு எந்தவிதமான அவமானமுமில்லை" என்றாள்.

சாவித்திரிக்குக் கோபம் தலைக்கேறியது. "போதும், நிறுத்து வீணா" எனக் கத்தினாள். பின், "நான் லண்டனிலிருந்து மிக உயர்ந்த மாப்பிள்ளை உனக்குப் பார்த்திருக்கின்றேன். அவர்கள் நாகரிகமானவர்கள். நீ இப்படிப் புடவை கட்டி பூச்சூடி கிராமப்புறமாக இருந்தால் கிரீஷ் உன்னை மணக்க மாட்டான்" என்றாள். "மிகவும் நல்லது. என்னைக் கேட்காமல் எப்படி நீங்கள் எனக்கு வரன், அதுவும் லண்டனில் பார்க்கலாம். நான் அங்கெல்லாம் போக மாட்டேன். நான் வெங்கட்டை மனப்பூர்வமாகக் காதலிக்கிறேன். அவரைத்தான் நான் மணப்பேன்" எனக் கூறிவிட்டு உள்ளே போய்க் கதவைத் தாழிட்டாள்.

வெளியே சாவித்திரி "அவனையா? அவனும் அவனது விபூதிப்பட்டையும். கிரீஷின் கால்

தூசிக்கும் வரமாட்டான். உன் அப்பா வரட்டும் எல்லாம் பேசுகின்றேன்" எனச் சத்தம் போட்டாள். இதெல்லாம் நடக்கும் என எதிர்பார்த்ததால் வீணா அன்று அமைதியாகத் தூங்கினாள். ஆனாலும் மனம் நிறைந்தவனைத் தாயார் அவமரியாதையாகப் பேசியது அவளுக்கு வேதனையாகத்தான் இருந்தது. ஆனால் அது அம்மாவின் அறியாமை என நினைத்தாள். பண்பான ஆங்கிலேயர் தவறாமல் சர்ச்சுக்குப் போய்ப் பிரார்த்தனை செய்து, இல்லாதவர்களுக்குத் தம்மால் முடிந்த உதவிகள் செய்வதை வீணா பார்த்திருக்கிறாள். அவர்கள் இப்படிப் பார்ட்டிகள், கேளிக்கைகள் என வாழ்க்கையை வீணாக்க மாட்டார்கள். ஆனால் அவள் பெற்றோர் கண்ட நாகரிகம் வேறுவிதமாக இருந்தது. அவளுக்கு அது மிகவும் வேதனையாகவும் புதிராகவும் இருந்தது.

வீணா தந்தையிடமிருந்தும் ஒரு புயலை எதிர்பார்த்தாள். ஆனால் அவர் வெங்கட் பற்றி எதுவுமே கேட்கவில்லை. அது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆனால் ஒரு கிழமையின் பின் 'சுனாமி'யே வந்து அவள் முழு அமைதியையும் தகர்த்துச் சுக்கு நூறாக்கி அவளைக் கதிகலங்க வைத்தது.

**அ**ன்று அதிகாலை வேலைக்குப் போக ஆயத்தமாகிக் கொண்டிருந்த வீணாவுக்கு என்றும் இல்லாத திருநாளாகக் கீழ்வீட்டிலிருந்து வந்த சத்தங்கள் வியப்பளித்தன. ஆயத்தமாகி இறங்கிய வீணாவை "ஹாய் வீணா நான் கிரீஷ்" எனக் கூறி ஒருவன் கையை நீட்டினான். அவனைக் கண்டு அதிர்ந்த வீணா அதிலிருந்து ஒருவாறு மீண்டு அவனது கையைக் கவனிக்காத மாதிரி வெறும் ஹாய் உடன் தப்பியோட நினைத்தாள். ஆனால் அங்கு வந்த தந்தை "வீணா என்ன இது கிரீஷ் உடன் எதுவும் பேசாமல் போகிறாய். அவன் முதன்முதலாக அவுஸ்திரேலியா வந்திருக்கிறான். அவனுக்கு நீ தான் எல்லா இடங்களும் சுற்றிக் காட்ட வேணும்" என்றார்.

வீணாவுக்குச் சினமாக இருந்தது. வெங்கட்டின் சாந்தி தவழும் முகமெங்கே, இவனது கரடுமுரடான வதனமெங்கே? இதுவும் லண்டனில் யாரோ அடையாளத்தை அடகு வைத்தவர்களுக்குப் பிறந்தது போலும். அப்படியே காட்டுச் செடியாகவே வளர்ந்து நிற்கிறது. இதனிடம் என் வாழ்வு ஒப்படைக்கப்பட்டால் அதன் முள்ளே என்னைக் குத்திக் குதறிவிடும் என நினைத்தவள், தந்தையை அவமதிக்க விரும்பாமல் "கிரீஷ் ஒய்வெடுக்கட்டும் அப்பா. அவரை நான் மாலையில் சந்திக்கிறேன். இன்று ஆபீஸில் அவசர கூட்டம் இருக்கிறது. கட்டாயமாகப் போக வேணும்" என்று சொல்லிப் போனாள்.

மாலையில் என்ன செய்யலாம் எனத் தெரியவில்லை. இந்தத் தண்டம் வீட்டில் இருந்தால் நிலைமை என்னவாகுமென்றும்



அவளுக்குப் புரியவில்லை. அழுகை அழுகையாக வந்தது. பேசாமல் கிணற்றுத் தவளையாகவே அம்மா அப்பா காட்டிய அந்த உலகத்துள் இருந்திருக்கலாம். இந்த ஆதர்ஷாவை, அதன்பின் வெங்கட்டை எல்லாம் ஏன் சந்தித்தேன்; நல்லது கெட்டதை ஏன் தெரிந்து கொண்டேன் என நினைத்து வருந்தினாள். அவளது பண்பு கொண்ட உள்ளம் வீட்டுக்கு வந்த ஒருவரை அவமதிக்கவும் விரும்பவில்லை. ஒரு பார்வையிலேயே ஒருவரின் குணநலன்களை எடை போட முடியாது. எதற்கும் மாலையில் போய் அவனுடன் பேசிப் பார்ப்போம் என நினைத்தாள். வெங்கட்டை போனில் கூப்பிட்டு "ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி தெரியுமோ? எனக்கு மாப்பிள்ளை வந்தாச்சு" என வேடிக்கையாகச் சொன்னாள். "அப்ப நான் இனி தேவதாஸ் மாதிரி அலைய வேண்டியதுதான்" என அவனும் மிகவும் சோகமானவன் மாதிரி நடித்தான். பின் இருவரும் என்ன செய்வதெனச் சிந்தித்து, வீணா போவது தான் சரி, ஆனால் என்ன தேவையென்றாலும் உடனே வெங்கட்டை அழைப்பதெனத் தீர்மானித்தனர்.

வீணா மாலையில் வீட்டுக்குப் போனபோது வீட்டில் யாருமில்லை. எல்லோரும் எங்கேயோ போயிருந்தார்கள். வழமை போல் அவளுக்கு எந்தத் தகவலும் இல்லை. வீணாவுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. கடவுள் தன்னைக் காப்பாற்றிவிட்டார் என நினைத்துக் கண்ணெதிரே தெரிந்த முருகன் படத்துக்கு ஒரு கும்பிடு போட்டாள். பின் தன் வேலைகளை முடித்துக்கொண்டு நிம்மதியாக உறங்கப் போனாள். மனத்தில் எதுவோ ஒரு உறுத்தல் இருந்ததால் படுப்பதற்கு முதல் கதவைத் தாழிட்டாள். வீணா நன்றாக உறக்கத்தில் போன போது கதவு தட்டப்பட்டது. திடுக்கிட்டு விழித்தவள் "யார்?" என்று கேட்டாள். "நான் கிரீஷ். கதவைத் திற வீணா" என உளறினான். அவன் போதையில் இருக்கிறான் என்பது புரிந்தது. கடிகாரம் பன்னிரண்டு மணி காட்டியது. "நேரம் பன்னிரண்டு மணி. காலையில் பேசலாம்" என்றாள்.

"என்ன அவமானம் இது. நான் உன் புருஷனாகப் போகிறவன். கதவைத் திறவென்றால் திற" எனக் கதவை இடித்தான். அவளுக்கு அழுகை வந்தது. மௌனம் சாதித்தாள். அப்போது சாவித்திரி "என்ன பழக்கம் வீணா. கதவைத் திற" என்றாள். "முடியாதம்மா" எனக் கண்டிப்பாகக் கூறினாள். சலித்த சாவித்திரி "அவன் முடிவு செய்தால் மாற்ற முடியாது கிரீஷ். வா காலையில் பார்க்கலாம்" என அழைத்துச் சென்றாள். "என்ன பழக்கம் ஆன்ட்டி இது. எதுவும் சரியில்லை. நான் கூப்பிட்டால் பெண்கள் வரிசையாக ஓடி வருவார்கள். உங்கள் மகள் சரியில்லை. இங்கு வந்தது எல்லாம் வீண். நான் அந்த ஹோட்டலில்

நின்றிருக்கலாம்" என அவன் குழறுவது வீணாவுக்குக் கேட்டது.

வீணா துடித்துப் போய் விட்டாள். என்ன மாதிரி ஆள் அவன். இந்த அம்மாவும் அவனுடன் சேர்ந்துகொண்டு கதவைத் திறக்கச் சொல்கின்றார். திறந்திருந்தால் என்ன நடந்திருக்கும் என நினைத்தபோது அவள் உடல் நடுங்கியது. மறுநாள் காலையில் எதுவும் நடக்கலாம். ஆனபடியால் அவர்கள் போதை தெளிந்து எழுவதற்கு முதல் வீட்டை விட்டுப் போய்விட வேண்டும் எனத் தீர்மானித்துச் சில உடைகளையும் தனது அத்தியாவசியத் தேவைப் பொருட்களையும் எடுத்துக் கொண்டாள். வேலை விஷயமாக ஒரு கிழமைக்குக் கன்பரா போகிறேன்; பிறகும் கிரீஷ் நிற்கும் வரை வீட்டுக்கு வர மாட்டேன் எனப் பெற்றோ ருக்கு மறுநாள் இ—மெயில் அனுப்பவேணும் எனத் தீர்மானித்தவள் அதிகாலையிலேயே புறப்பட்டுப் போனாள்.

அவளுடன் வேலை செய்யும் மரீனா அண்மையில்தான் வீடு வாங்கியவள் அதில் ஒரு அறையை வாடகைக்கு விடப் போகிறேன் என்றும் சொல்லிக் கொண்டிருந்தாள். போகும் வழியில் அவளைக் கூப்பிட்டு 'அந்த அறையை எனக்குத் தருவாயா? இப்போது வரலாமா?' எனக் கேட்டாள். 'நீ வருகிறாயா வீணா. மிக்க மகிழ்ச்சி. உடனே வா' என்றாள். அன்று அலுவலகம் போவதில்லை. அங்கும் வந்தும் அம்மா ஏதாவது குழப்பம் செய்யலாம். நாகரிகம் என நினைத்து அநாகரிகமாக நடப்பவர்களை என்ன செய்யலாம். 'துஷ்டரைக் கண்டால் தூர விலகு' என ஔவையார் எப்போதோ சொல்லிவிட்டார். எனவே நாங்கள்தான் விலகி நடக்க வேண்டும் என நினைத்தாள்.

அங்கு போய்ச் சேர்ந்தபின் "நான் வீட்டை விட்டு வெளியேறி விட்டேன்" என வெங்கட்டுக்கு போன் பண்ணினாள். "அதற்குள்ளாகவா?" என அதிர்ந்த வெங்கட் "என்ன வீணா நடந்தது?" எனக் கேட்டான். இருக்கும் இடத்தைக் கூறியவள் 'முடிந்தால் வா, அல்லது மாலையில் சந்திக்கலாம்' என்றாள்.

அங்கே தனித்திருந்த வீணா சிந்தித்தாள். என்ன விந்தையான நிகழ்ச்சிகள் மாறி மாறி அவள் வாழ்வில் நடக்கின்றன. 'நம்மைக் கொண்டு நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கெல்லாம் நாங்களே பொறுப்பாளிகள் என்று நினைக்கிறோம். சில நிகழ்ச்சிகள் நமது நினைப்பையும் செயலையும் கொண்டு அமையும்போது அதை நாமே நடத்துவதாகவும் அவற்றிற்கு எதிராகவோ எமது விருப்பத்திற்கு மாறாகவோ நடப்பவற்றை நமது சக்திக்கு மீறி நடக்கின்றன என்றும் நினைக்கின்றோம். ஆனால் எந்த நிகழ்ச்சிக்குமே நாங்கள் பொறுப்பாளிகள் அல்ல என்று எங்கோ வாசித்ததை நினைத்து அவள் இதழ்கள் புன்னகையில் விரிந்தன. அப்போது அங்கு வந்த வெங்கட் "ஆஹா தனிமையில் இனிமையா? கதவையும் திறந்து போட்டுவிட்டு, நல்ல துணிவுதான் வீணா" என்றான். "இங்கே ஒன்றும் பயமில்லை என்று மரீனா சொன்னாள்" எனப் புன்னகைத்தவள் "உடனே வந்ததற்கு நன்றி வெங்கட்" எனக் கண்கலங்கினாள். "ஸ்ஸ் என்னம்மா இது" என அவள் கைகளை ஆதரவாகப் பற்றியவன் "தெரிந்தோ தெரியாமலோ இது நாங்களாக ஏற்படுத்திய சிக்கல். நாங்கள்தான் பிரிக்கவேணும். நீ என்ன திட்டத்துடன் இங்கு வந்தாய்?" எனக் கேட்டான்.

இரவு நடந்தவற்றைக் கூறியவள் அந்தக் கிரீஷ் வீட்டிலிருக்கும் வரை வீட்டுக்கு வரமாட்டேன் என இ-மெயில் அனுப்பப் போகின்றேன் என்றாள். "இன்னும் அனுப்பவில்லைத் தானே!" என அவசரமாகக் கேட்டவன் "அப்பா ஒரு யோசனை சொன்னார். நீ விரும்பினால் நாங்கள் அப்படிச் செய்யலாம்" என்றான். "என்னது?" என வியப்பாகக் கேட்டாள். "சில நாட்களுக்கு எந்தத் தொடர்பும் இல்லாமல் எங்காவது போய் இருக்கட்டாம். இங்கு நடக்கும் சலசலப்புக்களைத்தான் சமாளிக்கிறாராம். அது ஓய்ந்ததும் வரட்டாம்" என்றான்.

"அங்கிள் அப்படிச் சொன்னாரா? அது சரியா?" எனக் கேட்டாள். "என்ன இது நீ நண்பர்களுடன் பிக்னிக் போகவில்லையா? அப்படித்தான் இதுவும். என்ன சிறிது அதிக நாட்களாகலாம். நான் ரொம்ப நல்ல பிள்ளை அம்மா. தப்புத் தண்டா செய்ய மாட்டேன்" எனக் கூறினான். அவன் தலையைச் செல்லமாகக் கோதியவள் "பரீட்சித்துப் பார்த்தால் தானே எல்லாம் தெரியும்" என்று வேடிக்கையாகச் சொன்னாள். "வேணுமானால் ஆதர்ஷாவையும் கூட்டிக்கொண்டு போவோமா?" எனக் கேட்டான். "கிழிஞ்சுது போ, கழுதைதான் கெட்டது போதாதென்று ஓநாயையும் கெடுத்த கதைதான்" என்றாள். "இரு இரு செய்கிறேன். உனக்கு நான் என்ன கழுதையா?" என அவள் காதைத் திருகினான். "ஐயோ வலிக்குது, விடு வெங்கட்" எனக் கெஞ்சினாள். "அப்படி வா வழிக்கு" என்றவன் "போவோமா?" எனக் கேட்டான். "இப்போதேவா?" என வியப்புடன் அவனைப் பார்த்தாள். "ஆமாம். எல்லா ஆயத்தங்களுடனும்தான் வந்தேன். நீ வெளிக்கிட்டால் போகலாம். மரீனாவுக்கு வரச் சில நாள் ஆகும் என்று ஒரு கடிதம் வைத்துவிட்டு வா" என்றான். ஆனால் அவள் தொலைபேசியில் வெங்கட்டின் அப்பா சிவலிங்கத்தைக் கூப்பிட்டு "மிகவும் நன்றி அங்கிள்" எனக் குரல் தழுதழுத்தாள். "என்ன வீணா இது! என் பெண் ஒன்றுக்கும் கலங்கக்கூடாது. நான் எதற்கு இருக்கிறேன். எல்லாம்

பார்த்துக் கொள்கிறேன். சந்தோசமாகப் போய் வா" என்றார். அந்த அன்பில் தோய்ந்த அவள் கண்கள் நிறைந்து வழிந்தன. வெங்கட் அவளை அன்புடன் அணைத்துக் கொண்டான்.

காரில் போகும்போதுதான் "நாங்கள் எங்கே போகிறோம்?" என வீணா கேட்டாள். "ஆயிரம் மைல்கள் வடக்கே போகின்றோம். அங்கே விஸ்மோர் நகரம் ஒரு சிறந்த சுற்றுலாத் தலம். அதற்கு வானவில் நகரம் என்று பெயர். அங்கு உனக்குப் பொழுது போகும் வீணா" என்றான். "பொழுது போவது இருக்கட்டும். வேலையை விட்டுவிட்டு இரண்டு பேரும் எத்தனை நாட்களுக்கு அலைவது?" எனக் கேட்டாள். "மிஞ்சி மிஞ்சிப் போனால் ஒரு கிழமை தானே. நான் ஒரு கிழமை லீவு சொல்லிவிட்டேன். நீயும் அப்படியே செய் வீணா. அப்பா வரச் சொன்னதும் போகலாம்" என்றான்.

**ம**றுநாள் காலை போதை தெளிந்து பத்து மணி போல் எழுந்த கிரீஷ் வீணாவைத் தேடினான். "இந்த நேரம் அவள் ஆபீஸில் இருப்பாள்" எனச் சாவித்திரி சொன்னாள். "என்ன ஆன்ட்டி இது. உங்கள் பெண் நழுவி நழுவிப் போகிறாள். எதுவுமே சரியில்லை. நீங்கள் ஒன்றும் நல்ல பழக்கம் சொல்லிக் கொடுக்கவில்லை" எனக் குறைப்பட்டுக் கொண்டான். "நான் நன்றாகத்தான் வளர்த்தேன். இப்பதான் சிலரோட கூட்டுச் சேர்ந்து கெட்டுப்போனாள். இங்குள்ள சிலர் இன்னும் என்னவோ தமிழ், சமயம் என்று கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். துரதிர்ஷ்டவசமாக வீணா அந்தக் கூட்டத்துடன் சேர்ந்திட்டாள். அதுதான் உன்னைக் கூப்பிட்டேன். நீ கொண்டு போய் அங்கே நல்ல பழக்கத்தைப் பழக்கு" என்றாள். "நீங்கள் ஒன்றும் கவலைப்பட வேண்டாம் சாவ்த்ரி ஆன்ட்டி. நான் எல்லாம் பார்த்துக் கொள்கிறேன்" என வாக்களித்தான்.

ஆனால் அன்று மாலை வீணா வராதது கிரீஷ்"க்குப் பெரிய ஏமாற்றமாகிவிட்டது. சாவித்திரியும் கலங்கித்தான் போனாள். என்ன ஏது என்று எதுவும் தெரியவில்லை. இரவு பத்து மணியளவில் "நான் சிவலிங்கம் பேசுகின்றேன். வீணாவின் அம்மாவா நீங்கள்?" எனக் கேட்டு, "வீணாவும் என் பையன் வெங்கட்டும் எங்கேயோ வெளியூர் போவதாகவும் வரச் சில நாட்களாகுமென்றும் சொல்லச் சொன்னார்கள்" என்றார். "எங்கே போனார்கள்?" எனக் கேட்டாள். "எனக்கென்ன தெரியும். காதலர்கள் உல்லாசமாக எங்கேயும் போவார்கள். எனக்குக் கிடைத்த தகவல் இவ்வளவுதான் சாவித்திரி அம்மா" என்றார். சாவித்திரிக்குக் கோபம் தலைக்கேறியது. "பண்பாடு தெரியாத சனங்கள். எங்கள்



வீட்டுப் பெண் உங்கள் பூசாரி மகனுக்குக் கேட்குதா? எங்கள் அந்தஸ்து என்னவென்று தெரியுமா?" எனக் கேட்டாள்.

மறுபக்கம் சிவலிங்கம் கடகடவெனச் சிரிப்பது கேட்டது. "எதுக்கு இப்போ சிரிப்பு?" எனக் கோபமாகக் கேட்டாள். "இல்லை, துரைசாமிப் பரியாரியாரின் மகள் அந்தஸ்துப் பற்றி என்னிடம் பேசுவதை நினைத்தேன். சிரிப்பு வந்தது. நான் தோப்பு வீட்டுச் சிவலிங்கம் தெரியுமோ? என் பையன் காதலிக்கிறேன் என்றதும் நான் உங்கள் சரித்திரத்தை ஒரு அலசு அலசி வீணா துரைசாமிப் பரியாரியாரின் பேர்த்தி எனத் தெரிந்து கொண்டேன். என் தங்கச்சி சிவகுமாரியை நீங்கள் மறந்திருக்கலாம் சாவித்திரி அம்மா, ஆனால் நான் எதையும் மறக்கவில்லை. எனக்கு நல்லா ஞாபகமிருக்கு சாவித்திரி அம்மா. அந்த நாளில் நீங்கள் கெங்காதரனைக் காதலித்ததால் பரியாரியார் ஒரேயடியாத் தலை முழுகி விட்டிட்டார். அந்த நேரம் அவர் ஒரு மாதிரி உங்களை அணைத்து ஆசீர்வதித்திருந்தால் நீங்கள் இப்படி அடையாளமே மாறி இருக்க மாட்டீர்கள். அதுதான் அவர் விட்ட பிழை. நானும் அப்படி ஒரு பிழையை விடாமல் இருக்கவேணுமென்றுதான் என் பையன் சொன்னதும் எல்லாம் விசாரித்துப் பார்த்தேன். நீங்கள் எப்படிப் போனாலும் பரவாயில்லை. துரைசாமிப் பரியாரியார் பேர்த்தி 'சேற்றில் மலர்ந்த செந்தாமரை' போல. அவள் தன் தாத்தா மாதிரியே தங்கமாக இருக்கிறாள். அதனால் என் மகனுக்குச் சம்மதம் என்று சொல்லிவிட்டேன்.

"நீங்கள் லண்டனிலிருந்து ஒரு தடியனைக் கூப்பிட்டு வைச்சிருக்கிறியளாமே? கெங்காதரன் பெரிய படிப்பெல்லாம் படித்தவராம். அவருக்குமா புத்தி மழுங்கிப் போச்சு. கிளியை வளர்த்துப் பூனை கையில் கொடுக்கலாமா? ஆனால் நம்ம கிளி உங்கள் பூனை கையில் அகப்படாது. அது புத்தியாகத் தப்பிக்கொண்டது. அனேகமாக அவர்கள் இன்று பதிவுத் திருமணம் செய்திருக்கலாம். உங்கள் வீட்டிலிருக்கும் தடியன் போனபின்தான் அவர்கள் வருவார்கள். வந்தபின் நீங்கள் சம்மதித்தால் நாங்கள் விமரிசையாகத் திருமணத்தைச் செய்யலாம். அல்லது அதையும் நானே செய்கிறேன். என்ரை மனிசி சுபத்திராவுக்கும் மருமகளை நல்லாப் பிடிச்சுக் கொண்டுது தெரியுமோ?" என விடாமல் தொடர்ச்சியாகப் பேசிக்கொண்டே போனார். மறு வார்த்தை பேசாமல் அனைத்தையும் செவிமடுத்த சாவித்திரி இனி முடியாது என்ற நிலையில் தொடர்பைத் துண்டித்தாள்.

கண்மண் தெரியாமல் ஆத்திரம் வந்தது. கைகளைப் பிசைந்தாள். பற்களை நறநறவெனக் கடித்தாள். 'என்ன துணிவு? அந்தக் கிழம் என் பெண்ணுக்குத்தான் திரு

மணம் செய்யுதாம். வரட்டும் கெங்கா பேசிக்கொள்கின்றேன்' என முறுகினாள். எல்லாம் இந்த வீணாவாலதான் வந்தது. அந்த ஆதர்ஷா நட்பை முளையிலேயே கிள்ளி எறிந்திருக்க வேணும். வளரவிட்டது பெரிய தப்பு' என நினைத்தாள்.

கிரீஷ் அவசரப்பட்டான். தன் தந்தை ஜகநாதனை போனில் கூப்பிட்டு "என்ன டாட் இது. அழகான பெண் இருக்கு, போ என்று அனுப்பி வைத்தீர்கள். உங்களுக்குத் தெரியுமா, வீணா கொள்ளை அழகு. அவள் எனக்கு வேணும் டாட்" என்றான். பிறகு "இல்லை, வரமாட்டேன், அவள் எனக்கு ஒரு நாளைக்காவது வேணும்" என்றான். அதைக் கேட்டுக்கொண்டு அவ்வழியால் வந்த கெங்காதரனின் புத்தி அப்பொழுதுதான் விழித்துக் கொண்டது. "ராஸ்கல் என்னடா சொன்னாய்! என் பெண் உனக்கு ஒரு நாளைக்கு வேணுமா?" என அவன் கன்னத்தில் அறைந்தவர் போனைப் பறித்து "ஜனா, உன் பையனை உடனே கூப்பிடு. இனி ஒரு நிமிஷமும் என் வீட்டில் வைத்திருக்க மாட்டேன். ஒரு நாளைக்கு என் பெண் வேணுமென்கிறான். காலம் பூராகக் கட்டிக்காப்பான் எனக் கூப்பிட்டால் இப்படிச் சொல்கிறானே. நல்ல வேளை என் தங்கம் இவனிடமிருந்து தப்பிப் போய் விட்டது" என்றார். "சரி, உன் பெண்ணும் எவனோடயோதான் போயிருக்கிறாளாமே, பிறகென்ன?" என ஜனார்த்தனன் கூறினார். "இவனிடமிருந்து தப்பத்தான் அவள் போயிருக்கிறாள். என் மகளை நான் பார்த்துக் கொள்வேன். இவனை உடனே கூப்பிடு" என்றவர் "சாவித்திரி!" எனச் சத்தமாகக் கூப்பிட்டு, "கிரீஷை உடனே வீட்டைவிட்டு அனுப்பு" எனக் கத்தினார். அந்தக் கோபத்தைப் பார்த்து சாவித்திரி கதிகலங்கிப் போய் சரி என்று என்றுமில்லாமல் மிகவும் பவ்வியமாகச் சொன்னாள்.

கிரீஷ் நாட்டை விட்டுப் போனதை உறுதி செய்த பின்னர் தான் சிவலிங்கம் வெங்கட்டையும் வீணாவையும் வரச் சொன்னார். வந்து வீட்டுக்குப் போன வீணாவை "இனி உனக்கு இங்கே இடமில்லை. நீ உன் பெற்றோரை நன்கு பெருமைப்படுத்திவிட்டாய். உடனே உன் உடைமைகளை எடுத்துக் கொண்டு போ" என்று சாவித்திரி சொன்னாள். வீணாவுக்கு அழுகை வந்தது. என்ன செய்வதெனத் தெரியவில்லை. வெளியே போக ஆயத்தமாகி வந்த சாவித்திரி "நான் திரும்ப வரும்போது நீ இங்கே இருக்கக் கூடாது. அப்படி இருந்தால் இனிமேல் நான் இங்கு இருக்க மாட்டேன்" என்றாள்.

"கையில் ஒன்றுமில்லாமல் வந்து கஷ்டப்பட்டு உன்னை நல்ல மாதிரி வளர்த்து ஆளாக்கியதற்கு நல்ல பரிசு கொடுத்து



விட்டாய். மிக்க நன்றி மகளே!" எனக்கூறிக் கண்கலங்கினாள். "நீ போற்றுகின்றாயே பண்பாடு, கலாச்சாரம், அதெல்லாம் எங்களைக் கைதூக்கி விடவில்லை. நாங்கள் எங்களுக்குச் சாதகமான வழியில் வாழ்ந்தோம். உனக்கு அது பிடிக்காவிட்டால் நீ போகலாம்" என்று சொல்லிக் கொண்டே போய்விட்டாள்.

விழி நீர் சொரிய அடுத்தது என்ன எனத் தெரியாத வீணா அங்கு வந்த தந்தையின் முகத்தை ஏக்கமாகப் பார்த்தாள். "உன் அம்மா சொன்னால் நான் மீற மாட்டேன் வீணா. நீ வேறு இடம் பார்த்துக் கொள்" என்றவர் அவள் கையில் தொகை நிரப்பாத ஒரு காசோலையைக் கொடுத்தார். அதையே வெறிக்கப் பார்த்த வீணா அதை அப்படியே விட்டு விட்டு மேலே போய்த் தன் உடைமைகளை எடுத்துக்கொண்டு மரீனா வீட்டுக்குப் போனாள். அந்தக் காசோலை அங்கே அநாதையாகக் கிடந்தது. பணம் தான் எல்லாம் என நினைத்துப் பண்பை மறந்து அதன் பின்னால் போன கெங்காதரனுக்கும் மகளின் அந்தச் செய்கை ஒரு பாடமாக அமைந்தது. ஆனாலும் அவர் தன் செல்வ மகளைப் பெருமையுடன் பார்த்துக் கொண்டு நின்றார்.

**சி**ல நாட்களின் பின் திருமணத்தை ஒழுங்கு செய்த சிவலிங்கம், "நீ ஒன்றுக்கும் கலங்கக் கூடாது வீணா. பெற்றவர்கள் கோபம் சில நாட்களுக்குத்தான். அதுவரை எங்களைப் பெற்றவர்களாக நினைத்துக்கொள். நான் மரியாதைக்குப் போய் உன் பெற்றோரை அழைக்கிறேன்" என்று போனார்.

அங்கே அவருக்கு அவ்வளவாக வரவேற்பு இருக்கவில்லை. அதைப் பொருட்படுத்தாத அவர் "கல்யாண நாளை உங்களுக்குத் தெரியப்படுத்த வந்தேன். நீங்கள் வந்து ஆசீர்வதிக்க வேணும். பெற்றோரின் நல்லாசிகள் பிள்ளைகளுக்குக் கட்டாயம் தேவை. அதேபோலப் பிள்ளைகளின் அன்பும் பெற்றவர்களுக்குக் கடைசிக் காலத்தில் அவசியம். துரைசாமிப் பரியாரியார் கடைசிக் காலத்தில் கஷ்டப்பட்டுப் போனார். அவர் உங்கள் திருமணத்தைச் செய்து வைத்து ஆசீர்வதித்திருந்தால் உங்கள் அன்பு அவருக்குக் கிடைத்திருக்கும். அதே தவறை நீங்களும் செய்யவேண்டாம். பிள்ளைகள் விருப்புக்கு நாங்கள் மதிப்பளிக்க வேணும். அவர்கள் தாம் இருவரும் இணைந்தால் தங்கள் வாழ்வு சிறக்கும் என நினைக்கும் போது நாங்கள் எந்தவிதத்திலும் அதைத் தடை செய்யக்கூடாது. ஆகவே நீங்கள் கட்டாயம் வந்து உங்கள் நல்லாசிகளை உங்கள் மகளுக்கும் மருமகனுக்கும் வழங்குவீர்கள் என நம்புகின்றேன்" எனக் கூறிப் பதிலை எதிர்பார்க்காமல் எழுந்து சென்றார்.

அவர் போனபின் "நான் எங்கேயும் வரமாட்டேன் கெங்கா, நீங்கள் வேணுமானால் போகலாம்" என்றாள். ஆனால் அவள் குரல் தழுதழுத்தது. "நீ இல்லாமல் நான் எங்கே போயிருக்கிறேன். இதுவும் அப்படித்தான். ஆனால் அவள் நம் பெண் சாவித்திரி. அவளை ஒரு நாளும் சபிக்காதே. அவள் நல்லதைத்தான் செய்திருக்கிறாள். எங்களுடன் இந்தச் சாக்கடையில் வளர்ந்த பெண் இன்று என்ன ஓர் உயர்ந்த லட்சியத்துடன் இருக்கிறாள். எதுவோ நம் முன்னோர் செய்த புண்ணியமும் அவளது முன் வினைப் பயனும் அவளைக் காத்திருக்கிறது என்றுதான் சொல்வேன்" எனக் கூறினார். ஆனால் சாவித்திரி அசையவில்லை.

திருமணத்தன்று வீணா பெற்றவர்களை எதிர்பார்த்து ஏமாந்தாள். அவள் விழிகள் நீரில் மிதந்தன. ஆதர்ஷா அவளருகே எப்போதும் ஆதரவாக இருந்து தெம்பூட்டினான். திருமணத்தின் பின் வீணாவும் வெங்கட்டும் வீணா வீட்டுக்குப் போனார்கள். அப்பொழுதும் சாவித்திரி அவர்களைக் கவனிக்கவில்லை. கெங்காதரன் "நீங்கள் நன்றாக இருப்பீர்கள். அம்மாவின் கோபம் குறைந்ததும் வருகிறேன்" எனச் சொல்லி அனுப்பினார்.

எண்ணங்களில் மூழ்கி இருந்த வீணாவுக்கு அதை நினைத்த போது அவளை அறியாமல் இதழ்கள் புன்னகையில் விரிந்தன.

அம்மாவின் கோபம் அப்படியேதான் இருந்தது. அவ்வளவுக்கு ஏன் வன்மம் என்று அவளுக்குத் தெரியவில்லை. அந்தக் கிரீஷ் போதை வஸ்துக்களுக்கு அடிமையாகி இறந்ததாக அறிந்தாள். அதன்பின்னும் அம்மாவின் மனம் மாறவில்லை. ஹர்ஷனைப் பார்த்தும் சாவித்திரியின் உள்ளம் அன்பில் உருகவில்லை. அவனை அள்ளி அணைக்க அவள் கைகள் பரபரக்கவில்லை. அவ்வப்போது கெங்காதரன் மனைவிக்குத் தெரியாமல் பேரனைப் போய்ப் பார்ப்பார். "உன் அம்மா உறவுகளை விட்டுவிட்டு என் பின்னால் வந்தவள். என்னை விட்டால் அவளுக்கு யாருமில்லை. அதனால் அவள் மனம் நோக நடக்க மாட்டேன்" என்று சொல்வார்.

வெங்கட்டின் பெற்றோர் அவுஸ்திரேலியாவில் இருக்கும் வரை அவளுக்கு மிகவும் ஆதரவாக இருந்தார்கள். இப்பொழுது அவர்கள் மகளிடம் கனடா போய்விட்டார்கள். அதனால் இப்பொழுது வீணா பெரியவர்களின் அன்புக்காக மிகவும் ஏங்கினாள்.

இன்று வீணாவுக்கு என்னவோ அம்மாவைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது. ஹரிணி பிறந்ததை போனில் தான் சொன்னாள். ஹர்ஷனைக் கொண்டு போய் ஏமாந்தது போதும் எனப் பேசாமல் விட்டுவிட்டாள். இப்பொழுது ஹர்ஷனைப் பாடசாலையில் விட்டுவிட்டு ஹரிணியைக் கொண்டு அம்மாவிடம் போவோம் என நினைத்தாள். பெற்ற பெண்ணிடம் இரண்டு குழந்தைகள் பெற்ற பின்னும் அப்படி என்ன பெரிய கோபம். அதற்கு இன்று எப்படியாவது ஒரு முடிவு கட்ட வேணும் எனத் தீர்மானித்தாள். 'அம்மாவைப் பார்க்காமல், அவருடன் பேசாமல் இருக்க என்னால் முடியவில்லை. எப்பொழுதும் மனம் ஒரு பாரமாக இருக்கிறது. கல் மாதிரிப் பாராமுகமாக இருக்க அம்மாவால் எப்படி முடிகிறது' என நினைத்தாள். சாவித்திரி இப்பொழுதெல்லாம் வீட்டில்தான் இருப்பதாகவும் அவளின் வெளி நடவடிக்கைகள் மிகவும் குறைந்து அமைதியாகிப் போய்விட்டதாகவும் அப்பா சொன்னார். அதனால் வீட்டில் இருப்பார் என்ற நம்பிக்கையுடன் புறப்பட ஆயத்தமானாள்.

அதன்பின் அவளது உடல் அசதி எங்கோ பறந்து போனது. ஹரிணிக்குத் தேவையானவற்றை எடுத்துக்கொண்டு ஹர்ஷனைக் கொண்டு போய்ப் பாடசாலையில் விட்டுவிட்டு வீட்டுக்குப் போனாள். கதவைத் திறந்த சாவித்திரி மகளையும் அவள் கையிலிருந்த பெண் குழந்தையையும் பார்த்து நெகிழ்ந்து நின்ற அந்தச் சில வினாடிகளில் வீணா



எதுவுமே பேசாமல் வீட்டுக்குள் போய்விட்டாள். மகளைச் சோபாவில் கிடத்தியவள் மகளிடம் பேசுவதுபோல, "ஹரிணிக் குட்டி, அம்மம்மாவைப் பார்க்க வேணுமென்றாய். நன்றாகப் பார்த்துக் கொள். அம்மம்மாக்களுக்குப் பேரப்பிள்ளைகளென்றால் கொள்ளைப்பிரியம்... ஆனால் உனக்கு அந்த அதிர்ஷ்டம் இல்லை கண்ணா. ஐந்து வருடமாக அப்படி என்ன கோபம் என்று எனக்குப் புரியவில்லை. மனம் நிறைந்தவரை மணந்தது தவறா? தவறானால் தண்டிக்க வேண்டியது தானே. வேணுமானால் இரண்டு அடி அடித்து அந்தக் கோபத்தைத் தீர்க்கட்டும். அதை விட்டுவிட்டு இப்படியா கல் மாதிரி இருப்பது. உனக்கு உன் அம்மா மாதிரி எனக்கும் என் அம்மா வேணுமென்று சொல் கண்ணா" என்றவள் உடைந்து அழுதாள்.

அதைப் பார்த்த சாவித்திரியின் கண்களும் கலங்கின. "இந்த அம்மம்மாவின் நிழலும் உங்களுக்கு வேண்டாம். இங்கிருந்து போய்விடுங்கோ" என விம்மினாள். அதைக் கவனித்த வீணா எழுந்து போய்த் தாயின் மடியில் முகம் புதைத்தவள் "ஏன் அம்மா? ஏன்?" எனக் கேட்டாள். அவளை அணைத்துக்கொண்டு விம்மினாள். பின் "ஏன் இங்கு வந்தாய் வீணா. போய் எங்காவது நன்றாக இரு" என்றாள். அன்னையை ஏக்கமாகப் பார்த்தவள் "என்

னம்மா இதெல்லாம், எனக்கு எதுவுமே புரியவில்லை" எனக் கேட்டாள்.

"நிறையத் தவறுகள் செய்து விட்டேன் கண்ணா. அந்த நாளில் ஏதோ ஒரு வெறி. எல்லோராலும் அவமதிக்கப்பட்டோம். எப்படியாவது முன்னேற வேண்டுமென்று ஏதேதோ செய்து முன்னுக்கு வந்தோம். கிரீஷ் விஷயத்தில் பெரிய தப்பே செய்திருப்பேன். ஆனால் நீ புத்தியாகத் தப்பிக் கொண்டாய். அப்படி ஒருவனிடம் நான் பெற்ற பெண்ணைக் கொடுக்க இருந்த எனக்குத் தாயென்று சொல்ல என்ன தகுதி இருக்கு?" எனக் கலங்கியவள், "அதுதான் ஒதுங்கி இருந்தேன். உன்னைப் பார்த்துப் பெருமைப் பட்டேன் தெரியுமா?" என்னும் போது தாயின் குரல் தளர்ந்து கண்ணீர் தானாகவே கன்னங்களில் வழிந்தது.

"அம்மா! அம்மா!" என வார்த்தைகள் தளர வீணா தாயை அணைத்துக் கொண்டாள். "அதெல்லாம் முடிந்த கதை. கடவுள் செயலால் அவற்றிலிருந்தெல்லாம் தப்பிவிட்டோம். இனியும் ஏன் அம்மா உங்களையும் வருத்தி, என்னையும் வருந்தச் செய்கின்றீர்கள்? உங்கள் நல்லாசிகள் இல்லாமல் என்னால் எப்படி நிம்மதியாக வாழ முடியும்?" எனக் கூறி அழுதாள். அப்பொழுது ஹரிணியும் நெகிழ்ந்து சிணுங்கினாள். அவளை அள்ளி எடுத்த சாவித்திரி, "உன்னை மாதிரியே இருக்கிறாள் தெரியுமா? இவளிடமிருந்து என் கண்களை எடுக்கவே முடியவில்லை" என்றாள். "உங்கள் அன்பும் அரவணைப்பும் அவளுக்கு வேணும் அம்மா!" என வீணா கெஞ்சினாள். "இருந்தது போலவே இரு வீணா. என் நிழல் உன் பிள்ளைகள் மேல் படவேண்டாம்" எனக் கண் கலங்கினாள். "எவ்வளவோ வைராக்கியமாக இருந்தேன். ஆனால் அப்படியே உன்னைக் குழந்தையில் பார்த்ததுபோல இவளைப் பார்த்ததும் ஆடிப் போய்விட்டேன்" என்றாள். வீணா தாயை இரக்கத்துடன் பார்த்தாள்.

"என் நல்வாழ்த்துக்கள் எப்போதும் உனக்கு இருக்கு கண்ணம்மா. எங்கிருந்தாலும் நீ சந்தோஷமாக இரு. இங்கெல்லாம் வரவேண்டாம்" என்று சொன்னாள்.

மகளுக்குப் பாலைப் புகட்டிக் கொண்டு வீணா மௌனமாக இருந்தாள். இன்று இவ்வளவும் போதும். மெதுவாகத்தான் மாற்ற வேணும். இது கோபம் அல்ல; தவறுக்குப் பிராயச்சித்தம், சுய பச்சாத்தாபம் என உணர்ந்த போது மிகுந்த ஆறுதலாகவும், அளவற்ற மகிழ்ச்சியாகவும் தாயின் மேல் பரிதாபமும் ஏற்பட்டது.

வீணா தானே போய் தேனீர் தயாரித்துக்கொண்டு வந்து இருவரும் குடித்தனர். அதன்பின்




ஓரளவு சகஜ நிலைக்கு வந்த சாவித்திரி "நன்றாக இருக்கிறாயா? வெங்கட் எப்படி? ஹர்ஷன் நன்றாகப் படிக்கிறானா? யார் மாதிரி?" என்றெல்லாம் கேட்டாள். வீணா அனைத்திற்கும் சலிக்காமல் பதில் கூறினாள். அவர்கள் பேசிக் கொண்டிருந்த போதே ஹர்ஷனைக் கூப்பிடும் நேரம் வந்துவிட்டது. போகும் போது "ஹரிணிக் குட்டி, அண்ணாவும் அம்மம்மாவைப் பார்க்க ஆசைப்படுவான். இன்னொரு நாள் அவனுடன் வருவோம். இப்ப போய் அண்ணாவைக் கூட்டிக்கொண்டு வீட்டுக்குப் போவாம்" எனச் சொல்லித் தாயின் முகத்தைப் பார்த்தாள். அதற்குச் சாவித்திரி எந்த மறுப்பும் சொல்லவில்லை.

மிக அதிக நாட்களின் பின் வீணா மிகவும் மகிழ்ச்சியாக இருந்தாள். அவள் கால்கள் நிலத்தில் பாவாமல் பறந்தன. அந்த மகிழ்வில் காரை அவசரமாகத் திருப்பினாள். அதைக் கவனித்த சாவித்திரி காரின் அருகில் போய் "குழந்தையை வைத்துக்கொண்டு காரை இப்படியா திருப்புவது, மெதுவாக ஓட்டு வீணா" என்றாள். வீணாவுக்கு ஏற்பட்ட அளவற்ற மகிழ்வில் கண்ணாடியை நன்றாகத் திறந்து எம்பி அம்மாவின் கன்னத்தில் முத்தமிட்டுவிட்டுக் காரைக் கிளப்பிச் சென்றாள். புன்னகையுடன் சாவித்திரி கன்னத்தைத் தடவுவதைக் கார் கண்ணாடி வழியே பார்த்து அவளும் புன்னகைத்துக் கொண்டாள்.

●





# வீரவனிதையின் சோக முடிவு

## வன்னிநாட்டின் சோகக் கதைப்பாடல்

எழுவான், திரிகோணமலை மாவட்டம். படுவான், மன்னார் மாவட்டம். வடக்கு, யாழ்ப்பாணக் கடலேரி. தெற்கு, அருவியாறும் நுவர கலவிய (அநுராதபுர) மாவட்டம். இந்நான்கு எல்லைகளுக்குள்ளே பரந்து கிடந்தது வன்னி நாடு. அதன் வடபகுதி, முல்லைத்தீவு மாவட்டம். தென்பகுதி, வவுனியா மாவட்டம். கடல்சார் பிரதேசங்கள் பள்ளத்தாக்குகளாக அமையினும், அவை உள்நாடு நோக்கி, உயர்ந்துயர்ந்து நடுவிலே பீடபூமியொன்றினை உருவாக்கியுள்ளன. மலைகள் என்று கூறமுடியாவிட்டாலும், குன்றுகளும் குன்றுத் தொடர்களும் ஆங்காங்கே பீடபூமிக்கு ஆரஞ்சூட்டி அலங்கரிக்கின்றன. விளாங்குளம் (வவுனியா) குளக்கட்டில் நின்று பார்க்கும்போது வியக்கக்கூடியதாகத் தோன்றும் மண்டுக்கோட்டை (மடுக்கந்தைத் தொடரும் அதனைத் தழுவிப் பெரியபுளியங்குளத்திலிருந்து நீளும் தொடரும் ஈரற்பெரிய குளத்திலே துருத்திக்கொண்டு முடியும் தொடரும் வவுனியா மாவட்டத்திற் குறிப்பிடத்தக்கவை. குருந்தூர் மலை, மண்கிண்டமலை, கும்பகன்னன் மலை, ஒதியமலை என்பவை முல்லைத்தீவின் தென்பகுதியை அணி செய்கின்றன. துணுக்காயிலிருந்து கொக்கத்தொடுவாய் வரை நீளும் தொடர் புலிப்பாஞ்சகல்லிலே முடிவடைகின்றது. நன்னீர் கேணி, நன்னீர் சுனைகள், நன்னீர் உவர்நீர் வில்லுகள், மாரியிற் பெருக்கெடுக்கும் ஆறுகள், கடலேரிகள் நீங்கலாக 700க்கு மேற்பட்ட குளங்கள் வன்னிக்கு ஒருகாலத்தில் வளஞ்சேர்த்தன. வயல்வெளிகளாலும் காடுகளாலும் இயற்கை வளம் மிக்கதெனத் திகழ்ந்த வன்னி ஒல்லாந்தரால் 1782இலே திட்டமிட்டுத் துவம்சம் செய்யப்பட்ட பின்பு பண்டாரவன்னியன் வீழ்ச்சி வரை (1811) உயிரைப் பிடித்துக்கொண்டு நின்றது. பண்டாரவன்னியனோடு அடங்காப்பற்றெனத் திகழ்ந்த வன்னி நாடும் அடங்கி ஒடுங்கிவிட்டது. எழுச்சி மிகுந்து இருந்த கிராமங்கள் தாவாடிக் கிராமங்களாயின. நெற்களஞ்சியமாகத் திகழ்ந்த வன்னி

கலாகீர்த்தி, பேராசிரியர், டாக்டர் பொன். பூலோகசிங்கம்



நாடும் அடங்கி ஒடுங்கிவிட்டது. எழுச்சி மிகுந்து இருந்த கிராமங்கள் தாவாடிக் கிராமங்களாயின. நெற்களஞ்சியமாகத் திகழ்ந்த வன்னி பற்றாக் குறையாற் திண்டாடியது.

வன்னிநாடு பழம்பெருமை குன்றி நின்ற காலத்தும் அதன் மக்கள் போற்றிப் பேணிய பண்பாட்டு அம்சங்களிலே கிராமிய மக்களிடையே வழங்கிய கதை மரபுகளும் பாடல் நெறிகளும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. அவற்றிலே இன்று கிடைப்பன அளவிலே குறைவாகக் காணப்படினும் பெருமைப்படத்தக்கவை எனல் வேண்டும். கிராமிய இலக்கியத்திற் குறிப்பிடப்படும் கதைகள், பாடல்கள், கதைப் பாடல்கள், கூத்துகள் முதலியன அவற்றிலே இடம்பெறுகின்றன. இவற்றிலே கதைப்பாடல் வகையிலே அடங்கும் வேலப் பணிக்கர் ஒப்பாரி கவனத்தை ஈர்க்கத்தக்க கதையமைப்பினை உடையதாகும்.

கதைப்பாடல் என்பது கதையைக் கிராமியப் பாடலிலே இசையோடு கூறுவதாகும். கதைப்பாடல் என்பது கதை அல்லது சரித்திரம், அம்மானை, சிந்து, கும்மி, ஊஞ்சல், ஒப்பாரி, பிரலாபம், ஏற்றம், மாலை, கப்பற்பாட்டு, ஒடப்பாட்டு, போர், சண்டை முதலாம் வகைகளாகவும் தமிழிலே காணப்படுகின்றன. இந்நிலைக்குக் கதைப்பாடல் அமைந்த யாப்பு வகைகள் ஒரு முக்கிய காரணமாகலாம். ஒவ்வொரு வகையான விளையாட்டிற்கோ தொழிலுக்கோ செயலுக்கோ பயன்படுத்தப்பட்ட யாப்பு வகையானது கதைப் பாடலுக்குப் பயன்படுத்தப்பெற்றபோது அப்பெயர் கதைப்பாடலுக்கும் தொடர்ந்தது. தமிழில் எழுந்துள்ள கதைப் பாடல்களைப் பொதுவாகக் காதல், சமுதாய, வரலாற்று, பௌராணிகக் கதைப்பாடல்களாகப் பகுக்க முடியும்.

தமிழ்நாட்டிலே 600க்கு மேற்பட்ட கதைப்பாடல்கள் வழங்குவதாகக் கூறுவர். ஆயினும் அவற்றிலே பெரும்பான்மையானவை ஏட்டு வடிவிலே தான் நிலவிவருகின்றன. தமிழகத்துக் கதைப்பாடல்களிற் சில மேல்வருவன.

| | | |
|---|---|---|
| அன்னன்மார் சுவாமி கதை | அபிமன்னன் சுந்தரி மாலை | அயோத்தி கதை |
| அருச்சுனன் தபசு | அல்லியரசாணி மாலை | ஆந்திரமுடையார் கதைப்பாடல் |
| ஆரவல்லி சூரவல்லி கதை | இரவிக்குட்டிப்பிள்ளைப் போர் | இராமப்பய்யன் அம்மானை |
| ஈனமுத்துப் பாண்டியன் கதை | உடையார் கதை | ஏணி ஏற்றம் |
| ஐவர் அம்மானை | ஐவர் ராசாக்கள் கதை | கட்டபொம்மன் கதைப்பாடல் |
| கட்டபொம்மு கும்மிப்பாடல் | கட்டபொம்மு கூத்து | கண்டிராசன் ஒப்பாரி |
| கர்ணமகாராசன் சண்டை | கள்ளழகர் அம்மானை | கன்னடியன் படைப்போர் |
| காகுத்தன் கதை | காத்தவராயன் கதைப்பாடல் | கான்சாகிபு சண்டை |
| கிருஷ்ணசுவாமி கதை | கிருஷ்ணன் தூது | குருக்கேத்திர மாலை |
| கோவிலன் கதை | கோவலன் கண்ணகி கதை | சங்கிலி பூதத்தார் கதை |
| சித்திரபுத்திரன் கதை | சிதம்பரநாடார் கதை | சிவகங்கை அம்மானை |
| சிவகங்கைக் கும்மி | சிவகங்கை சரித்திரக் கும்மி | சின்னத்தம்பி கதை |

| | | |
|---|---|---|
| சின்னத்தம்பி வில்லுப்பாட்டு | சுடலைமாடசுவாமி கதை | தட்சராஜன் சரித்திரம் |
| தம்பிமார் கதை | திரௌபதி குறம் | தேசிங்குராஜன் கதை |
| தோட்டுக்காரி அம்மன் கதை | நல்லதங்காள் கதை | பஞ்சபாண்டவர் வனவாசம் |
| பத்திரகாளியம்மன் கதை | பலவேசஞ்சேர்வைக்காரன் கதை | பவளக்கொடி மாலை |
| பழையனூர் நீலி கதை | பாஞ்சாலக்குறிச்சி சண்டை | பார்வதி கல்யாணம் |
| பார்வதியம்மன் கதை | பிச்சைக்காலன் கதை | பிரமசக்தி அம்மன் கதைப்பாடல் |
| புலந்திரன் களவுமாலை | புலந்திரன் தூது | புலமாடன் கதைப்பாடல் |
| பூச்சியம்மன் வில்லுப்பாட்டு | பூலுத்தேவர் சிந்து | பொன்னிறத்தாள் அம்மன் கதைப்பாடல் |
| பொன்னுருவி மசக்கை | மதுரைவீரன் கதை | மாகாளி அம்மன் கதை |
| மார்க்கண்டன் தவசு | மாரியம்மன் கதை | மின்னொளியாள் குறம் |
| முத்துப்பட்டன் கதை | மூவர் அம்மானை | மூன்றுலகு கொண்ட அம்மன் கதை |
| மெச்சும் பெருமாள் | | |
| பாண்டியன் கதை | வல்லரக்கன் கதை | வள்ளியம்மன் கதை |
| வன்னியடி மறவன் கதை | வன்னிராசன் கதை | வீரபாண்டியக் கட்டபொம்மன் கதை |
| வெங்கலராசன் கதை | வெட்டுப்பெருமாள் கதை | வெள்ளைக்காரசாமி கதை |
| | வெள்ளைக்காரன் கதை | |

தமிழகத்திலே அச்சுவாகனம் ஏறியிருக்கும் கதைப்பாடல்கள் யாவும் சுத்தப் பதிப்புகள் எனல் சாலாது. தமிழகத்தின் கதைப்பாடல் இடத்தினை ஈழத்திலே இசைக்கூத்துகள் பெற்றிருக்கின்றன என்று கூறலாம். இதனால் ஈழத்திலே கதைப்பாடல்கள் குறைவாகவே காணப்படுகின்றன.

முல்லைத்தீவுப் பிரதேசத்திலே வேலப்பணிக்கர் ஒப்பாரி மட்டு மன்றிப் பனிச்சையாடிய பாடற் சிந்து, குருவிச்சி நாய்ச்சி சலிப்பு, வன்னி நாய்ச்சிமார் மான்மியம் முதலிய கதைப்பாடல்களும் நிலவுகின்றன. காலனித்துவ காலத்தில் முல்லைத்தீவுக்குப் பொறுப்பாயிருந்த 'நெவில்' என்பவன் வற்றாப்பளையில் வீற்றிருந்த கண்ணகையம்மன் அற்புதத் தினைத் தனக்குக் காட்டத் தவறினாற் பூசகருக்குக் கடுந்தண்டனை வழங்குவதாகக் கூறியதை அடுத்து அவர் அம்பாளை இரங்கி வேண்டிக் கொண்டதற்கு அருளுவதாகக் கோயிற்புறத்தே நின்ற பனிச்சை மரம் ஆடி வெள்ளைத்துரையைத் துரத்திய புதுமையைக் கூறுவது பனிச்சையாடிய பாடற்சிந்து. இச்சிந்தினை சி. இராச சிங்கம் வற்றாப்பளை கண்ணகை அம்மன் கருணைமலரிலே 1978இலே தொகுத்தளித்துள்ளார். பண்டாரவன்னியன் குருவிச்சி நாய்ச்சி காதற் கதையைக் கூறுவது குருவிச்சி நாய்ச்சி சலிப்பு. பண்டார வன்னியன் தன் காதலி குருவிச்சி நாய்ச்சியை ஆங்கிலேயர் படையெடுப்பினை முறியடித்து மீண்டு கைப்பிடிப்பேன் என்று கூறிச் சென்றவிடத்துக் கொலையுண்ட செய்தியைக் கேள்விப்பட்டு, குருவிச்சி நாய்ச்சியார் நச்சுக் கிழங்கினை சுவைத்துண்டு கொல்லை யிலே படுத்து உயிர் துறந்தாள். அந்தக் கதைதான் குருவிச்சி நாய்ச்சியார் சலிப்பாக வழங்கி வருகின்றது. வன்னி நாய்ச்சிமார்



மான்மியம் எனும் பிறிதொரு கதைப்பாடல் 1981இலே த. சண்முகசுந்தரம் அவர்களால் வெளியிடப்பெற்றது. அம்மான்மியத் தினைக் காணமுடியவில்லை.

வேலப்பணிக்கர் ஒப்பாரி இருமுறை பதிப்பிக்கப்பட்டுள்ளது. முதலிற் கீழ்க்கரவை வ. கணபதிப் பிள்ளை பவ வருடம் வைகாசியிலே (1934) சிவகுக அச்சியந்திரசாலையில் 'வேலப்பணிக்கர் பெண்சாதி அரியாத்தை பேரில் ஒப்பாரி'யைப் பதிப்பித்தனர். அடுத்து செ. மெற்றாஸ்மயில் 1980 இலே தொகுத்தளித்த வன்னிவள நாட்டுப் பாடல்கள் எனும் தொகுப்பிலே வேலப்பணிக்கர் ஒப்பாரி இடம் பெறுகின்றது. இவ்விரண்டாம் பதிப்பிலே முன்னைய பதிப்பிற் காணப்பெறாத சில பாடல்களும் இடம் பெறுகின்றன. இதனுள் 201 பாடல்களுள.

வன்னி நாட்டிலே காட்டுயானைகள் காலனித்துவ ஆட்சிக் காலத்திலே (1620 — 1796) பெருந்தொகையாகப் பெருகியிருந்தன. ஒல்லாந்தர் காலத்தில், ஒருகட்டத்தில் வன்னியர் அவர்களுக்கு 30 யானைகள் வரை திறையாகக் கொடுக்கவேண்டி இருந்தது. யானை விற்பனை மூலம் ஒல்லாந்தர் வருடத்திற்கு ஒரு லட்சம் நாணயம் (florins) பெற்றிருக்கின்றனர் (1). வன்னியர் யானைத் திறைக்காகவும் விற்பனைக்காகவும் யானைகளைப் பிடிப்பதற்கு யானைப் பணிக்கரைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் காட்டு யானைகளைப் பிடிப்ப தோடு அவற்றைக் கையாளுவதற்குப் பழக்கியும் கொடுத்தார்கள்.

யானைப் பணிக்கர் தென்னிந்தியாவிற் கேரள நாட்டினைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள். அந்நாட்டிலே பணிக்கரில் ஒருசாரார் யானைப் பணிக்கர் என்றே வழங்கப்படுகின்றனர். பணிக்கர் கேரள நாட்டிலே 'அங்கம்' அல்லது தனி யுத்தத்திலே பேரெடுத்த வீரர் களாகத் தெரிகிறது. அந்தத் தனியுத்தம் மல்யுத்தமாக மட்டுமல்லாது ஆயுதச்சண்டையாகவும் இருக்கலாம். இவர்கள் 'களரி'களை உடற் பயிற்சி நிலையமாகவும் யுத்த வீரர் கல்லூரிகளாகவும் நடாத்திப் பேர் பெற்றவர். இவர்களிடையே ஆசிரியர்களும் சோதிடர்களும் கோயிற் பணியாளரும் கூட இருந்திருக்கிறார்கள். பணிக்கர் சிங்களவர் மத்தியிலே 'பணிக்கராள' எனப்படுவர். சிங்களவரிடையே பணிக் கராள எனப்படுவோர் மத்தளம் அடிப்பவராகவும், பாடகராகவும், நாட்டியக்காரராகவும், சோதிடராகவும், அம்பட்டராகவும் இயங்கி யுள்ளனர் (2).

யானைப்பணிக்கர் முல்லைத்தீவுப் பிரதேசத்திலே செம்மலையில் வசித்ததாகக் கூறப்படுகிறது. குமுழமுனைக்கு அருகிலுள்ள ஊர் செம்மலை. வேலப்பணிக்கர் ஒப்பாரி என்பது யானைப்பணிக்கருள் ஒருவரான வேலப்பணிக்கர், அவர் மனைவி நாச்சன் அரியாத்தை என்போருடைய கதையைப் பாடலாகக் கூறுகின்றது. வீரமும் சோகமும் இழையோடும் கதையாக வீரப்பணிக்கர் ஒப்பாரி அமைகின்றது.

மரணவீட்டில் எழும்பும் ஓலத்தின் புலப்பாடு ஒப்பாரி. உற்றாரும் உறவினரும் தம்முடைய வேதனையை ஒப்பாரியாக வெளிப்படுத்து கிறார்கள். ஒப்பு, புலம்பல், பிரலாபம் எனும் சொற்களாலும் ஒப்பாரி வழங்குகின்றது. கிராமிய இலக்கியத்தில் முக்கியத்துவம் பெறும் ஒப்பாரியானது, அதனைப் பாடும் சந்தத்தினாலே சோக உணர்ச்சி யினை ஒலித்து அடங்குவதாகும். அவ்வொப்பாரி அமைப்பினையும் சந்தத்தினையும் போற்றிப் பாடிய கதைப்பாடல் வேலப்பணிக்கர் ஒப்பாரி.

குமுழமுனை சின்ன வன்னியன், பிடிக்க முடியாதிருந்த கொம்பன் யானையைப் பிடிக்க யானைப் பணிக்கரை ஏவியபோது, அவர்கள் ஒன்றுகூடி ஆலோசித்து, வேலப்பணிக்கனை அந்த யானையைப் பிடிக்குமாறு ஏவியபோது, அவர்களில் ஒருவன் அக்காரியம் வேலப்பணிக்கனால் ஆகாது, அவன் மனைவி நாச்சன் அரியாத்தையாலேதான் முடியும் என்று கூறினான். அவ்வார்த்தை களைக் கேட்டு, கவலையோடு வீடு சென்ற வேலப்பணிக்கனிடம் நடந்தவைகளைக் கேட்டறிந்த மனைவி நாச்சன் அரியாத்தை, தான் அக்காரியத்தை வெற்றியுடன் முடித்துவருவதாகக் கணவனிடம் அநுமதி கேட்டாள். அவனோ அவளை உடனே புறப்பட அநுமதிக் காது மறுநாள் செல்லும்படி விடை கொடுத்தான். வீரவனிதை நாச்சன் அரியாத்தை மறுநாள் தெய்வங்களை வணங்கி யானை பிடிக்கத் தேவையான பொருள்களோடு குமுழமுனை பெரிய வெளியை அடைந்தபோது அங்கு கண்டல் எனும் பகுதியில் அதனைக் கண்டு இறையாசியோடு அதனை அடக்கிப் புளியமரத்தில் வார்க்கயிற்றி னாற் கட்டிவிட்டுச் சின்னவன்னியனும் யானைப்பணிக்கரும் இருந்த இடம் நாடிச் செய்தி கூறியதை அடுத்து, அவளுக்குப் பல வரிசை களும் அளிக்கப்பட்டன. அதனை அடுத்து நாச்சன் அரியாத்தை தன் வீடு திரும்புகையிலே சோர்ந்து தியங்கி மயங்கித் தள்ளாடித் தள்ளாடிச் சென்று படுத்தாள். துர்க்குறி கண்டு சின்ன வன்னியன் சமூகத்திலிருந்து அவசர அவசரமாக வீடு மீண்ட வேலப்பணிக்கன் தன் மனைவியின் அவல நிலையை — விஷத்தினால் வாய் நுரை தள்ளித் துடிக்கும் நிலையை — கண்டு அவ்வாறு அவளைக் கொல்ல முயன்றவர் யார் என்று மனையாளிடம் கேட்டும் அவளாற் கூறமுடிய வில்லை. மனைவியின் மரணத்தை நீலப்பணிக்கன் ஓலமிட்டுப் பிரலா பித்து, அவளுடன் உடன்கட்டை ஏறுகிறான். இதுவே வேலப்பணிக்கர் ஒப்பாரியின் கதைச் சுருக்கம். இக்கதையை எளிமையாகவும் சுவை யாகவும் தமிழர் பண்பாட்டிற்குப் பொருந்துமாறும் கதைப்பாடல் கொண்டு செல்கிறது.

கொம்பன் யானையைக் கண்டவர்கள் சின்ன வன்னிய னாருக்குச் செய்தி கூற, அவன் ஓலை விடுத்து யானைப் பணிக்கரை அழைத்து,



எல்லாப் பணிக்கருமாய்
இன்பமுடன் தான் நடந்து
அன்புடன் நீங்கள் சென்று - அந்த
ஆனை கட்டி வாருமென்றார் 7

வன்னியனார் கூறியதைக் கேட்டுப் பணிக்கர் ஆலோசனை செய்து

எங்களால் ஆகாது
எங்களையாளும் சின்ன வன்னியனாரே - அது
ஏழு முழயானை அல்லோ 9

அது கோபமுள்ள யானையது
எங்களை ஆளும் சின்ன வன்னியனாரே - அது
குளறுதே மாமுகில் போல் 10

என்று பயந்து வேலப்பணிக்கனாலேதான் அக்காரியம் முடியும் என்று அவர்கள் கூறியவிடத்து, அவர்களில் ஒருவன்

அதிலொருவன் நின்று கொண்டு
வேலப்பணிக்கனால் ஆகாது - வேலப்பணிக்கன்
பெண்சாதியால் ஆகு மென்றான் 12

அவ்வார்த்தைகளைக் கேட்டு வேலப்பணிக்கன் வீடு சென்று துயரத்துடன் படுத்தான். அதனைக் கண்ட அரியாத்தை நடந்ததை அறிய விரும்பிக் கணவனை விசாரித்தாள். அவனும் ஆலோசனைக் கூட்டத்தில் நடந்த விருத்தாந்தங்களை ஒழிவு மறைவின்றி விளக்கிக் கூறினான். அதனைக் கேட்டு அரியாத்தை தனக்கு விடை தருமாறு கூறித் தான் ஒரு நாளில் மீண்டு வருவதாக உறுதி கொடுத்தாள். வேலப் பணிக்கன் பல்லி சொல்வதைச் சாட்டாக வைத்து மறுநாள் போகும் படி கூறினான். அரியாத்தை மறுநாள் காலையிலே எழும்பி வீரபத் திரனை நினைத்துக் காளிக்குப் பொங்கிவிட்டு, ஏழு சுருள் வெற்றிலை யும் ஏழு எலுமிச்சங்காயும் எடுத்துக்கொண்டு, வார்க்கயிறுடன் புறப்பட்டு, கணவனிடம் விடை கேட்க, அவன் மனமின்றி பொல்லையும் கொடுத்து விடைகொடுத்தான். வீரபத்திரனைத் தஞ்சமென மானசீகமாக வணங்கிப் போகிற வழியிலே நாகப்பாம்பு ஒன்று சீறிப் படமெடுத்து நின்றது.

நாடறியேன் காடறியேன்
நாகதம்பிரானாரே - நான்
அடியாள் பெண்பேதை - எனக்கு
நற்கிருபை தாருமென்றாள் 45

பணிக்கமார் எல்லோரும் - என்
ஏகபராபரனே நாகதம்பிரானாரே - அவர்
பயந்துவிட்டார் யானைகட்ட 46

பெண்பேதை கட்டவென்று - என்
ஏகபராபரனே நாகதம்பிரானாரே - நானும்
புறப்பட்டு வந்துவிட்டேன் 47

பத்தினியாள் நானாகில்
ஏகபராபரனே நாகதம்பிரானாரே - எனக்கு
நற்கிருபை தாருமென்றாள் 48

அரியாத்தை நாகதம்பிரானை தொழுதேத்த நாகம் புற்றிலே அடங்கியது. அரியாத்தை விரைந்து நடந்ததாலே, அவள் உள்ளங்கால்கள் கொப்பளித்தன. வருந்திக்கொண்டு அவள் தன்னை நோக்கி வருவதைக் கண்ட யானை மும்மதமும் பொழிந்து, துதிக்கையை மடித்து, குளறிக்கொண்டு, அடிப்பதற்கு அரியாத்தை முன்பு வந்தது. அவள் தட்டுத்தடுமாறிப் படுமரத்தோடு ஏகிநின்றாள். காலாலே மண்ணை அள்ளி வீரபத்திரனே, முருகா உன் தஞ்சம் என்று அதனை முன்னே போட்டு

கற்புடையாள் நான் ஆகில்
ஆனையடி ஆனையடி
ஆனைமறிகாறன் மகள்
ஆனைமயில் வாகனமே - உன்
கையைத்தான் நீட்டுமென்றாள் 55

அந்த மொழி கேட்டவுடன் யானை தன் கையை நீட்டியது. வேலப்பணிக்கர் பெண்சாதி யானையின் முன்பு பொல்லைப் போட்டாள். அது அப்பொல்லை எடுத்து அரியாத்தை கையில் கொடுத்தது. அரியாத்தை

உன் காலைத்தா தா கந்தா
ஆனையடி ஆனையடி
ஆனைமறிகாறன் மகள்
ஆனை மயில் வாகனமே - நானும்
கனத்த வடம் போட்டு இறுக்க 61

என்று கேட்க, யானை

முன்னங்கால் தான் கிளப்பி
வேலப்பணிக்கன் பெண்சாதி



நாச்சன் அரியாத்தைக்கு
முடுக்கிட்டு நின்றதுவே 62

அதைக் கண்டு அரியாத்தை யானையை வார்க்கயிறு போட்டிறுக்கி

முன்னங்கால் முடக்கு கந்தா
ஆனையடி ஆனையடி
ஆனைமதயா னையடி
ஆனைமறிகாறன் மகள்
ஆனைமயில் வாகனமே
நானடியாள் பெண்பேதை - உன்
குப்பத்தில் பாய்ந்தேற 64

என்று கூற, யானை முழங்காலை மடித்துக் கொடுக்க, அரியாத்தை யானைக் கொம்பினைத் தருமாறு வேண்ட, அவ்வாறே யானை குனிந்து கொடுத்தது. அரியாத்தை அதனைப் பிடித்துக்கொண்டு யானையின் கும்பத்தில் ஏறினாள். பின்னர் யானையின் செவியைத் துறட்டி போட்டு இறுக்கத் தரும்படி கேட்க அதுவும் அவ்வாறே செய்தது. அரியாத்தை யானையிடம் யானைமறிகாரர் வழி பார்த்து நிற்பதால் விரைந்து போகும்படி கேட்டுக்கொண்டாள்.

துறட்டிதனைப் போட்டிறுக்க
ஆனைமத யானையது அரியாத்தைக்கு
அபயமெனக் குளறியதே 71

யானை குளறிய சத்தம் சின்ன வன்னியனார் பெண்சாதி இருந்த அரண்மனைக்குக் கேட்டது. அவள் அரியாத்தை யானை கட்டி வரும் கதையை ஆச்சரியமாய் அறிந்து வன்னியனாரிடம் அரியாத்தைக்கு வேண்டும் வரிசைகள் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டாள். அரியாத்தை

ஆத்தி மரத்துடனே
வேலப்பணிக்கன் பெண்சாதி - அந்த
யானைதனைக் கட்டி வைத்தாள் 79

யானையைக் கட்டிவிட்டு வந்த அரியாத்தைக்குச் சின்ன வன்னியனார் பெண்சாதி கதிரை போட்டு, வெள்ளை விரித்து, மேலாப்புப் போடுவித்து, பெட்டகத்தைத் திறந்து பட்டு அளித்து, ஆபரணம் போட்டு, சிலம்புமிட்டு வெள்ளித் தட்டிலே வெற்றிலை பாக்குகளும் கொடுத்தாள்.

பதினெட்டு வரிசைகளும்
எங்களையாளும் சின்னவன்னியனார் பெண்சாதி
நாச்சன் அரியாத்தைக்குப்
பாங்குடனே அசை கொடுத்தாள் 95

அப்பொழுது பல்லி சகுனம் சரியாக இல்லை. அரியாத்தையை வீடு போய்வாரும் எனச் சின்ன வன்னியனார் பெண்சாதி விடை கொடுத்தாள். அப்பொழுது அரியாத்தை எழும்பி தன் கணவனை நோக்கி

ஆனைகட்டி நிற்குது காண்
என் நயிந்தை ஆண்டவனே - அதை
அவிழ்த்துநீர் கொடுத்து விடும் 101

வீட்டேநான் போறேன் காண்
என்நயிந்தை ஆண்டவனே - நீரும்
விரைவாக வந்துவிடும் 102

என்று கூறிவிட்டு அரியாத்தை விரைவாக வீடு நோக்கி நடந்தாள். அப்பொழுது நடுவழியிலே கால்கள் சோர்ந்து, கண் மயங்கி, வாய் வறண்டு, நடக்க முடியாமல் தள்ளாடித் தள்ளாடி வீடு போய்ப் படுத்தாள். அப்பொழுது

என் காயம் முடியுமுன்னே
என் கண்ணாளா காதலனே
என்நயிந்தை ஆண்டவனே - நீரும்
கடுகிவந்து காணாயோ 117

என்பது முதலாக நாச்சன் அரியாத்தை சில கண்ணிகளிலே ஒப்பாரி வைத்து அழுகிறாள். அக்காலை வேலப்பணிக்கன் கெட்ட சகுனம் கண்டு சின்ன வன்னியனாரிடம் விடைபெற்று வீடு மீள்கிறான்.

என்கண்ணில் முளிக்கவென்றோ
என்நயிந்தை ஆண்டவனே
கண்ணாளா காதலனே - நீரும்
கண்ணெதிரே வந்தீரோ 135

என்பது முதல் மீண்டும் சில கண்ணிகளிற் புலம்பித் தான் ஆத்தி மரத்தில் யானை கட்டி வைத்ததைக் கூறி, அதனை அவர் அவிழ்த்து விட்டாரோ அல்லது யாரையும் அவிழ்க்கச் சொல்லி வந்தாரோ என்று கேட்டாள்.

யானை அவிழ்க்கவில்லை
என்னுயிரே கண்மனியே
எனக்கிணங்கும் நாயகியே - எனக்கு
அங்கமெல்லாம் பதைபதைத்து 143

மீண்டும் வருவேன் என்று
என்னுயிரே கண்மணியே



எனக்கிணங்கும் நாயகியே - நானும்
விளம்பி வந்தேன் வன்னியற்கு 144

என்று பதில் கூறி, அவளுக்கு என்ன வருத்தம் என்று உள்ளபடி சொல்லும்படி கேட்டான். அரியாத்தை

எனக்கு வருத்தமென்ன
என் நயிந்தை - அது
இன்னதென்று சொல்லறியேன் 146

என்று சொல்லிவிட்டு, கட்டோடு நிற்கும் யானை இறந்தால் தனக்குக் கன பாவம் வந்துவிடும். அதனாலே தன்னைப்போற் கற்புடைய ஒருத்தி ஏழு சுருள் வெற்றிலை எடுத்துக் கைப்பிடித்து, கும்பிட்டுத் தெண்டனிட்டு யானை முன்பு நின்றால், அது அவிழ்க்கக் கால் கொடுக்கும். ஆனால் கட்டை அவிழ்த்தாலும் அது தன்னைவிட வேறொருவரிடமும் இருந்து தண்ணீர் குடியாது. நான் இறப்ப தல்லால் வேறு நடக்காது என்று உரைத்தாள். அது கேட்டு வேலப்பணிக்கன்

முந்திவந்த பூ எனக்கு
நான் எடுத்து நான் அணைத்து
நான் பூசும் சந்தனமே - அது
பேய் வாங்கிக் கொண்டிடுமே 162

என்று இரங்குகிறான். அரியாத்தை கணவனின் வலது தொடையில் விரும்பிக் கிடந்து உயிர் விட்டாள்.

வாயால் நுரைதள்ளிடவே
வேலப்பணிக்கர் பெண்சாதி
அரியாத்தையுடைய வாணாள் மடியுமுன்னே - வேலப்பணிக்கர்
மண்மேல் விழுந்தழுதார் 168

யானை கட்டப் போன இடத்திலே ஐயம் காச்சி பட்டதுவோ? பேய்தான் பிடித்ததுவோ? பெல்லிப் பேய் ஏவிவிட்டினமோ? எனப் பலவாறு ஐயுற்று,

உன்னையுமே கொண்டவனார்
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே - நானும்
உடனே அறிந்தேனென்றால் 178

உன்னுடனே கொண்டுவந்து
எனக்குற்ற துணைவியரே
வெற்றி மனைவியரே - நானும்
உடனே வதைத்திடுவேன் 179

என்று சூள் உரைக்கிறார். 'கொண்டவனார்' என்பது 'கொன்றவன் யார்?' என்பதன் பேச்சு வடிவம். நாச்சன் அரியாத்தைக்கு நஞ்சூட்டப்பட்டிருக்கிறது என்ற எண்ணம் அவள் வாய் நுரை தள்ளி இறந்ததிலிருந்து ஐயுறவாக இருந்தது. வேலப்பணிக்கர் மனைவியை நோக்கி "உன்னைக் கொன்றவன் யார்?" என்றபோது அவ்வையம் உறுதியாகின்றது. நாச்சன் அரியாத்தை ஏன் கொல்லப்பட்டாள்?

யானைப்பணிக்கராற் பிடித்துக் கட்டமுடியாத மதங்கொண்ட கொம்பன் யானையை அவள் கட்டிவிட்டாள் என்ற பொறாமையால் அவள் கொல்லப்பட்டாள் என்று துணியவேண்டியுள்ளது. வன்னி நாட்டிலே வன்னியரிடையே எத்தனையோ வீர வனிதைகள் தம் வீரத்தை நிலைநாட்டியிருக்கிறார்கள். காலனித்துவ ஐரோப்பியரை எதிர்த்து நின்று வஞ்சகமாகப் பிடிபட்டும் அவர்களிடம் பிடிபடக்கூடாது என்று நஞ்சருந்தியும் உயிர்நீத்த வன்னிச்சிமார் கதைகளும் கோயில்களும் நிலவும் நாட்டிலே நாச்சன் அரியாத்தை மீது வஞ்சம் தீர்க்க முற்பட்டமை ஆச்சரியத்தை விளைவிக்கின்றது.

நாச்சன் அரியாத்தையின் வீரம் சோகத்திலே முடிவடைகின்றது.

நானு மிறப்பதல்லால்
என்நயிந்தை ஆண்டவனே - நானும்
மிருப்பதொரு நாளுமில்லை 156

என்று கணவனை நோக்கிக் கூறும் அரியாத்தை

அடியாள் இறந்தாளென்று
என்நயிந்தை ஆண்டவனே - நீரும்
அருந்துயரம் கொள்ளாதீர் 158

என்று ஆறுதல் கூறியபோது

முந்திவந்த பூ எனக்கு
நான் எடுத்து நான் அணைத்து
நான் பூசும் சந்தனமே - அது
பேய் வாங்கிக் கொண்டிடுமே 167

என்று வேலப்பணிக்கன் ஆற்றாது அரற்றுகிறான். அரியாத்தை வாணாள் முடியுமுன்பே வேலப்பணிக்கன் மண்மேல் வீழ்ந்து ஒப்பாரி வைக்கிறான். அவனைக் கட்டிப்போட்டுவிட்டு அரியாத்தையைப் பாடையிலே வைத்து எரிக்கக் கொண்டு செல்கின்றனர். வேலப்பணிக்கன் கைக்கட்டுகள் தெறித்தன. அவன் அரியாத்தை மையத்தை அடுத்துத் தனக்குக் கைகொடுக்கும்படி கேட்கிறான்.

செத்த பிணந்தான் எழும்பி
வேலப்பணிக்கர் பெண்சாதி - அவ
திட்டமாய்க் கை கொடுத்தார் 199
செத்து மடிந்தார்கள்



வேலப்பணிக்கரும் பெண்சாதியும் - அவ
சிவலோகம் சேர்ந்தார்கள் 200

பரமசிவன் பதியில்
வேலப்பணிக்கரும் பெண்சாதியும் - அவ
பாங்குடனே போய்ச் சேர்ந்தார்கள் 201



அடிக்குறிப்புகள்


1. S. Arasaratnam, The Vanniyar of North Ceylon: A Study of Feudal Power and Central Authority, 1660 - 1760. *The Ceylon Journal of Historical & Social Studies*. Vol.9.2, July - Dec.1966, pp.102-103


2. M.D.Raghavan, *India in Ceylonese History, Society & Culture,* 1964, pp.138 - 139.

# இலங்கையில் தமிழர்

## ஓர் இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு,

### பொது ஆண்டிற்கு முன் (கி.மு) 300 முதல் பொது ஆண்டு (கி.பி) 1200 வரை!

பேராசிரியர் இந்திரபாலா அவர்களின் நூல் அறிமுகம்! –பராசக்தி சுந்தரலிங்கம்




**வ**ரலாற்றாசிரியர் ஒருவர் ஒரு நாட்டின் தற்கால வரலாற்றை எழுதுவதற்கும் அதன் புராதனகால வரலாற்றை எழுதுவதற்கும் அதிக வேறுபாடு உள்ளது. அச்சுயந்திரம், தொழில் நுட்பப் பயன்பாட்டினால் வரலாறு, மற்றும் செய்திகள், இன்று முறையாக ஆவணப்படுத்தப்படு கின்றன. ஆனால், ஓட்டுச் சுவடி களையும் புராணக் கதைகளையும் செவிவழிச் செய்திகளையும் ஓரளவு கிடைத்த சாசனங்களையுமே ஆராய்ந்து பூர்வீக வரலாற்றை எழுதியவர்கள் பல சவால்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

இன்றைய நவீன உலகில் அகழ்வாரர்ய்ச்சி, சாசனவியல் ஆகிய வற்றில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி காரணமாக, புராதன வரலாறு பற்றிய புதிய கண்டுபிடிப்புகள், விஞ்ஞான நோக்கில் ஆராயப்படுகின்றன. ஏற்கனவே எழுதப்பட்ட சரித்திரத்திற்கு ஆதரவாக அல்லது முரணாக பல செய்திகள் புதியனவாக வருகின்றன.

இருபதாம் நூற்றாண்டின் பிற்கூறில, இலங்கையிலும் தென்னிந்தியா விலும் நடைபெற்ற (இன்றும் தொடரும்) அகழ்வாராய்ச்சியின் பயனாகவும், சாசனவியல் பற்றிய புதிய அணுகுமுறையினாலும், வரலாறு பற்றிய பார்வையும் மாற்றமடைந்து வருகிறது. இந்த வகையில், பேராசிரியர் இந்திரபாலா, கி.மு. 300ம் ஆண்டு முதல் கி. பி. 1200 வரையிலான, இலங்கைத் தமிழ் மக்களின் வரலாற்றை, புதிய பல வரலாற்றுச் சான்றுகளுடன், 'இலங்கையில் தமிழர் - ஓர் இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு, பொது ஆண்டிற்கு முன் (கி.மு) 300 முதல் பொது ஆண்டு (கி.பி) 1200 வரை' என்னும் தமது புதிய நூலிலே ஆராய்கிறார்.

1965ம் ஆண்டிலே, இவ்வாசிரியர் இலங்கைத் தமிழ் மக்களின் பூர்வீக வரலாற்றை ஆராய்ந்து எழுதிய பின்னர், கடந்த நாற்பது ஆண்டு கால ஆராய்ச்சியின் பயனாகக் கிடைத்த பல புதிய தரவுகளை வைத்து, தனது முந்திய முடிவுகள் பலவற்றை மீளாய்வு செய்கிறார். புராதன காலம் முதல் கி.பி. 1200 வரை இலங்கையில் தமிழ் மக்கள் எப்படி ஒரு தனி இனமாக வளர்ச்சியடைந்தனர் என்பதை விளக்கும் ஆசிரியர், அக்காலப் பகுதியில், தமிழ் சிங்கள மக்களின் வரலாறு ஒன்றோடொன்று பிரிக்க முடியாதபடி இணைந்து காணப்படுவதால், சிங்கள மக்களும் எப்படி ஒரு தனி இனமாக வளர்ச்சியடைந்தனர் என்பதையும் விளக்குவது தவிர்க்க முடியாததாகிறது.

இலங்கையின் பூர்வீக குடிகள் தமிழ் மக்களா அல்லது சிங்கள மக்களா என்ற கேள்வி எழுந்துள்ள நெருக்கடியான ஒரு கால கட்டத்தில் வந்துள்ள இவ்வாராய்ச்சி நூல் பல சரித்திர உண்மைகளை விளக்குவதன் மூலம் தமிழ், சிங்கள மக்களின் வரலாற்றை விளங்கிக் கொள்ள ஆதாரமாகிறது.

இங்கு கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களின் ஒருசில கவிதை வரிகள் பொருந்தி வருவதைக் காணலாம்:

அனைத்தையும் மனதிருந்து அழித்து
எழுதுவோம் புதிய கவிதை

அம்மா!
பார்க்க மறுக்கிறாய்
நான் நிற்கவா? போகவா?
போவெனச் சொல்லில்
என் முதுசக்காணியின்
பிள்ளைப்பங்கைத் தா
போய் விடுகிறேன்.

நன்றி - பதிவுகள்.com


# The Evolution of an Ethnic Identity
## The Tamils of Sri Lanka C300 BCE to 1200 CE
### -by Dr. K. Indrapala

*"What I have stated is what was already there, what some respected scholars have said, what many have forgotten, what some have chosen to ignore." - Dr. K. Indrapala*

The latter part of the 20th century saw how modern archeological techniques and methods have changed and are changing the course of History. As more and more archeological evidences are unearthed, the story of man continues to be reconstructed. After many years of dedicated research, Prof. Indrapala reviews many of his earlier findings in the light of new discoveries in archeology, epigraphy and numismatics in Sri Lanka and South India, in his book - The Evolution of an Ethnic Identity, The Tamils of Sri Lanka C 300 BCE to 1200 CE. He says:

In times of human conflict, whether communal, national or international, History together with its sister discipline of Archeology is always among the first casualities.

The importance of this statement is felt, when he quotes the latest report (February, 2005) of an archeological find, an urn, with writing in a very rudimentary Tamil - Brahmi Script - belonging to 500 BC, unearthed at Adichchanallur in the Thirunelvely District in South India. (A report that reached him after his work had been handed over to the publishers). "As long as excavation work remains undone, much that is relevent to our study, will be wanting", were his words in his thesis published forty years ago in 1965. He continues to reiterate this in this book, "The thesis was completed in the early 60s. Needless to say that dissertation is now completely out of date."




Dr. Indrapala's dedicated research during these forty odd years throws light on many issues of the country's past history, some hitherto misconstrued - to quote his words:

Book review by
**Parasakthi Suntharalingam**



This book is concerned with the Tamils who lived in Sri Lanka in the early centuries of its history and with the evolution of an ethnic community speaking the Tamil language in the Northern, North Western and Eastern regions of the island, whose descendents in modern times perceive themselves as an ethnic identity that is different from the Tamils of South India, as well as other groups in Sri Lanka.


He continues,... Historians have tended to base their writings on the assumption that the people of the Island at the dawn of history were Sinhalese and that at a later time; the Tamils and other communities came to share the country. Sri Lankan historiography of the 19th and the early 20th century is responsible for this over simplification of the ancient history of Sri Lanka.

Further the historian in him says: My aim here is to explore the past in order to understand how the Tamils of Sri Lanka (as well as the Sinhalese) came to be what they are. Their political claims that led to the current conflict are to be judged in terms of accepted universal Human Rights and not in terms of their past in the Island. The deeper one delves into Sri Lankan history, the more will one find how much the Tamils and Sinhalese have shared history and culture and common descent................

.............. This book is written for the purpose of drawing attention to some of the important aspects of Sri Lanka's past. It is written for the Sri Lankan audience, and for this reason detailed notes and quotations have been included, as articles in International Journals as well as foreign publications are not easily accessible to the average reader......

He rejects the colonial historical writings that identified the Sinhalese with the Aryans and the Tamils with the Dravidians, and thereby nullifies the 'purity' of races.

It is fascinating how the eight chapters in the book are titled - from ancient times to 1200 AD - showing the birth, growth, and development of the two ethnic groups.




1. The Common Gene Pool
2. Conception and Birth
3. Imaginary Ancestors
4. Two Little Siblings
5. Growing up
6. Emerging Personalities
7. Reaching Adulthood
8. The Joint Achievers

According to the above chapters, the Tamils and Sinhalese have descended from common ancestors and through a process of language replacement (a theory popularized by archeologist Renfrew) the 'North Indian Prakrit dialects spread among the vast majority of the people paving the way for the evolution of the Sinhala language, while Tamil became the language of the North, North West, and East of the Island leading to the emergence of Sri Lankan Tamil.' Both could not have happened simultaneously - Tamil is an ancient language with a rich literature by the time the North Indian Prakrit dialects spread in the country. Therefore it is the older of the two - this should have been emphasised.

The last chapter aptly titled 'Joint Achievers' clears many a historical misconception. The author proves the harmonious relationship that existed between the Tamils and the Sinhalese during the Polannaruwa Period (11th and 12th century) when they jointly achieved great heights in architecture, sculpture, hydraulic engineering, trade, literature, and the fine arts. According to him, "The reign of Vijayabahu ushered in a period of remarkable partnership between the Sinhalese and the Tamils. And there is no room for interpreting the war against the Colas as a Sinhalese - Tamil conflict."

It is interesting to read about the very close relations that had existed between Tamil Buddhism and Sinhalese Buddhism from very early times and the benevolent religious policy of the Cola Emperors for the Tamil contribution of Buddhism in the Island. There is evidence to show that Tamil was taught at all the Pirivinas and Buddhist monks were very well versed in both Tamil and Sinhala. The author continues to explain how at a much later period when





Saivaism became the religion of the Tamils and Buddhism of the Sinhalese, religion, in addition to language, became a marker of ethnic identity.

While tracing the growth of the two ethnic groups he concludes,

A complete bifurcation of the Island into Tamil speaking and Sinhala speaking areas would have taken place only after 1200, especially with the fall of Polannaruwa and the establishment of a new centre of Sinhalese power in the South West...

In this book, the narration of the historical development leading to the emergence of two separate ethnic identities ends in 1200. But the story does not end there - the dawn of the 13th century marks the beginning of the political separation of the two groups.

'The manner in which history is being "used" in fighting contemporary issues is a matter for concern', is this historian's regret.

He quotes historian Hobsbawn,


It is very important for historians to remember their resposibility, which is above all to stand aside from the passions of identity politics even if we feel them also - after all we are human beings too...

It would be appropriate to quote the author's words at the concluding passage of the book.

Anyone turning such a fascinating story of ethnic interaction in a hospitable Island with an exceptionally long record of human habitation into a woeful tale of communal conflict and confrontation is surely misinterpreting history for whatever purposes it be.

Prof. Indrapala's book has come at a critical period in the history of Sri Lanka, when the two ethnic groups are at the 'parting of ways'. Is it A HARBINGER OF PEACE or has it arrived rather late?

*Thanks to Pathivukal.com, Puthinam.com*




(3)

# பயனற்றவை

அரும்பசிக்கு உதவா அன்னம்
ஆபத்திற்கு உதவாப் பிள்ளை
தாகத்தைத் தீராத் தண்ணீர்
பாபத்தைப் போக்காத் தீர்த்தம்
தரித்திரமறியாப் பெண்டிர்
கோபத்தை அடக்கா வேந்தன்
குருமொழி கேளாச் சீடன்
பயனிலை ஏழும்தானே

–ராணி தங்கராசா







# தமிழ்க் கையேடு 2008
(5 வது வெளியீடு)

## Tamil Guide 2008
(5th Issue of the Tamil Guide)

For all Tamil Community information and business advertisements

**Closing date for entries: 27/10/07**

## For TAMILS By TAMILS

*To be Published in early 2008*
*by Kalappai Publications (ASoGT) and AMAF*

***All Profits go to projects of the Australian Medical Aid Foundation (AMAF)***

மேலதிக விபரங்கள்:
Contact: (02) 9642 4860 or (02) 9758 7970 or 0417 277 862
Email: kalappai@gmail.com
Web: www.kalappai.org

அவுஸ்திரேலிய மருத்துவ உதவி நிதியம்

Australian Medical Aid Foundation Inc (AMAF)

Presents

# Muththamil Maalai - 7

# முத்தமிழ் மாலை - 7

## Mega Music Show

by

'Maestro' 'Visharadh'

## Sarangan Sriranganathan

Venue:

Ian & Nancy Turbott Auditorium

Rydalmere Campus

University of Western Sydney

Time:

6.00pm, Saturday, 8 December 2007

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

Contact: 9642 4860 or 0417 277 862

Made by : MITHRA, Chennai - 24, email: mithrabooks@gmail.com